பக்கங்கள்
24

# புதுவிதி
PUTHU VITHI

விலை
20/=

புதுமை : 01 08 ஏப்ரல் 2017 விதி : 43



மீண்டும் கேட்கவேண்டும் யாழ் ஒலி




'9ஏ' அடை மழைக்கு என்ன காரணம்?



பந்து



இயக்கங்கள் இடையே முரண்பாடு



## கடவுளரை கைவிட்ட நகரம்


'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்கதை

# ஆறாவடு

42



**சயந்தன்**

**சட்** என்று பிரேக் அடித்தவள் சுதாகரித்து இறங்கிக் கொண்டாள். அவளுக்கு முன்னால் இளைஞன் ஒருவன் சைக்கிளை நிறுத்தி கால்களால் ஊன்றியபடி நின்று தலையைச் சரித்துப் பற்கள் முழுதும் தெரியத்தக்கதாகச் சிரித்தான். பிறகு “என்ன உள்ளுக்கை ஒண்டும் போடேல்லையோ ... கையில தட்டுப்படேயில்ல” என்றான்.

அகிலா “பரதேசி” என்று முனுமுணுத்துக் கொண்டாள். அவன் கொஞ்ச நாள்களாக இப்படிப் பின் தொடர்ந்து வருகின்றான். இரண்டொரு மாதங்களுக்கு முன்னர் அவளை சைக்கிளில் முந்திய அவன், இரண்டு கைகளையும் ஹாண்டிலில் இருந்து தூக்கி சாகசம் செய்பவனைப்போல விரித்து “எப்பிடி சுகமாயிருக்கிறீங்களா?” என்று கேட்ட போதே அகிலாவுக்கு அறிமுகமாயிருந்தான். “ மூதேசி, பிரண்டு விழப் போகுது” என்று அப்போது தோன்றியது. மேலும் அவனைக் குறித்து அலட்டிக் கொள்ளவில்லை. காலையில் அவனைக் காணும் போது மட்டும் “ மைனர் டியூட்டிக்கு வந்திட்டார்” என்று சிரித்துக் கொள்வாள். நெருங்கிய நண்பிகளுக்கு மைனரைப் பற்றி சொல்லியுமிருந்தாள்.

இன்னொரு நாள் நான்காக மடிக்கப்பட்ட வெள்ளை நிறக் காகிதமொன்றை ஹரியரில் சொருகிவிட்டு “ படிச்சுப் பார்த்து நல்ல பதில் தாங்க” என்று அவன் சொன்னான். அதனை அவனுக்கு முன்னாலேயே கிழித்துப் போட்டால் என்ன என்று தோன்றிற்று. அந்தயும் மீறி அப்படி என்னதான் எழுதியிருக்கிறான் என்று அறிகிற ஆர்வக் குறுகுறுப்பும் உள்ளே ஓடிற்று. பார்க்கிங்கில் சைக்கிளை நிறுத்திவிட்டு வரும் இடைவெளி நேரத்தில் கடிதத்தை எடுத்துப் படித்தாள்.அவளையும் அறியாமல் சிரிப்பு உண்டாகியது.

கடிதத்தின் ஓரத்தில் இரண்டு இதயங்களை ஓர் அம்பு குத்திக் கிழித்திருந்தது. இதயங்கள் பூவரசம் இலையை ஒத்தனவாக இருந்தன. ஒரு இதயத்திலிருந்து இரத்தம் வடிவது போல சிவப்பு நிறப் பேனாவினால் வரைந்திருந்தான். மற்றைய பூவரசம் இலையின் நடுவில் கேள்விக் குறிகள் இடப்பட்டிருந்தன. நிறைய வண்ணப் பேனாக்களைக் கொண்டு கடிதம் எழுதப் பட்டிருந்தது. “உனது பெயர் எனக்குத் தெரியவில்லை, உனது ஊர் எனக்குத் தெரியவில்லை, இருந்தாலும் எனக்குப் புரியவில்லை” என்று ஆரம்பித்து என்னவெல்லாமோ எழுதியிருந்தான். இறுதியில் “வாழ்ந்தால் உன்னோடு தான் இல்லையேல் மண்ணோடுதான்” பதிலுக்கு ஏங்கும் மணிவண்ணன் என்று முடித்திருந்தான்.

அப்படியொரு கடிதம் கிடைத்ததில் பெயரிடமுடியாத ஆர்வம் ஒன்றை அகிலாவால் உணர முடிந்தது. ஆனால் அவனில் தனக்கொரு காதலும் இல்லையென்று தோன்றிற்று. அன்று மாலை சைக்கிள் கடையொன்றில் அகிலாவின் வருகைக்காக காத்திருந்த மணிவண்ணன் அவளைப் பின்தொடர்ந்தான். அவளுக்கு சமாந்திரமாக வந்து “எனக்கு நீங்கள் பதில் சொல்லேல்ல” என்றான். அப்படி அவன் அருகாக வருவதை அவள் விரும்பவில்லை. தெருவில் சென்றவர்கள் அவர்களைப் பார்த்தபடி போனார்கள். அப்பாவுக்குத் தெரிந்தால் வீணான பிரச்சினைகள் வருமெனத் தோன்றியது.

“ எனக்கு அப்படியொரு ஐடியாவும் இல்லை” என்று வெடுக்கெனச் சொல்லி விட்டு சைக்கிளில் அவனை முந்தினாள். அவன் பேச வார்த்தைகள் அற்றவனாக சைக்கிளை மெதுவாக்கினான். முகத்தில் ஏமாற்றம் இருண்ட மேகத்தைப் போல் படரத் தொடங்கியது.

மணிவண்ணன் அடுத்த நாளும் வந்தான். “ஒவ்வொரு நாளும் நாயைப் போல உங்களுக்குப் பின்னாலேயே வாறனே, கொஞ்சமெண்டாலும் யோசிக்க மாட்டிடீங்களா” என்று இரண்டொருமுறை கெஞ்சிப் பார்த்தான். ஒருநாள் அருகாக சைக்கிளை ஓடியபடி அகிலாவின் ஹாண்டிலில் கை வைத்தான். அவள் சட்டென்று பிரேக் அடித்து அவனை எரித்து விடுவது போலப் பார்த்த போது “ ஏன் எங்களை பார்த்தால் ஆம்பிளையளாத் தெரியேல்லையோ” என்று அவன் கேட்டான். அதற்குப் பிறகு அவனது நடவடிக்கைகள் மோசமானதாக மாறியிருந்தன. காதுகளைக் கூசச் செய்கிற மாதிரி அவன் பேசத் தொடங்கினான். முதுகில் அடித்துத் தடவுகிற வரைக்கும் முன்னேறியிருந்தான்.

அப்பொழுதே அகிலாவுக்கு அரசியற்துறையினரின் நினைவு வந்தது. “இவனெல்லாம் வாயால சொன்னால் கேட்க மாட்டான்” என்று தோன்றிய போது சைக்கிளை பணியகத்துக்குத் திருப்பினாள். பல்கலைக்கழகத்திலிருந்து கொஞ்சம் தொலைவில் அது இருந்தது. அமுதன் அங்கிருந்தான். ஒன்றிரண்டு தடவைகள் அகிலா வந்து போயிருந்த இடமாயினும் அன்று தயக்கமாயிருந்தது. தோழிகள் அற்று தனியே வந்திருக்கிறாள். முற்றத்தில் வைக்கப்பட்டிருந்த கதிரைகளில் நாலைந்து பேர் காத்திருந்தார்கள். அவற்றிலொன்றில் அமர்ந்தாள். உள்ளே தொலைபேசி மணி அடிக்கிற சத்தங்களும், வோக்கி இரைந்து இரைந்து பேசுகிற சத்தங்களும் கேட்டபடியிருந்தன.

அமுதன் அகிலாவைக் கண்டு உள்ளே அழைத்தான். எழுந்து போனாள். “என்ன மாதிரி செயற்பாடுகள்” என்று அவன் கேட்டான்.

“ ஒரு பிரச்சினை.”

“ சொல்லுங்கோ.”

அகிலா அந்த இளைஞன் கடிதம் தந்தது முதல் காலை முதுகில் அடித்தது வரை மிச்சம் வைக்காமல் சொல்லி முடித்தாள். “உள்ளுக்கை ஒன்றும் போடேல்லையோ... கைகளில் தட்டுப் படவில்லை” என்று கேட்டதைச் சொல்ல கூச்சமாயிருந்தது. தவிர்த்துக் கொண்டாள். அவள் சொல்லத் தொடங்கிய போது அமுதன் தன் கைகளிலிருந்த பேனாவால் வெற்றுத்தாளில் ஒருசில கோடுகள் வரைந்தபடியிருந்தான். முடித்த போது தாள் குறுக்கும் நெடுக்குமான அழுத்தமான கோடுகளால் நிரம்பியிருந்தது. பிறகு இப்படிச் சொன்னான். “ இந்த நாட்டில ஒரு விடுதலைப் போர் நடக்குது என்ற ஒரு யோசனையும் இல்லாமல் சிலதுகள் திரியுதுகள். நாளைக்கு நாங்கள் விடுதலையைப் பெற்று சனங்களிடம் கொடுத்தால், இந்த மாதிரியான ஆள்களால் எல்லாம் கெட்டு நாறிப் போயிடும். நீங்கள் யோசிக்க வேண்டாம். ஆளை மட்டும் அடையாளம் காட்டுங்கோ. அவர் பிறகு உங்கடை பக்கம் தலைவைத்தும் படுக்காதபடிக்கு நாங்கள் செய்யிறம்.”

அகிலாவுக்கு மனசு இலேசியிருந்ததுபோல உணர்ந்தாள்.

ஒன்றிரண்டு வாரங்கள் கடந்து விட்டிருந்தன. பல்கலைக் கழக மாணவர்கள் பெரிய எழுச்சி நிகழ்வொன்றுக்குத் திட்டமிட்டிருந்தார்கள். அகிலா அடிக்கடி சந்திப்புகள் என்று திரிந்தாள். ஐந்தாறு நாள் களாகப் பின்னால் தொடர்கிற மணிவண்ணனைக் காணவில்லை. என்னவோ முறையாகக் கொடுத்திருக்கிறார்கள் என்று மட்டும் புரிந்தது. அமுதனுக்கு நன்றி சொல்லவேண்டுமென நினைத்தாள்.

சந்திப்பொன்றின் பிறகான நேரத்தில் அமுதனே கேட்டான். “ஆள் இப்பவும் வாறவரோ ?”

அகிலா தலையைக் குனிந்து சிரித்தாள். தனக்குள் வெட்கமென ஏதோ படரத் தொடங்குவதை அவள் உணர்ந்து கொண்ட பொழுதாக அது இருந்தது. “தாங்க்ஸ்’ என்றாள். அமுதன் சிரித்துக் கொண்டான். அப்படிச் சிரித்தபோது இரண்டு கன்னங்களிலும் குழி விழுந்ததை அகிலா கண்டாள்.

“சும்மா வெருட்டித் தானே விட்டனியள், வேறை ஒன்றும் செய்யேல்லைத் தானே...” பொய்யாக உருவாக்கிய அக்கறையோடு கேட்டாள்.

அப்படி என்ன தான் தனக்காக அவன் செய்தான் என்று அறியவேண்டுமென்கிற ஆவல் மேற் கிளம்பிற்று.

“ச்சீ .. காவல் துறையிட்டை ஆளை அனுப்பினோம்” என்றவன் சட்டென்று சிரித்து “அதிலையொரு பகிடி “ என்று நிறுத்தினான். என்ன என்பது போல அகிலா ஏறிட்டு நோக்கினாள்.

**(வலிகள் இன்னும்...)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாள்ஸ் அன்ரனி படையணி
# புலிகளின் போர் முகம்

■ தமிழரசன்

1991 ஏப்ரல் 10

யாழ்ப்பாணம் - தென்மராட்சியின் - எழுதுமட்டுவாழில் தலைவர் பிரபாகரன் முன்பாக முக்கிய தளபதிகளும் 1,500 வீரர்களும் கூடியிருக்கின்றனர். "லெப். சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி"யின் பிறப்பை அவர் அறிவிக்கிறார். அதுவரை காலமும் கரந்தடி (கெரில்லா) படையாக வலம் வந்த புலிகள் தம்மை மரபுவழி இராணுவமாக பிரகடனப்படுத்திக் கொண்டனர்.

புலிகள் தங்களுக்கென மரபுவழிப் படையணியை உருவாக்கியமை தமிழர் போரியல் வரலாற்றின் புதிய அத்தியாயம். சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி 1,200 பேர் கொண்ட தாக்குதல் அணியாகவும், 300 பேர் கொண்ட கனரக அணியாகவும் கட்டமைக்கப்பட்டிருந்தது. இதன் சிறப்புத் தளபதியாக பிரிகேடியர் பால்ராஜ், தளபதியாக லெப். கேணல் ராஜன், துணைத் தளபதியாக லெப். கேணல் ஜஸ்ரின் ஆகியோர் பொறுப்பேற்றனர்.

### பெயர்க் காரணம்

புலிகள் தமது முதல் படையணிக்கு தமது முதல் தாக்குதல் தளபதி லெப். சாள்ஸ் அன்ரனியின் பெயரையே சூட்டினர்.

லெப்.சீலன் என அழைக்கப்பட்ட லூக்காஸ் சாள்ஸ் அன்ரனி திருகோணமலையை சேர்ந்தவர். 1979 களில் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்தார். தலைவர் பிரபாகரனின் நெருங்கிய நண்பராக விளங்கிய இவரே தாக்குதல் அணிக்குப் பொறுப்பாகவும் இருந்தார்.

இவரின் வழிநடத்தலின் கீழேயே பல தாக்குதல்களை அக்காலத்தில் புலிகள் நடத்தி அவற்றில் வெற்றியும் கண்டனர்.

1983 இல் இவரும் நண்பர்களும் மறைந்திருந்த இடத்தை ஒருவன் காட்டிக்கொடுக்க அவ்விடத்தை இராணுவம் சுற்றி வளைத்தது. இதையடுத்து இராணுவத்துக்கும் புலிகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இந்த மோதலில் காயமடைந்த சாள்ஸ் அன்ரனி தன்னை சுட்டுவிட்டு இயந்திரத் துப்பாக்கியை கொண்டு செல்லுமாறு தன் நண்பர்களுக்குக் கட்டளையிட்டார். அதன்படியே அவர்களும் நடந்தனர்.

சாள்ஸ் அன்ரனியின் தியாகமும் வீரமும் தமிழ் மக்கள் மீது அவர் கொண்ட நேசிப்பும் சொல்லில் அடங்காதவை. இதனாலேயே தலைவர் பிரபாகரன் தனது முதல் தளபதியின் பெயரையே முதல் படையணிக்கும் சூட்டினார்.

### முதல் போர்க்களம்

வவுனியாவில் நிலைகொண்டிருந்த இராணுவம் ஓமந்தையையும், நெடுங்கேணி - முல்லைத்தீவு வீதியையும், மாங்குளம் - கிளிநொச்சி வீதியையும் கைப்பற்றும் முனைப்புடன் 1991 மே 5 ஆம் திகதி வன்னி விக்கிரம -02 படை நடவடிக்கையைத் தொடங்கியது.

இரண்டு டிவிசன் படைகள் நகர, அவற்றுக்கு பீரங்கிகள் பின்கள சூட்டு ஆதரவு வழங்க, வான்கலன்களும் உதவியாக தாக்குதல்களை நடத்தின. பெருமெடுப்பில் தொடங்கிய இந்தத் தாக்குதலை முறியடிக்கப் புலிகளின் சாள்ஸ் அன்ரனி படையணி களமிறக்கப்பட்டது.

சிறப்புத் தளபதி பால்ராஜ் நேரடியாகக் களத்தில் நின்று கட்டளைகளை வழங்க நெருப்பு மழையைப் பொழிந்தது சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படை. அதன் போர்க் குணத்தைத் தாங்க முடியாத இராணுவம் ஒரு வார காலத்திலேயே (12.05.1991) தனது படையெடுப்பை நிறுத்தியது.

இந்த முறியடிப்பு சமரில் ஹெலிகொப்டர் ஒன்றை சுட்டுவீழ்த்திய புலிகள், சுமார் 75 வரையிலான இராணுவத்தினரையும் கொன்றனர். 150 இற்கும் மேற்பட்டவர்களை காயப்படுத்தி களத்தில் இருந்து அகற்றினர். புலிகள் தரப்பில் 19 வீரர்கள் மாவீரர்களாகினர்.

மீண்டும் 1991 ஜூன் 15 ஆம் திகதி வன்னி விக்கிரம 3 நடவடிக்கையை இராணுவம் தொடக்கியது. இதையும் சாள்ஸ் அன்ரனி படையணி வெற்றிகரமாகத் தடுத்தது. இதிலும் தோல்வியையே இராணுவம் தழுவியது. இந்த இரு சமர்களிலும் ஏராளமான ஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றினர். இவற்றுக்கு மூல காரணமாக அமைந்தது சாள்ஸ் அன்ரனி படையணியே.

### முதல் வலிந்த தாக்குதல்

சாள்ஸ் அன்ரனியின் முதல் களம் 'வன்னி விக்கிரம 02' ஆக இருந்தாலும், வலிந்த தாக்குதல் களம் ஆனையிறவு மீதான ஆகாய கடல் வெளி சமரே அமைந்தது. இந்தத் தாக்குதலை ஏனைய படையணிகளுடன் இணைந்தே சாள்ஸ் அன்ரனி படையணியும் நடத்தியது. தாக்குதல் தோல்வியாக முடிந்தாலும் புலிகளின் மரபுவழி போர் திறனை ஆகாய கடல் வெளி சமர் மூலம் உலகம் தெரிந்து கொண்டது.

ஒப்ரேஷன் வன்னி விக்கிரம 02,03, ஒப்ரேஷன் மின்னல் (ஹயசேன), ஒப்ரேஷன் சிக்சர் (கஜபகர) ஒப்ரேஷன் சத்ஜெய, ஒப்ரேஷன் ஜெயசிக்குறு, ஒப்ரேஷன் அக்கினிகீல, ஆகாய கடல்வெளி, ஆனையிறவு பரந்தன் ஊடறுப்பு சமர், ஓயாத அலைகள் 1,2,3,4, வன்னி இறுதிச் சமர் என சாள்ஸ் அன்ரனி பங்கேற்ற போர்கள் நூற்றுக்கணக்கில் நீளும்.

### வீரர்களின் கனவுப் படையணி

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியில் எப்படியாவது இடம்பிடித்து விட வேண்டும் என ஒவ்வொரு புலிவீரனும் துடியாய் துடித்த காலமுண்டு. வீரர்கள் மட்டுமல்ல தளபதிகள்கூட சாள்ஸ் அன்ரனி படையணியை வழிநடத்த வேண்டும் எனக் கனவு கொண்டிருந்தனர் எனின் மிகையல்ல.

சண்டைப் படையணி என்றால் அது சாள்ஸ் அன்ரனி படைதான் என்ற கருத்து மக்கள் மத்தியில் நிலவியது. இதனால் சாள்ஸ் அன்ரனியின் தளபதிகள் பலரும் மக்கள் மத்தியில் புகழ் பெற்றிருந்தனர். பின்னாளில் உச்சம் பெற்ற புலிகளின் தளபதிகளான பிரிகேடியர் பால்ராஜ், பிரிகேடியர் தீபன் ஆகியோர்கூட சாள்ஸ் அன்ரனி படையணியின் சிறப்புத் தளபதிகளாக இருந்தவர்களே. இவர்கள் தவிர கேணல் கோபித், மேஜர் கிண்ணி, லெப். கேணல் வீரமணி, லெப். கேணல் ஜஸ்ரின், லெப்.கேணல் ராஜன், லெப்.கேணல் ராகவன், லெப். கேணல் ராஜசிங்கன், லெப். கேணல் சேகர், லெப்.கேணல் கில்மன், லெப். கேணல் அமுதாப் எனப் பலரும் மக்கள் ஆதரவையும் புலிகள் அமைப்புக்குள் செல்வாக்கையும் பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### கிட்டு பீரங்கிப் படைக்கு வித்திட்ட படையணி

1995 இல் யாழ்ப்பாணத்தை இழந்த புலிகள் வன்னியைத் தளமாக்கினர். இதனால் தமது பலத்தை நிலைநாட்ட முல்லைத்தீவு இராணுவத் தளத்தைக் கைப்பற்ற தலைவர் பிரபாகரன் திட்டமிட்டார். இதன்படி 1996 ஆம் ஆண்டு 'ஓயாத அலைகள் 1' தாக்குதலை புலிகள் முன்னெடுத்தனர். இதில் முன்னணிப் படையணியான சாள்ஸ் அன்ரனி படையணியும் முக்கிய பங்காற்றியது.

அச்சமயம் சாள்ஸ் அன்ரனி படையணியை லெப்.கேணல் ராகவன் வழிநடத்தினார். (இவர் பின்னாளில் சாள்ஸ் அன்ரனியின் சிறப்புத் தளபதியாக பொறுப்பேற்று 'ஓயாத அலைகள் 3' நடவடிக்கையில் வீரகாவியமானார்.) இவரின் அணியே முல்லைத்தீவில் இராணுவத்திடம் இருந்த 2 பீரங்கிகளை கைப்பற்றியது. இந்தப் பீரங்கிகளை கொண்டே "கேணல் கிட்டு பீரங்கிப் படையணி" பின்னாளில் உருவாக்கப்பட்டது.

### மக்கள் சேவையாற்றிய படை

சாள்ஸ் அன்ரனி படையணி சண்டைக்கு எனப் பெயர் எடுத்திருந்தாலும் தனக்கென அரசியல் பொறுப்பாளர், மக்கள் தொடர்பாளரையும் கொண்டிருந்தது. அத்துடன் சுனாமி தாக்கத்தின்போது மக்களுக்கு பெரும் சேவையாற்றியது. மேலும் சண்டைக்காலங்களில் மக்களுக்கு மகிழ்வளிக்க இசைநிகழ்ச்சிகள், கலைநிகழ்ச்சிகளையும் நடத்தி வந்தது. கூடவே விளையாட்டுப் போட்டிகளையும் மாணவர்களுக்கென கட்டுரை, பொது அறிவுப் போட்டிகளையும் நடத்திப் பரிசுகளை வழங்கியது.

தமிழரின் உரிமைக்காக நூற்றுக்கும் மேற்பட்ட களங்களில் பல ஆயிரக்கணக்கான இராணுவத்தை கொன்றொழித்து, 2,500 இற்கும் அதிகமான போராளிகளையும் 50 இற்கும் மேற்பட்ட தளபதிகளையும் வித்திட்ட சாள்ஸ் அன்ரனி படையணியின் பெயர் ஈழப் போரியல் வரலாற்றில் என்றென்றும் நிலைத்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தவார சமூக இணையத் தரவரிசை

## 1 வர்ணம் மாறும் சீருடை



பாடசாலை மாணவர்களுக்கான சீருடையின் நிறம் மாற்றப்படும் என்ற அறிவிப்பு பலரையும் சினம்கொள்ள வைத்துவிட்டது. எனவே பலரும் தங்களின் கருத்துக்களை சமூகவலைத் தளங்களில் தெறிக்க விட்டிருந்தனர்.

பாடசாலைக்கு வெள்ளைச் சீருடையைத் தவிர்த்து வேறுவகை சீருடையை நினைத்துக்கூடப் பார்க்கத் தயாராக இல்லை என்பதாக சிலர் பதிவுகளைப் பகிர்ந்தனர். மேலும் சிலர் வெள்ளைச் சீருடையின் முக்கியத்துவத்தையும் அதன் வரலாற்றுத் தகவல்களையும் வெள்ளைச் சீருடைக்கும் தங்களுக்குமான உறவை பதிவு செய்தனர்.

இத்திட்டத்தை முன்வைத்தவர்கள் சீருடையை காரணமாக வைத்துப் பெரும் மோசடிக்கு தயாராகின்றனர் எனவும் சாடல்கள் எழுந்தன. இந்நிலையில் பெரும்பாலானவர்கள் பாடசாலை சீருடை மாற்றப்பட வேண்டியதன் அவசியம் என்ன எனக் கேள்விகளை எழுப்பியிருந்தனர்.

## 2 தொடரும் போராட்டம்



சமூக வலைத் தளங்களில் கடந்த வாரம் அதிகமானவர்களால் ரசிக்கப்பட்ட பதிவு பல்கலைக்கழக மாணவர்களின் உணவு தவிர்ப்புப் போராட்டம்தான்.

அண்மையில் பல்கலைக்கழகத்துக்கு சொந்தமான கண்ணாடிகளை அடித்து நொறுக்கினர் எனக் குற்றஞ்சாட்டி 13 மாணவர்களுக்கு வகுப்புத் தடை வழங்கப்பட்டது.

இதை எதிர்த்து மாணவர்கள் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். முதல் நாளிலேயே 3 மாணவர்கள் மயங்கி வீழ்ந்தனர். இந்தச் செய்தி பலராலும் பகிரப்பட்டது. அத்துடன் மாணவர்களின் செயல் சரியா? தவறா? என்ற விவாதமும் எழுந்தது.

போராட்டத்தைத் தொடர்ந்து அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டதும். இந்த விடயத்தையும் வலைப்பதிபவர்கள் விவகாரமாக்கினர்.

விவாதங்களையும், விமர்சனங்களையும் வலுவாகப் பதித்த பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டம் சிலரால் கிண்டலுக்கு உள்ளானமையும் குறிப்பிடத்தக்கது.

## 3 முட்டாள் தினம்

ஏப்ரல் 01 என்றாலே யாரை ஏமாற்றலாம் என்று அலைபவர்கள் நம்மவர்கள். இவர்களின் அக்கப்போரை சமூக வலைத் தளங்களாலேயே தாங்க முடியவில்லை. அந்தளவுக்கு மற்றவர்களை முட்டாள்களாக்கும் செய்திகளை பறக்கவிட்டிருந்தனர்.

ஆனால், ஏமாற்றுத்தனங்கள் சமூகவலைத் தளங்களில் தொடரும் என்பதால் ஏமாறக்கூடாது என்று முன்னாயத்தமாகவே சமூகவலைத் தளங்களுக்கு சென்றவர்களும் உள்ளனர். அதையும் மீறி ஏமாந்து போனவர்களும் உள்ளனர்.

"ஏமாற்றியவர்கள், ஏமாந்தவர்கள் போக இன்று முட்டாள்தினம் எவராவது உங்களை ஏமாற்ற முயற்சிப்பார்கள் 'அலேர்ட்'டாக இருங்கள்" எனப் பதிவுகளை தட்டிவிட்டவர்களும் இருக்கின்றனர்.




யாரை ஏமாற்றலாம் என்று யோசித்ததாலேயே ஒட்டுமொத்த தமிழர்களும் முட்டாள்களாகவே இருக்கிறோம் என்ற உணர்வுபூர்வமான பதிவுகளும் இடம்பெறத் தவறவில்லை.

## • சுவரில் கொய்தவை •

Pirunthapan Ponrasa

ஏப்ரல் பூல் இன்று யாரை ஏமாற்றலாம் என்று யோசித்தால் ஒட்டுமொத்த தமிழர்களும் முட்டாள்களாகவே இருக்கிறோம். இதற்குள் யாரை யார் ஏமாற்றுவது...,

---

அருமைத்துரை யசீகரன்

மாணவர்கள் சிலரின் ஒழுங்கமீறல்களை நியாயப்படுத்துவதற்கு உணவு தவிர்ப்பு போராட்டம் பயன்படுத்தப்படுவது கலைப்பீட மாணவர்கள் இச்சமூகம் தொடர்பில் காட்டிவரும் பொதுமக்களுக்கு குந்தகம் விளைவிக்கக் கூடியதாகும்.

---

Duvarakan

சிக்னலில் இரண்டு நிமிடம் காத்திருக்கும் போதுதான் புரிகிறது எவ்வளவு - நேரத்தை - வீணாக்கிவிட்டோம் என்று.

---

Annss Thush-yan

கட்டின மனைவிய கைவிடாம பார்த்துக்கிறது நல்ல விஷயம் தான்.
அதுக்காக டிராபிக்கான ரோட்லயும் கைய கோர்த்துட்டு பாதைய மறைச்சுட்டு நடக்காதீங்கடா

---

Lingam Buvi updated her cover photo.

காலம் எதற்கும் பதில் சொல்ல வல்லது.
காத்திருப்போம் அதுவரை விடாமுயற்சியுடன்...!

---

சாமி சிலையை விட ஐயரின்
உடம்பிலேயே அதிக நகைகள்
#நடமாடும் - நகைகள்கடை

## இந்தவார மீம் (Meme)





ஆண்களின் தியாகத்திற்கு அளவே இல்லை!!!






மாட்டுக்காக 3 நாள் போராடின நமக்கே இந்த அடினா நாட்டுக்காக 30 வருசம் போராடின அவங்களுக்கு எவ்வளவு விழுந்திருக்கும்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 492 7470
விளம்பரம் : 021 492 7466

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

## இன்னொரு பேஸ்புக் கொலை

கடந்த வாரம் இலங்கையில் இன்னொரு பெண்ணையும் பேஸ்புக் கொலை செய்திருக்கிறது. கிழக்கிலங்கையைச் சேர்ந்த குடும்பப்பெண் ஒருவர் தூக்க மாத்திரைகளை விழுங்கி தற்கொலை செய்யும் வீடியோக் காட்சியை பேஸ்புக்கில் பதிவேற்றிவிட்டு இறந்து போயுள்ளார். அந்த வீடியோவைக் காணும் போதே நெஞ்சம் பதறுகின்றது.

குறித்த பெண் தனக்கு ஏற்பட்ட அவமானங்களால், தனது இரு தங்கைகளின் வாழ்வும் நாசமாகி விட்டதாலேயே இந்த முடிவை எடுத்ததாகக் கூறியுள்ளார். அதிலும் பேஸ்புக்கில் தன்னை அவதூறு செய்து போடப்பட்ட பதிவுகளால் மனமுடைந்ததையும் அவர் சொல்லத் தவறவில்லை. அந்தப் பெண் தனது போனில் மாத்திரைகளை விழுங்கியபடி தனது தற்கொலைக்கான வாக்குமூலத்தைச் சொல்லிக் கொண்டிருக்கையில், "அம்மா பசிக்குது" என்றபடி வரும் குழந்தையின் குரல் அந்த வீடியோவைப் பார்ப்போரின் மனதில் 'சுருக்' என தைக்கிறது. தனக்கான அவமானங்களில் இருந்து தப்பிப்பதற்கான வழியாக அவருக்கு தற்கொலை மட்டுமே தெரிந்திருக்கிறது. பேஸ்புக் மரணங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யத் தெரிந்த அந்தப் பெண்ணுக்கு தான் சாகும் தறுவாயில்கூட தன்னை நம்பியிருக்கும் குழந்தைகளைப் பற்றியும், தன் இறப்பால் அந்தக் குழந்தைகளின் எதிர்காலம் இருளப்போவதையும் கிஞ்சித்தும் சிந்திக்கவில்லை.

பெண்களை இழிவு செய்தலும், அவர்களுக்கு எதிரான அவதூறுகளை பேஸ்புக்கில் எந்தவித ஆதாரமும் இல்லாமல் பதிவிடுவதும் சர்வசாதாரணமான ஒன்றாக மாறிவிட்டது. ஒரு ஸ்மார்ட்போனும், இணைய வசதியும் இருந்துவிட்டால் போதும். யார் வேண்டுமானாலும், எத்தனை பேஸ்புக் கணக்குகளையும் ஆரம்பித்து யாரைப் பற்றியும் வசைபாட முடியும். அந்தரங்கப் படங்களைப் பதிவேற்றி ஊரெல்லாம் பகிரங்கமாக்கி, யாரை அவமானப்படுத்த நினைக்கிறார்களோ அவரை அல்லது அவர்களை வாழ்வில் தலைநிமிர்ந்து நடக்க முடியாமல் செய்ய முடியும்.

இப்படியெல்லாம் செய்வதால் வரும் பின்விளைவுகளைப் பற்றி பதிவேற்றியவர்களுக்கு எந்தக் கவலையுமில்லை. அவர்களுக்கு தேவை எப்படியாவது தனக்குப் பிடிக்காதவரை அவமானப்படுத்த வேண்டும் என்பது மட்டுமே. அதற்குப் பின்னால் நிகழப்போகும் விபரீதங்கள் பற்றி அலட்டிக் கொள்வதில்லை. அத்தோடு பேஸ்புக் போன்ற சமூக வலைத்தளங்களில் இன்னொருவரை அவதூறு செய்யும் புகைப்படங்கள், பதிவுகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை பொலிஸார் எடுப்பதுமில்லை. 'சைபர் கிரைம்' எனப்படும் இணையக் குற்றங்கள் தொடர்பில் சட்டவிதிகள் சரியானவாறு வகுக்கப்படாமையால் எந்தக் குற்றத்துக்கு என்ன வகையான நடவடிக்கை எடுப்பது எனத் தெரியாமையாலேயே இப்படி இணையக் குற்றங்கள் தொடர்பில் இலங்கையின் சட்டத்துறை யும், பொலிஸ் துறையும் அலட்சியப் போக்கை காட்டுகின்றன.

ஆனால், இத்தகைய அலட்சியங்கள் கிழக்கில் குடும்பப் பெண்ணொருவர் மரணித்ததைப் போல, உயிரிழப்புகள் வரை கொண்டுபோய் விடுகின்றன. பேஸ்புக் போன்ற சமூக வலைத்தளங்களில் அவதூறில் ஈடுபடுபவர்கள், அந்தரங்கப் புகைப்படங்களைப் பதிவிடுபவர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுக்கப்பட்டிருக்குமானால், குறித்த பெண்ணும் தனக்கான நீதியை சாவின் மூலம் தேடாமல் சட்டத்தின் மூலம் தேடியிருப்பாள். "அம்மா பசிக்குது" என்று இப்போது தாயின் புகைப்படத்தைப் பார்க்கும் குழந்தைக்குச் சோறூட்ட அந்தத் தாய் உயிரோடு இருந்திருப்பாள். சில சாவுகள் புதிய பாதைகளைத் தேட வைக்கும். இனியும் இப்படியான பேஸ்புக் சாவுகள் தொடராமல் இருக்க வேண்டுமானால், இணையக் குற்றங்கள் தொடர்பில் தெளிவான சட்டங்கள் உருவாக்கப் படவேண்டும். பொதுமக்களிடத்தே இணையக்குற்றங்கள் தொடர்பிலும், அதில் இருந்து தப்பித்தல் மற்றும் பாதிப்புக்கான முறையிடல் பற்றிய விழிப்புணர்வுகள் உருவாக்கப்பட வேண்டும். நடக்குமா இவையெல்லாம்?

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'



# வாய்திறக்காத வல்லவர்கள்

**வர்சி**

யுத்தம் முடிவடைந்த நிலையில் தமிழ்பேசும் மக்கள் தமது இருப்பிடத்திற்காக போராட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். வடக்கில் தமிழர்கள் தமது பூர்வீக நிலங்களை படையினர் ஆக்கிரமித்துள்ளதை கண்டித்தும், தமது இருப்பிடங்களில் இருந்து இராணுவத்தை வெளியேறுமாறு கோரியும் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால், இதற்கு முழுமையான தீர்வு இதுவரை கிடைக்கவில்லை. ஆயினும் மே 15 இற்கு முன்னர் சில பகுதிகள் விடுவிக்கப்படவுள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் உறுதிமொழி வழங்கியுள்ளார். எனினும் இந்த வாக்குறுதி வழமைபோல காற்றில் பறக்குமா அல்லது கொஞ்சமேனும் நிறைவேற்றப்படுமா என்பது மே 15 க்கு பின்னர்தான் தெரியும்.

தற்போது மன்னார் முசலி பிரதேசத்தில் கடந்த 26 வருடங்களுக்குப் பின்னர் மீள்குடியேற்ற நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள முஸ்லிம் மக்களுக்கும் தமது காணிகள் வில்பத்து வனப்பிரதேசத்துடன் இணைக்கப்படுவதாக வெளிவந்துள்ள ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவித்தலால் பேரதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. குறிப்பாக அப்பகுதியிலுள்ள மறிச்சுக்கட்டி, விளாத்திக்குளம், கரடிக்குழி, பாலைக்குழி ஆகிய பிரதேசங்களில் வாழ்ந்த முஸ்லிம் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இப்பிரதேசங்களில் சிதைவடைந்த பாடசாலைகள், வீடுகள் பள்ளிவாசல்கள் என்பன காணப்படுகின்றன. எனினும் பௌத்த பேரினவாதிகளின் கூச்சல்களை அடுத்து இந்தப் பகுதிகளை வில்பத்து வனப்பகுதியுடன் ஜனாதிபதி இணைத்துள்ளதாக முஸ்லிம்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையிலேயே ஜனாதிபதியின் இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கெதிராக முஸ்லிம் சமூகம் தமது எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளதுடன் முஸ்லிம் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் ஜனாதிபதியின் செயலாளர் அபயக்கோனுடன் கடந்த வெள்ளிக்கிழமை பேச்சுவார்த்தையொன்றையும் நடத்தியுள்ளனர். இதன்போது ஜனாதிபதியால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யவேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்தனர். அத்துடன் பேராதனைப் பல்கலைக்கழக புவியியல் துறைப் பேராசிரியர் நௌபல் வில்பத்து தொடர்பான ஒளிப்பட விவரணங்களையும் சமர்ப்பித்து இதன்போது விளக்கமளித்தார்.

இந்த நிலையில் வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் சில த்வறுகள் இடம்பெற்றுள்ளதை ஏற்றுக்கொண்ட செயலாளர், அவ்வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் குறித்த பிரதேசங்களை வனஜீவராசிகள் திணைக்களத்தின் கீழ் கொண்டு வருவதற்கும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவதற்கு ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்ததாகவும், எனினும் அதனை மேற்கொள்ளப்போவதில்லை எனவும் முஸ்லிம் பிரதிநிதிகளிடம் உறுதியளித்தார். வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தி பிரதேச மக்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லாத வகையிலான தீர்வை விரைவில் பெற்றுத்தருவதாகவும் செயலாளர் அவர்களிடம் உறுதிபடக் கூறியுள்ளார்.

முசலி விவகாரமும், அதற்கு உடனடியாக முஸ்லிம் அரசியல் தரப்புகள் பெற்றுக் கொண்ட தீர்வும் சில விடயங்களை எமக்கு உணர்த்துகின்றன. முஸ்லிம் மக்களுக்கு ஏதாவது பிரச்சினை என்றால் அரசில் இணைந்திருக்கும் முஸ்லிம் அமைச்சர்கள் முதற்கொண்டு புத்திஜீவிகள் வரை அனைவருமே அரசியல் பேதங்களை மறந்து ஒன்று சேர்கிறார்கள். சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பேச்சை நடத்துகிறார்கள். அதற்கான தீர்வையும் உடனடியாகவே பெற்றுக்கொள்கிறார்கள்.

தமிழ் மக்களின் காணிகளும் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. தமது ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளுக்காக மக்கள் போராடுகிறார்கள். ஆனால் முஸ்லிம் அரசியல்வாதிகளும், புத்திஜீவிகளும் செய்ததைப்போல, தமிழர் தரப்பிலுள்ள அரசியல் தலைமைகளோ அல்லது புத்திஜீவிகளோ இந்தக் காணி விடுவிப்பு தொடர்பில் ஒன்று சேர்ந்தார்களா? அல்லது அரசுக்கு ஏதாவது அழுத்தத்தை பிரயோகித்தார்களா?

அரசியல் தீர்வை மையப்படுத்தி பேச்சுக்கள் நடப்பதாகக் கூறப்படுகிறதே ஒழிய, மக்களின் அன்றாடப் பிரச்சினை தொடர்பில் எவரும் கதைப்பதாக தெரியவில்லை. மக்களுக்கான அடிப்படைப்பிரச்சினைகளைத் தீர்க்காமல் அரசியல் தீர்வு தொடர்பில் பேசி என்ன பயன்?

தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் நல்லுறவு வைத்துள்ள விடயம் பகிரங்கமானதொன்று. ஜனாதிபதி, பிரதமர் கலந்து கொள்ளும் நிகழ்வில் சம்பந்தர் கலந்து கொள்கிறார். வடக்கில் அமைச்சர்கள் கலந்து கொள்ளும் நிகழ்வில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்கின்றனர். அப்படியென்றால் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து அரசாங்கத்துடன் பேசி தீர்வொன்றை பெறுவதற்கோ அல்லது கால அவகாசத்தை கேட்பதற்கோ கூட்டமைப்பு உரிமை உண்டு. வாய்ப்புகளும் அதிகம். ஆனால் அப்படியான எந்த முயற்சியிலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஈடுபட்டதாகத் தெரியவில்லை. வலி.வடக்கில் மாவை சேனாதிராஜா 2 கோடி ரூபா செலவில் வீடு கட்டுவதாக இணையங்களில் புகைப்படங்களுடன் செய்திகள் வருகின்றன. ஆனால் அதே வலி.வடக்கைச் சேர்ந்த பல குடும்பங்கள் இன்னும் தங்கள் காணிக்குள் கால் வைக்கும் கனவுகளுடன் காத்திருக்கிறார்கள். சொகுசு வாகனங்களுக்காகவும், தங்கள் சுகபோகங்களுக்காகவும் அரசிடம் கெஞ்சும் அரசியல்வாதிகள் மக்களுக்காகவும் கொஞ்சம் வாய்திறக்கலாமே. முஸ்லிம் அரசியல்வாதிகளைப் பார்த்தாவது இவர்கள் திருந்துவார்களா?

K

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பந்து

■ சிக்மலிங்கம் றெஜினோல்ட்

பந்தைப் போல ஒரு கெட்ட பொருள் இந்த உலகத்தில் உண்டா, சொல்லுங்கள்? அது எவ்வளவு பிரச்சினைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறது எப்போதும். சொன்னபடி எதையும் கேட்பதில்லை. சும்மா தட்டி விட்டால் போதும், அப்படியே உருண்டுகொண்டு எங்காவது தன் போக்கில் போய்விடும். எங்கே போக வேண்டும்? எங்கே போகக் கூடாது என்று அது யோசிப்பதே இல்லை. பார்ப்பதற்கு ஏதோ அப்பாவித்தனமாக இருக்கின்றதே தவிர, அது ஒன்றும் அப்படி அப்பாவியல்ல.

சில வேளைகளில் அது குழந்தைகளின் குதூகலத்தோடு துள்ளிக் குதிக்கிறது. சிலவேளை அது சோம்பேறித்தனமாக, மெதுவாக உருண்டு, ஊர்ந்து போகிறது. சிலவேளை துள்ளிக் குதித்துக் கொண்டு, அப்படியே எங்கோ சென்று ஒளித்துக் கொள்கிறது. சிலபோதுகளில் போகக் கூடாத இடத்துக்கே போய் விடுகிறது.

கால்கள் இல்லாமல் அது செய்கிற கூத்து இருக்கிறதே, அதுதான் எப்போதுமே பிரச்சினை. நாங்கள் அகதி முகாமில் இருந்தபோது, இந்தப் பந்தும் அங்கே இருந்தது. அகதிப் பந்துக்குச் சுதந்திரம் இருக்கக்கூடாது. ஆனால் அதற்கு அது புரியுமா? அதைப் பற்றிச் சொன்னால்தான் அது கேட்குமா?

நாங்கள் அகதிகள் என்றாலும், இன்னொரு வகையில் கைதிகளே. வன்னி அகதிகளுக்கு அப்படியொரு சிறப்பு ஏற்பாடு. போர் நடந்த களத்தில் இருந்து வந்தவர்களல்லவா!

சுற்றிவர முட்கம்பிவேலி. வேலியைக் கடந்து யாரும் எங்கேயும் போகமுடியாது. முடியாதென்பது என்ன, போகவே கூடாது. அதுவொரு கட்டளைச் சுவர். சட்டச்சுவர். சந்தேகத்தின் நிமித்தமாக உருவாக்கப்பட்ட அரண்.

அந்த முட்கம்பிப் பிராந்தியத்துக்குள்தான் சாப்பாடு. அதற்குள்ளேயே படுக்கை. அதற்குள்ளேதான் மலங்கழித்தல். அங்கேயே குளிப்பு, விளையாட்டு, பொழுது போக்கு(?) போக்க முடியாத பொழுதுகள், கவலைகள், துக்கங்கள், எதிர்காலம் பற்றிய யோசனைகள்... சண்டை சச்சரவு, வசை, களவு, பொய், கடந்த காலத்தின் மீதான கழிவிரக்கம், நோய் பிணி, துன்பம்... எனச் சகலதும் அங்கேயே. வாழ்க்கையே முள்ளில்தான்.

பிள்ளைகளுக்கு முள்ளின் வலி தெரியாது. அகதி வாழ்வின் குரூரம் விளங்காது. அவர்கள் கிடைத்த பொழுதெல்லாம் விளையாடினார்கள் பந்து விளையாட்டு. அடித்த பந்து சும்மா இருக்குமா? அதுவும் விளாசி அடித்தால். அடித்த அடியில் பந்து பறந்தது. பந்துக்கும் உற்சாகம் வந்து விட்டது போல. காற்று வளம். காற்றடைக்கப்பட்ட அந்தப் பந்துப்பை காற்றோடு பறந்தது. அது எங்களைப்போல அடங்கியிருக்க விரும்பவில்லைப் போலும். அகதிப் பந்து என்றால் அடங்கியிருக்க வேண்டுமா என்று அது யோசித்திருக்கலாம். அல்லது அகதி என்றால் என்ன என்று அதற்குத் தெரியவில்லைப்போலும். எப்படியோ அது சுதந்திரத்தை இழக்க விரும்பவில்லை. தன்னுடைய இயல்பை விட்டு விடத் தெரியவில்லை அதற்கு.

அதற்குத் தெரிந்ததெல்லாம் மகிழ்ச்சியும் கொண்டாட்டமுமே. பிள்ளைகள் விளையாடுகிறார்கள். அந்தப் பிள்ளைகளுடன் அதுவும் ஒரு பிள்ளையாகிவிட்டது. அவர்களுடைய விளையாட்டில் அதுவும் சேர்ந்து விட்டது. விளையாடும்போது எதற்கு வரையறைகள்? மகிழ்ச்சியாக விளையாட வேண்டியதுதானே. அதனால் அது துள்ளிக் குதித்துக் கொண்டு வெளியே போய்விட்டது. அங்கே இருந்த முட்கம்பி அடுக்குகள் அதற்குப் பொருட்டல்ல. சுற்றியிருந்த இராணுவத்தினரைப் பற்றி அது அக்கறைப்படவில்லை. அவர்களுடைய துப்பாக்கிகளைப் பற்றி அது சிந்திக்கவேயில்லை. அதற்கு அவற்றைப் பற்றி என்ன கவலை? அது அகதிகளுடன் விளையாடியது என்ற காரணத்தைத் தவிர.

வெளியே போன பந்து அங்கே இருந்து கொண்டு சிரித்து வேடிக்கை காட்டியது. "வேண்டுமானால் வெளியே வந்து பாருங்கள்" என்றது. "முடிந்தால் என்னை வந்து அழைத்துப் போங்கள்" என்று அது பிடிவாதம் பிடித்துக் கொண்டு அங்கேயே இருந்து கொண்டது. 7விளையாட்டில் எதற்கப்பா இந்தத் தயக்கங்களும் வரையறைகளும்? பேசாமல் வந்து என்னைக் கூட்டிப் போங்கள். மீண்டும் விளையாடலாம்" என்று அழைத்தது.

ஆனால் யாராலும் அதனிடம் போகமுடியவில்லை. போகத்துடித்தவர்களும் "எதுக்கு வீண் வம்பு" என்பதால் தயங்கி நின்றார்கள். என்றாலும் விளையாடும் வேகம் விடவில்லை. விளையாட்டில் வரும் வேகம் என்பது, ஏறக்குறைய வேட்டையில் வரும் வேகத்துக்குச் சமம். வேட்டையின் வேகம்தான் விளையாட்டில் இன்னொரு நிறத்தில் இருக்கிறது. அடிப்படையில் வேட்டையும் விளையாட்டும் ஒன்றுதான். போட்டியும் [illegible] களிப்புமே இரண்டிலும் [illegible] இருக்கும்.

விளையாட்டின் வேகம் விடவில்லை விளையாடியவர்களை. அது தூண்டியது, "வெளியே போங்கள்" என்று. இப்போது வெளியே எதற்காகப் போக வேணும்? வீழ்ந்திருக்கும் பந்தை எடுக்கத்தானே! அதை விட வேறு என்ன தகாத காரியமா பார்க்கப் போகிறோம்? முகாமைத் தாண்டுவதுதான். வருவது வரட்டும் என்று விளையாடியவர்களில் ஒரு சிறுவன் வெளியே பாய்ந்தான்.

அதைக் கண்டு விட்டான் ஒரு சிப்பாய். அவ்வளவுதான். படைகள் உஷாராகின.

பதினாறு வரி முட்கம்பியைக் கடந்து போவதென்றால், அதைவிட இரவு பகலாக துப்பாக்கியோடு காத்துக்கொண்டு நிற்கும் அவர்களைக் கடந்து போவதென்றால்....? வெளியே போனவனைக் கண்ட சிப்பாய் பாய்ந்தடித்துக் கொண்டு ஓடிவந்தான்.

எல்லோருக்கும் கலவரம். இது எதிர்பார்த்ததுதான். ஆனால், இப்படி விழிப்பாக இருப்பார்கள் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. வந்த சிப்பாய் கத்தினான். 'எதற்கு வெளியே போனாய்?' என்று அதட்டினான். 'வெளியே போனால் என்ன நடக்கும் தெரியுமா?' என்று கத்தினான். அவனைத் தொடர்ந்து இன்னொரு சிப்பாயும் அங்கே வந்து விட்டான். தொடர்ந்து ஐந்தாறுபேர். இது தொடர்ந்தால் முகாமின் பொறுப்பதிகாரி வருவான். அவனோடு கூட மேலும் படையினர் கூடுவார்கள். அதிகாரி வந்தால் நிச்சயமாக விசாரணைகள் நடக்கும்.

மீண்டும் எல்லோரையும் வெட்டைக்கு அழைப்பார்கள். குளித்துக் கொண்டிருப்பவர்கள், சமைத்துக் கொண்டிருப்பவர்கள், மலசல கூடத்திலிருப்பவர்கள், பிள்ளையை நித்திரையாக்கிக் கொண்டிருப்பவர்கள், பாலூட்டிக் கொண்டிருப்பவர்கள், நோயாளிகள், நடக்க முடியாதவர்கள் எல்லாம் வெட்டைக்கு வரவேணும். அங்கே கணக்கெடுப்பு நடக்கும். தலைகளை எண்ணுவார்கள். மாறி மாறி எண்ணுவார்கள். தலை எண்ணி முடியும் வரை எவரும் எங்கேயும் எதற்கும் போகமுடியாது. அந்த முகாமுக்குள்ளும் கூட.

ஆனால், இப்போது வந்த சிப்பாய்கள் நிலைமையை விளங்கிக் கொண்டார்கள். விளையாடும்போது கிறுக்குப் பந்து வெளியே போனதால்தான் அதை எடுப்பதற்கு வெளியேறியிருக்கிறான் அந்தச் சிறுவன் என்று, ஆனாலும் எச்சரித்தார்கள். "இது கடைசித் தடவையாக இருக்கட்டும்" என்று மன்னிப்பை வழங்கினார்கள். பந்து வெளியே போனால் தங்களிடம் சொல்லச் சொன்னார்கள். நல்லவேளை அதை தடுக்கச் [illegible] குறிப்பிடவில்லை.

என்றாலும் வந்தது வினை.

வெளியே சென்றிருந்த அந்தச் சிறுவன் பந்தோடு உள்ளே நுழையும்போது அதை எங்கிருந்தோ எதிர்பாராத விதமாக ஒரு படை அதிகாரி கண்டு விட்டான். அந்தப் படை அதிகாரி அந்த முகாமுக்கு உரியவனல்ல. அதற்கும் மேல் அதிகாரி. அங்கே எதற்காகவோ வந்திருக்கிறார். எப்போதுமே மேலதிகாரிகள் இறுக்கமாக இருப்பார்கள். அவர்களுடைய பணியின் தேவையோ, அதிகாரமோ என்னவோ.

படை அதிகாரி சிப்பாய்களை அழைத்து விசாரித்தான். அவர்கள் விவரம் சொன்னார்கள். பந்தைக் காட்டினார்கள். ஆனாலும் அன்று மாலை தொடங்கிய கணக்கெடுப்பு இரவு பதினொரு மணியாகியது முடிவடைய.

அந்தக் கணக்கெடுப்பில் அந்தப் பந்து சேர்த்துக் கொள்ளப்படவில்லை. விளையாடுவதற்கு மேலும் இரண்டு பந்துகளைப் படையினர் தந்தனர். நடந்த காரியத்துக்கு சம்பிரதாயமாக மன்னிப்புக் கோரினர். இந்த மாதிரி நிலைமைகளில் நடந்து கொள்ள வேண்டிய முறைகள், பெற வேண்டிய அனுமதிகளைப் பற்றி விளக்கினார்கள்.

அங்கே பிரச்சினை பந்தல்ல. பந்தை விளையாடுவதே.

• • •

மீளக் குடியமர்ந்த பிறகு அவர்கள் தங்களுடைய வீட்டுக்கருகில் விளையாடினார்கள். .....துள்ளிக் குதித்துக் கொண்டோடிய பந்து அப்படியே ஒரு புதருக்கருகில் போய் நின்றது. திரும்பி வருவதற்கு அதற்குத் தெரியாது. அல்லது அதற்கு மறுத்தான் கொடுப்பதற்கு அங்கே யாரும் இருக்கவில்லை.

விளையாடும் வேகம். பிரதாபன் பாய்ந்தோடிப்போய் பந்தை எடுத்தான். எடுத்த வேகத்தில் அவன் திரும்ப.... வெடித்தது மிதிவெடி.

தீ

புகை


புழுதி மண்டலம்

குருதி

கதறல்

ஓலம்....

(18ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடவுளரைக் கைவிட்ட நகரம்

## தொன்மயாத்திரையை முன்வைத்து இரு குறிப்புகள்

## குறிப்பு 1

- ஆனந்தன்

கடலே வாழ்வின் வளம் நிறைந்த பூமி என்றும் அதற்கடியில் புதைந்து கிடக்கின்ற உலகம் மற்றையதொன்று எனக் காண்கின்றபோது அது விசித்திரமில்லாது வேறேன்னெ.....???

எமது தமிழ் வாழ்வியலுக்குப் புதிதாக இந்தத் தொன்ம யாத்திரையை ஒத்த பயணங்கள், சிங்கள மக்கள் தமது வழமைகளில் ஒன்றாகக் கொண்டிருப்பது ஞாபகத்துக்கு வந்தது. அவர்கள் இதற்காக பணத்தையும், பொருள்கள்ளயும் சேமிப்பது வழக்கம். பின்னர் ஊரும், உறவுமாக ஒன்று கூடி பஸ்ஸினை வாடகைக்கு அமர்த்தி "சூழலியல் சுற்றுலாவாக" வடிவமைப்பர். போகின்ற வழிகள் தோறும் மதச் சார்புடைய எந்த தலமாக இருப்பினும், மரபுரிமை சார்ந்த எந்த இடமாக இருப்பினும் அவர்கள் நடுவே வருபவர்களில் ஒருவர், அவற்றைப் பற்றி நன்கு தெரிந்தவர் அல்லது அறிந்தவர் என்ற வகையில் ஏனையோருக்கு விளக்கமளிப்பர். நிழல் தரக்கூடிய பெரு விருட்சமாகப் பார்த்து வாகனத்தை நிறுத்தி உணவு சமைத்து உண்டு களிப்பது அவர்கள் பெருமை. இதிலே விசேடமான விடயம் என்னவெனில், அந்தகைய சுற்றுலாக் குழுவிலே சிறுவரும் இருப்பர், இளைஞரும் இருப்பர், தள்ளாடுகின்ற வயோதிபரும் இருப்பர்.


தமிழராகிய நாம் இத்தகைய விடயங்களை சுற்றுலா என்றில்லாமல், அதை தல யாத்திரையாக மட்டும் செல்வது வழக்கம். அதுவும் போகின்ற வழியில் வண்டியானது மலசலம் கழிக்கவும், உணவுண்ணவும் மாத்திரமே இடை நிறுத்தப்படுமேயொழிய, இல்லாவிடில் கண்ணைக் கட்டி கைதிகளைக் கொண்டு சென்று இறக்குவதுபோல, வாகனமானது நேரே தல வாசலில் தான் போய் நிற்கும். இப்படிப்பட்ட நடைமுறைகளால் நாம் வாழ்க்கையின் அர்த்தத்தை வேறொரு விதத்தில் புரிந்து வைத்திருக்கிறோம். நாம் ஒருபோதும் வாழ்க்கையை வாழ்வதும் இல்லை அனுபவிப்பதும் இல்லை. இதனால் எம்மவர் இழந்தது வாழ்க்கையை மட்டுமல்ல "மனித குலத்தை அறிதல்" என்ற மாபெரும் விடயத்தையும் தான் என்பது எனது கருத்து.

எமது யாத்திரை ஊர்காவற்றுறை நகரத்திலிருந்து ஆரம்பித்தது. யாத்திரையில் ஏறத்தாழ நாற்பது பேர்வரை பங்குபற்றியிருந் தனர். அதில் இருந்தவர்கள் பெரும்பாலும் இளவயதினராகக் காணப்பட்டனர்.

வணக்கத் தலங்கள் நிறைந்த பூமி அது. அந்நியர் வருகையால் நடந்த சமூகச் சிதைவுகளை வாசிப்பதற்கு ஏதுவாக அங்குள்ள புராதன மத வழிபாட்டுத் தலங்கள் காணப்படுகின்றன.

(18ஆம் பக்கம் பார்க்க)





## குறிப்பு 2

- யதார்த்தன்

மரபை அறிவதற்கும் கொண்டாடுவதற்குமான தொன்ம யாத்திரையின் ஐந்தாவது யாத்திரை ஊர்காவற்றுறைக்கு செல்லவெனத் திட்டமிடப்பட்டது. விதை குழும செயற்பாட்டாளர்களும், அக்கினிச்சிறகுகள் குழுமச் செயற்பாட்டாளர்களும் தயாரானோம். இம்மாத தொடக்கத்தில் ஊர்காவற்றுறை மற்றும் அதன் இதர பிராந்தியங்களுக்கு சென்று அங்குள்ள மரபுரிமை சார்ந்த விடயங்களை ஆய்வு செய்தோம். அத்தோடு, ஊர்காவற்றுறை சார்ந்த எழுத்து பிரதிகள், வரலாற்றுக் குறிப்புக்களைத் திரட்டி தொன்ம யாத்திரை இதழும் ஒரு பக்கத்தில் தயாராகிக்கொண்டிருந்தது. ஊர்காவற்றுறையில் பிரமாண்டமும் அழகுணர்வும் மிக்க தேவாலயங்களைத் தேடி அலைந்தோம். அதனால் யாத்திரையின் மகுட வாசகமாக "தேவாலயங்களின் நகரம்" என்று பெயரிட்டோம்.


யாத்திரைக்கான நாள் அறிவிக்கப் பட்டதிலிருந்து நிறைய நண்பர்கள் தொன்மை நகரைக் காண ஆர்வமாக இருந்தார்கள். நோர்வேயில் வசிப்பவரும் எழுத்தாள ரும், கூத்து, சமையல், கடல் வளம் எனப் பல விடயங்கள் பற்றி உரை யாடத்தக்கவருமான, அந்த நிலத்தை சேர்ந்த தமயந்தி எங்களுடன் வந்து இணைந்தது இன்னும் உற்சாகத்தை அதிகரித்தது.

யாத்திரை அன்று காலையில் கொஞ்ச நண்பர்கள் , காலையிலேயே ஏற்பாடுகளைக் கவனிக்க ஊர்காவற்றுறைக்கு புறப்பட்டு விட்டனர். புளியாணம் , பருத்தித்துறை வடை போன்ற மரபுணவுகளை தயாரிக்கவும் , நாரையன்பிட்டி தீவுக்கு போவதற்கு படகுகளை தயார் செய்வதற்காகவுமே அவர்களின் முற்கூட்டிய பயணம் அமைந்திருந்தது. பிற்பகல் ஒரு மணியளவில் மிகுதி நண்பர்கள் அனைவரும் யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தில் சேர்ந்து கொண்டோம்.

பஸ்ஸில் புறப்பட்டு, பண்ணைக் கடல் நீரேரியில் பறவைகளை இரசித்தவாறு பயணம் தொடர்ந்தது. கடைசியில் ஊர்காவற்றுறை எனும் அந்தத் தொன்மை நகரத்தில் இறங்கினோம். போகும் போதே ஊர்காவற்றுறையின் பழம் பெரும் வரலாற்றையும் அதன் மரபுகளையும் பற்றி நண்பர்கள் உரையாடியவாறே சென்றனர். அந்தப் பிரமாண்டமான தேவாலயங்களையும், கடல்கோட்டையையும் , மக்களையும் அவர்களின் வாழ்வையும் காண எல்லோரும் ஆர்வமாயிருந்தனர்.

நகரத்துக்கு அண்மையில் இருந்த தேவாலயமொன்றில் ஒன்றுகூடினோம்.

(18ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யார் கெட்டிக்காரர்கள்?

■ ச.திருச்செந்தூரன்

வழமையாக சூரியன் உதித்த பின்னர் தான் எனக்கு விடியும். ஆனால், கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை இரண்டு மணிக்கே எனக்கு விடிந்துவிட்டது. என் வாழ்க்கையில் நடைபெற்ற ஓர் உலக அதிசயம் என்றும் அதைச் சொல்லலாம். க.பொ.த. சாதாரண தர பெறுபேறு அன்று வெளியாகி இருந்தது. பெரியம்மாவின் மகளும் பரீட்சைக்குத் தோற்றியிருந்தார். ஆனால் பெரியம்மாவுக்கு இணையத்தில் பெறுபேறுகளை எப்படிப் பார்ப்பது என்று தெரியாது. அதனால் எனக்கு அழைப்பை எடுத்திருந்தார்.

தனது பிள்ளையின் சுட்டெண்ணைத் தந்து என்ன பெறுபேறு என்பதைப் பார்த்துச் சொல்லுமாறு கேட்டார். ஆனால் அவரது மகளோ, கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சித்தியடையத் தவறியிருந்தார். பெரியம்மாவுக்கு என்ன சொல்வது என்று தடுமாறினேன். இப்போதைய புதிய பாடத்திட்டத்தின்படி இவ்விரு பாடங்களும் சித்தியடைய தவறினாலும் உயர்தரம் கற்கமுடியும். எனவே நான் இப்படிச் சொன்னேன் " பெரியம்மா, தங்கச்சி ஏ. எல் படிக்கலாம்" .

அதைக் கேட்டு பெரியம்மாவுக்கு பெரும் சந்தோசம். மாறாக "தங்கச்சி எல்லாப் பாடமும் பாஸ். கணிதமும், ஆங்கிலமும் பெயில்" என்று சொல்லியிருந்தால் அவர் அழுதே இருப்பார். பரீட்சைப் பெறுபேறு வெளியாகும் நாள்களில் இவ்வாறான சம்பவங்கள் ஏராளமாக நடக்கும். சாதாரணதர அல்லது உயர்தரப் பெறுபேறுகள் வெளியாகும் காலங்களில் "எத்தனை உயிர்கள் போகப்போகின்றதோ" என சிந்திக்க வேண்டியது அவசியமாகிறது.

மூன்று தசாப்த காலமாக பல இழப்புக்களைச் சந்தித்து மீண்டெழும் சமூகமாக இருக்கக்கூடிய நாங்கள் தொடர்ந்தும் உயிர்களை இழக்கும் ஒரு காரணியாகவும் இந்தப் பெறுபேற்றுக் காய்ச்சலையும் பார்க்கலாம். எங்கள் சமூகத்தில் இருக்கக்கூடிய பிழையான கருதுகோள்களில் ஒன்று படித்து உயர்தரப் பரீட்சையில் சித்தி அடைவது, பின்னர் பல்கலைக்கழகத்தை எட்டுவது, தொடர்ந்து அரச சேவையில் பணியாற்றுவது. இந்த வாழ்க்கை வட்டத்தையே தான் மேன்மையாகக் கருதுகிறது எமதுசமூகம். இதை வைத்தே எமது சமூகத்தில் ஒரு மனிதனின் தராதரம் கணிக்கப்படுகிறது. இவ்வாறு தீர்மானிக்கப்படுவது ஒரு பெரும் உளநோயின் குறைபாடே அன்றி வேறொன்றுமில்லை.

சாதாரண தரத்தில் தற்போது ஒன்பது அதி விசேட சித்திகளை (ஏ) பெற்ற மாணவர்களின் படங்களைப் பதாகைகளில் போட்டு பாடசாலைகள் பாராட்டு விழாக்களை நடத்திக் கொண்டிருக்கின்றன. அதேவேளை பத்திரிகை உள்ளிட்ட ஊடகங்களின் ஊடகவியலாளர்கள் சிறந்த சித்திகளை பெற்ற மாணவர்களை செவ்வி காண அவர்கள் வீடுகளை நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறார்கள். மாணவர்களும் ஊடகத்துக்கு எதையாவது நல்லதாய்ச் சொல்ல வேண்டுமே என்று பதற்றமான தர்ம சங்கடமான உளச்சிக்கலுக்குள் சிக்கிக்கொண்டிருப்பார்கள். அதே நேரம் 'டியூட்டறி மாபியாக்களும்' அதி விசேட சித்திகளை பெற்ற மாணவர்களை வைத்து வியாபாரம் நடத்த பத்திரிகை நிறுவனங்களை நோக்கி விளம்பரங்களை கொடுக்க ஓட்டம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பரீட்சைகளில் சித்தியடையத் தவறும் மாணவர்களை எங்கள் சமூகம் ஒரு தீண்டத்தகாத பிராணி போல நோக்குவதாலும், பேசுவதாலும், அப்படியான மாணவர்கள் தாமாகவே தங்களை தாழ்வு மனப்பான்மைக்குள் மூழ்கடிக்கிறார்கள். ஆக எங்களது சமூகத்தின் கூட்டு உளவியலின் அடிப்படையில் சித்தியடைந்தவர்கள் தான் மேம்பட்டவர்கள் என்ற சிந்தனை மேலோங்கி இருப்பதை இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும். புலமைப்பரிசிலில் சித்தி பெற்றவுடன் சிறப்பு சித்திகளை பெற்ற மாணவர்கள் ஊடகச்செவ்வியின்போது 'மருத்துவராக வேண்டும், பொறியியலாளராக வேண்டும்' என்ற பதில்களை வழங்குவார்கள். இதே நிலைமை க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தர பெறுபேற்று வெளிப்படலின் போதும் இடம்பெறும்.

மருத்துவம்,பொறியியல் போன்ற துறைகளை மட்டுமே மேன்மையான தொழில்களாகவும், அவற்றைச் செய்பவர்கள் மட்டுமே சமூகத்தின் உயர்நிலையை அடைய முடியும் என்பது போலவுமே, எமது கல்விமுறை மாற்றம் அடைந்திருப்பதுதான் பெரும் அபத்தமாக உருப்பெற்றிருக்கின்றது. கலைப்பிரிவு மதிக்கப்படாத துறையாக மாற்றம் கண்டிருக்கின்றது. கல்வி என்பது ஒரு மனிதனின் சிந்தனையை கட்டியமைப்பதிலும், அவனது திறமையை மேம்படுத்துவதாகவும் இருக்க வேண்டும். ஆனால் இங்கோ கல்வி தொழிலுக்கான ஒன்றாக எம் சமூகத்தில் மாற்றம் கண்டது பெரும் குறையாக இருக்கின்றது. பாடசாலை மற்றும் பல்கலைக்கழகங்களில் தொழிலுக்காகப் பயிற்றப்பட்ட இயந்திரங்களாக மட்டுமே மாணவர்கள் இருக்கின்றனர். அதே வேளை பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் அல்லது மாணவிதான் மேம்பட்டவர், கெட்டிக்காரர் என்ற மாயவலை ஒன்றும் கட்டியெழுப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

எங்களது பெற்றோரிடமும், மாணவர்களை எப்படி வழிநடத்த வேண்டும் என்ற சிந்தனை இருப்பதாகத் தெரியவில்லை. படித்த பெற்றோரிடம் கூட இந்தத் தெளிவு இல்லையென்றுதான் சொல்லவேண்டும். பெற்றோரின் சொல்லைக் கேட்காதவர்களாகப் பிள்ளைகள் காணப்படுகின்றனர். எவ்வளவோ புத்தம் புதிய கண்டுபிடிப்புக்களை செய்த தோமஸ் அல்வா எடிசன் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது, அவரிடம் அவரது வகுப்பாசிரியர் ஒரு கடிதத்தை கொடுத்து அனுப்பியிருந்தார். அந்தக் கடிதத்தை அவரின் அம்மா மட்டுமே படிக்க வேண்டும் என்றும் ஆசிரியர் சொல்லி இருந்தார்.

அதன்படி அவரும் அந்தக் கடிதத்தை அம்மாவிடம் கொண்டு சென்று கொடுத்தார். அந்தக் கடிதத்தை படித்த எடிசனின் அம்மாவின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறது' என எடிசனும் கேட்டார். "உங்கள் மகன் மிகவும் புத்திசாலி. அவனின் அறிவுக்கு ஏற்றளவில் இந்தப் பள்ளி இல்லை. அதனால் எடிசனை வீட்டில் வைத்தே படிக்க வையுங்கள்" என்ற வரிகளை அவரது அம்மா உரக்கப் படித்தார். இதைக் கேட்ட எடிசன் உற்சாகமாகச் சத்தமிட்டார். ஆண்டுகள் பல கழிந்தன. தோமஸ் அல்வா எடிசன் புதிய புதிய கண்டுபிடிப்புகள் மூலம் உலகமே போற்றும் மகத்தான விஞ்ஞானியாக திகழ்ந்தார்.

அவருக்கு பாராட்டுக்கள் குவிந்த வண்ணம் இருந்தன. ஒரு நாள் எடிசனின் அம்மாவும் இறந்து போனார். அதன் பின் எடிசன் எதையோ தேடுகையில் சிறிய வயதில் ஆசிரியர் கொடுத்தனுப்பிய கடிதம் கிடைத்தது. தன்னைப் பற்றி உயர்வாக எழுதிய கடிதத்தை மீண்டும் படிக்க ஆசைப்பட்டு வாசித்தார். ஆனால் கடிதத்தில் இருந்த வரிகள் அவரின் அம்மா வாசித்தவை அல்ல. "உங்களின் மகனின் மனநிலை சரியில்லை எனக் கருதுகிறோம். அவனை தொடர்ந்து எங்கள் பள்ளியில் படிக்க அனுமதிக்க முடியாது" என்று தான் அந்தக் கடிதத்தில் இருந்தது. அக்கடிதத்தை வாசித்தவுடன் எடிசன் உறைந்து போனார். அம்மாவை நன்றியோடு நினைத்துக் கொண்டார். அன்று எடிசனின் தாயார் பொறுப்பற்ற விதத்தில் எங்கள் தாய்மார் போன்று பேசி, அடித்திருந்தால் நாங்கள் இன்று வரை இருட்டுக்குள் தான் இருந்திருப்போம் மின்விளக்கைத் தந்த எடிசனை இவ்வுலகம் இழந்திருக்கும்.

வடக்கு, கிழக்கில் வலுவான இளைய கூட்டம் ஒன்று இருக்கின்றது. அவர்களை சரியான வழியில் கொண்டு செல்ல சிறந்த வலுப்படுத்துநர்கள் இல்லை. எங்களது பிள்ளைகள் நன்றாக படித்து விட்டு படிக்காத முதலாளிகளிடமும், அரசியல்வாதிகளிடம் தான் வேலைகேட்கும் நிலைமை இருக்கின்றது. சாதாரண தரம் மற்றும் உயர் தரத்தில் சித்தியடையத் தவறிய இளைய கூட்டம், அடுத்த கட்டம் நோக்கி நகரத் தவறுகின்றது. வழி தெரியாமல் இளையோர் படை வீதியெங்கும் வெட்டிக்கதை பேசி நேரத்தை வீணாக்கி வருவதோடு, குடி போதையிலும் மிதந்து வருகிறது. இது குறித்து மக்கள் தலைவர்கள் என்று சொல்லித் திரியும் தமிழ் அரசியல்வாதிகள் எதுவித சிந்தனையும் அற்றவர்களாக உள்ளார்கள். வடமாகாண சபை கூட இதுவிடயத்தில் உரிய அக்கறை காட்டுவதில்லை. எங்களது மக்கள் அரச வேலைக்குத் தான் அதிக முக்கியத்துவம் கொடுத்து, அரச வேலைதான் உயர்ந்தது என்றும் மற்றையவை தாழ்ந்தவை என்றும் தமது சிந்தனையை வளர்த்திருக்கின்றனர். எத்தனையோ வருடங்களாக வடக்கில் மிகவும் உயர்ந்த புத்திஜீவிகளைக் கொண்ட பயிற்றுவிப்பு இடமான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புதுமையான, மகத்தான, சிந்தனை யாளனையோ,விஞ்ஞானியையோ அல்லது ஆய்வாளனையோ காணவில்லை. வெளிவந்தவர்கள் யாவரும் உள்ளதை கற்று களமாடுபவர்களாக இருக்கின்றார்களே தவிர புதுமையாக ஒரு கண்டுபிடிப்பையோ, கோட்பாட்டையோ வெளித்தந்தவர்களாக இல்லை. நாங்கள் சுயமாகச் சிந்திக்கக்கூடிய புதுமையாக களப்பணியாற்றக்கூடிய மாணவர்களை உருவாக்கவில்லை.

எங்கள் சமூகத்தில் எப்போது கல்வி தொழிலுக்காக அல்லாமல் அறிவுக்காகப் பயிற்றுவிக்கப்படுகின்றதோ, அன்று தான் அதற்கான வெளிகள் திறக்கும். இன்று எங்களது இனம் தேடலற்ற ஒரு பரம்பரையை உருவாக்கி உள்ளது. வாசிப்பு அற்ற, சுயசிந்தனை அற்ற புதிய தலைமுறை உருவாகி உள்ளது அதன் வழி புலமையாளர்கள் என்பவர்கள் பாடமாக்கி, எழுதி, மதிப்பெண் எடுப்பவர்களும், பரீட்சைகளில் சித்தி பெறுபவர்களும்தான் என்ற சிந்தனை எம் சமூகத்தில் தற்காலத்தில் தோன்றியுள்ளது. சித்தியடையாதவர்களும் குறைவான மதிப்பெண் பெற்றவர்களும் தங்கள் சுயமுயற்சியால் முன்னேறி நிறுவனங்களின் முதலாளிகளாக, முகாமையாளராக மாறி விடுகின்றனர். படித்தவர்கள் வேலை கேட்டு போராடுகின்றனர்.

அப்படியானால் பரீட்சையில் சித்தியடையத் தவறி, இப்போது ஒரு முதலாளியாகி வேலை கொடுப்பவன் கெட்டிக்காரனா? எல்லாப் பரீட்சைகளிலும் பாஸ் பண்ணியும், வேலை கேட்டுப் போராடுபவன் கெட்டிக்காரனா? ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரப்பலன்

**மேடம்**
பொருள் லாபம். தருமச் செய்கை. சிந்தனை விருத்தி

**துலாம்**
பொதுப் பணி. தருமச் செலவு. கவலை. கேடு

**ரிஷபம்**
வேலையாள்கள் சகாயம். கல்வி விருத்தி. போகம்

**விருச்சிகம்**
உற்சாக மிகுதி. அதிக தாகம். மனச் சஞ்சலம். பகை

**மிதுனம்**
தானம். சிந்தனை. வேலைப்பளு. சௌக்கியக்கேடு.

**தனுசு**
வீரியம். உறக்கமின்மை. உற்சாகம். கவலை

**கடகம்**
நிர்வாகச் சிறப்பு. வரவுக்கேற்ற செலவு. தனவிருத்தி

**மகரம்**
தியானம். பொருள் நஷ்டம். சிந்தனை மிகுதி

**சிம்மம்**
பணமுடை. தன தானிய விருத்தி. உறவு வருகை.

**கும்பம்**
நிலை மாற்றம். சமூகப்பணி ஆர்வம். சுகச் செலவு

**கன்னி**
காரிய சித்தி. கனவு பலிதம். சமநிலை. பயணம்

**மீனம்**
தல யாத்திரை. அதிக செலவினம். புத்திரால் கவலை








கவிஞரும் இதழியலாளருமான எஸ்போஸ் படுகொலை செய்யப்பட்டு பத்து வருடங்களின் பின் அவரது படைப்புக்களை உள்ளடக்கிய விரிவான தொகுப்பு கடந்த 02.04.2017 அன்று கிளிநொச்சியில் உள்ள பிராந்திய வைத்திய நிலைய மண்டபத்தில் வெளியிடப்பட்டது. இந்தத் தொகுப்பை வடலி வெளியீட்டகம் வெளிக்கொணர்ந்துள்ளது.

கடந்த மார்ச் ஐந்தாம் திகதி பிரெஞ்சு நட்புறவுக்கழகத்தில் பிரெஞ்சு மொழி படித்து வெளியேறிய வர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் ஒன்று நடைபெற்றது. நிகழ்வில் உரை மற்றும் கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றன.









கடல் வளங்கள் அழிவதைப் பற்றியும் வடக்கின் மீனவர்களின் வாழ்வியலையும் அதன் அம்சங்களையும் துல்லிய-மான பதிவுகளுடன் தாங்கிய தமயந்தியின் 'ஏழு கடல் கன்னிகள்' என்ற சிறுகதைத் தொகுதி கடந்த 01.04.2017 அன்று யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டது.



நாடக அரங்காற்றுக் கலைஞர் க. பாலேந்திராவின் "யுக தர்மம் – நாடகமும் பதிவுகளும் " – நூலின் அறிமுகமும் கலந்துரையாடலும் என்ற நிகழ்வு கடந்த (02.04.2017) ஞாயிறு அன்று மாலை 5.00மணிக்கு வெள்ளவத்தை தமிழ்சங்கக் கட்டடத் தொகுதியிலமைந்துள்ள விநோதன் மண்டபத்தில் நடை பெற்றது. அறிஞர்கள், ஆர்வலர்கள் ஊடகவியலாளர்கள் மற்றும் பாலேந்திராவின் இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். தமிழ் அவைக்காற்றுக் கழகம் குமரன் புத்தக இல்லத்துடன் இணைந்து இந்த நூலை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# ஹாய் குட்டீஸ்...!

உங்களின் படைப்புகள் அனைத்தும் புதுவிதியில் பிரசுரமாக வேண்டுமா? உடன் எழுதி அனுப்புங்கள்.

puthuvithi@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கும் உங்கள் படைப்புகளை அனுப்பி வைக்க முடியும்.

'புதுவிதி' இல.107 இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.


# மோட்டார் சைக்கிள் பிறப்பும் ஹொண்டாவின் வெற்றியும் 2

தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தி, பிஸ்டன் தயாரிக்கும் தொழில் அமர்க்களமாகத் தொடங்கியது.

கூடவே இரண்டாம் உலகப் போரும் தொடங்கியது. அமெரிக்கா போட்ட குண்டு, ஹொண்டாவின் தொழிற்சாலையில் பெரும் பகுதியை உடைத்துச் சுக்கு நூறாக்கியது. ஹொண்டாவின் வாழ்க்கை முடிந்தது என்று பேசிக் கொண்டார்கள் நண்பர்கள். ஆனால், தனது அனைத்துத் தொழிலாளர்களையும் திரட்டிக்கொண்டு, தானே களமிறங்கி இடிபாடுகளைச் சீர்செய்து, தொழிற்சாலையை மீண்டும் இயக்கிக் காட்டினார் ஹொண்டா.

ஜப்பான் நாட்டில் நிலநடுக்கங்கள் அதிகம். ஒரு நாள் திடீரெனத் தாக்கிய நிலநடுக்கம் ஹொண்டாவின் தொழிற்சாலையைத் தரைமட்டமாக்கியது. மொத்தத் தொழிற்சாலையையும் திருப்பிக்கட்ட முடியாத அவலநிலை. வேறு வழியின்றி உடைந்த கருவிகள், மூலப்பொருள்களைக் கிடைத்த விலைக்கு டொயோட்டா நிறுவனத்திடம் விற்றுவிட்டார் ஹொண்டா. இப்படிப்பட்ட நிலைமையில் உங்கள் மனநிலை எப்படி இருக்கும்? எண்ணிப் பாருங்கள். ஹொண்டா தனது அப்போதைய நிலைமை பற்றிச் சொல்கிறார். நான் ஆசைப்பட்ட ஒரு திட்டம் தோல்வி அடைந்தால், துளிகூட கவலைப்பட மாட்டேன்... இருக்கிற நிலைமையை எப்படி மாற்றலாம் என்று தீவிரமாக சிந்திக்கத் தொடங்கி விடுவேன்.

இரண்டாம் உலகப் போர் முடிந்திருந்த நேரம். ஜப்பான் பொருளாதாரம் சாம்பராக்கப்பட்ட காலகட்டம். எங்கும் பெற்றோல் தட்டுப்பாடு. கார்கள் எல்லாம் முடங்கி விட்டன. எல்லோரும் நடக்கிறார்கள் அல்லது சைக்கிள் மிதிக்கிறார்கள். சாய்க்கிரோ ஹொண்டா, வீட்டில் அமர்ந்திருந்தார். அருகில் சைக்கிள் நின்றது. சற்றுத் தொலைவில் புல்வெட்டும் இயந்திரம் இருந்தது. அந்தப் புல்வெட்டும் இயந்திரத்தில் உள்ள மோட்டரைக் கழற்றி, இந்த சைக்கிளில் இணைத்தால் என்ன என்று ஹொண்டாவுக்கு ஒரு புது ஐடியா பளிச்சிட்டது.

அடுத்த நொடியே வேலையில் இறங்கினார் ஹொண்டா. புல்வெட்டும் இயந்திரத்தின் மோட்டரைக் கழற்றி எடுத்து, தனது சைக்கிளில் அவர் பொருத்தியபோது உலகின் முதல் மோட்டர் சைக்கிள் பிறந்துவிட்டது. அதை எடுத்துக் கொண்டு ஜம்மென்று சுற்றி வந்தார் ஹொண்டா.

அதேபோன்று எனக்கும் செய்து கொடு என்று மொய்க்கத் தொடங்கினர் மக்கள். அவரும் சளைக்காமல் செய்து கொடுத்தார். விளைவு? அந்த ஊரில் மோட்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது. இதையே பெரிய தொழிலாக மாற்றினால் என்ன என்று சிந்தித்தார் ஹொண்டா. கையில் பணமில்லை. வங்கிகள் கடன்தரத் தயாரில்லை. ஹொண்டா துரதிர்ஷ்டக்காரன் என்று எல்லோரும் சான்றிதழ் கொடுத்து வைத்திருந்தார்கள். கலங்கவில்லை ஹொண்டா.

தனது தொழில் திட்டத்துக்கு பண உதவுமாறு வேண்டுகோள் விடுத்து, ஜப்பானில் உள்ள 18 ஆயிரம் சைக்கிள் கடைக்காரர்களுக்கு கடிதம் எழுதினார். முதலீடு செய்யும் சைக்கிள் கடைக்காரர்கள், மோட்டார் சைக்கிள் விநியோகஸ்தர்களாக நியமிக்கப்படுவார்கள் என உறுதி அளித்தார். 5 ஆயிரம் சைக்கிள் கடைக்காரர்கள் முன்வந்து பண உதவி செய்தனர். ஹொண்டா மோட்டார் சைக்கிள் நிறுவனம் உதயமானது. முதலில் தயாரான மோட்டர் சைக்கிள் குறித்து விமர்சனங்கள் வந்தபோது, தானே உலைக்கூடத்தில் அமர்ந்து, அழகான வடிவமைப்புடன் அற்புதமான மோட்டர் சைக்கிள் வடிவங்களைக் கொண்டு வந்தார்.

அவமானகரமான தொடர் தோல்விகளுக்குப் பின்னர் , பெரும் வெற்றி பெற்றார் சாய்க்கிரோ ஹொண்டா. இப்போது ஹொண்டா நிறுவனம் வருடத்துக்கு சுமார் 2 கோடி மோட்டார் சைக்கிள்களை தயாரிக்கிறது. ஹொண்டா கார்களுக்கு மேலை நாடுகளிலும் பெரும் வரவேற்பு. எத்தனையோ வகை வகையான தயாரிப்புக்களில் வெற்றிக்கொடி நாட்டியுள்ளது இந்த நிறுவனம்.

## ஹாய் சுட்டீஸ்...!

தோல்வி என்ற சொல்லையே தாங்க முடியாதவர்கள் பலர் எம்மிடையே உண்டு. ஆனால் உலகில் தோல்வியையே சந்திக்காதவர்கள் எவரும் இல்லை. தோற்றவர்கள் பலருக்கும் யாரேனும் ஆதரவாக இருப்பதுண்டு. அவர்களின் ஆதரவில் - தைரியத்தில் மீண்டும் எழுந்து சாதித்தவர்கள் ஒரு வகையினர்.

ஆனால் எல்லோருக்கும் இத்தகைய சந்தர்ப்பம் அமைவதில்லை. அதனால்தான் சிலர் கோழைகளாக தற்கொலை செய்கிறார்கள். ஆனால் இந்தப் பகுதியில் வரும் சாதனையாளர்கள் அவமானங்களையும் தோல்விகளையும் சுமந்து அனைத்தையும் இழந்தவர்கள். எவரின் ஆதரவுமின்றி சுயமாக கடினமாக உழைத்து முன்னுக்கு வந்தவர்கள். இவர்களின் வாழ்வு உங்களுக்கு வழிகாட்டட்டும்...!

# எலியும் பாலும்



பசி தாங்க முடியாத எலிகள் இரண்டு தாங்கள் ஒளிந்திருந்த வீட்டின் சமையல் அறைக்குள் புகுந்தன. அங்கே ஒரு பெரிய பாத்திரம் நிறைய பால் இருப்பதைக் கண்டன. ஆனால் அது உயரமான பானை. இதனால் பாலைக் குடிக்க முடியாமல் எலிகள் திண்டாடின.

இதையடுத்து இரு எலிகளும் ஒரு முடிவுக்குவந்தன. ஓர் எலியின் மீது இன்னோர் எலி ஏறி பாலைக் குடிப்பது. அதன் பிறகு கீழே உள்ள எலி மேல் ஏறி பாலைக் குடிக்கலாம் எனத் திட்டமிட்டு அதை செயற்படுத்தின. அதன்படி மேலே உள்ள எலி பாலைக் குடித்தபோது கீழே இருந்த எலி கத்தியது "போதும்! நான் பால் குடிக்க வேண்டும்.."

கீழே இருந்த எலி போட்ட சத்தத்தைக் கேட்டு மேலே இருந்த எலி பால் பானைக்குள் விழுந்துவிட்டது. இதைக் கண்ட கீழே இருந்த எலி, "நல்லது, இனி எனக்குத்தான் எல்லாப் பாலும்" என்று நினைத்தது. பிறகு அந்தப் பானையைச் சுற்றி சுற்றி வந்தது. ஆனால் மேலே ஏற முடியவில்லை. கடைசியில் பசியால் அது செத்துப் போய்விட்டது.

**நீதி : துன்பத்தில் இருந்த விடுதலை அடைய மற்றவர்களின் ஒத்துழைப்புத் தேவை.**

# தென்னை மரம் நடுவோம்

புமலிங்கம்
(நவாலியூர்க் கவிராயர்)

நின்று உயர்ந்து வளர்ந்திடும்
நீண்ட ஓலை தந்திடும்
ஆன்ற வேரில் நின்றிடும்
ஆடி நடமே புரிந்திடும் !!

காலால் நீரை குடித்திடும்
காலம் சிலவாம் கழிந்த பின்
மேலால் இளநீர் தந்திடும்
மேன்மை பெற்ற தென்னையே!!

ஓலையில் வீடு வேயலாம்
ஓரம் தட்டி கட்டலாம்
சாலைதன் வேலி அமைக்கலாம்
சாந்து மாறும் செய்யலாம் !!

தேங்காய் உடைத்துத் துருவியே
தேவைக் குணவு சமைக்கலாம்
பாங்காய் சிறுபசி நீக்கவும்
பருவ வழுக்க லுண்ணலாம்!!

தென்னை வளமே பெருக்கிடும்
தெரிந்த மட்டில் பயன்படும்
நன்மை ஈக்கும் விருட்சமே
நன்கே மண்ணில் நடுவோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயக்கங்கள் இடையே முரண்பாடு

கூட்டமைப்பும் புலிகளும் 3

■ தயாளன்



ரெலோவை உருவாக்கிய முத்துக்குமாரசாமி



இக்காலகட்டத்தில் தமிழகத்தில் சில சம்பவங்கள் நிகழ்ந்தன. எம்.ஜி.ஆரை மலையாளி என வர்ணித்தார். கருணாநிதி. அவர் மலையாளி என்பதால்தான் ஈழத்தமிழர் விடயத்தில் போதிய அக்கறை காட்டுவதில்லை என்று கருணாநிதி சொன்னதும் பொறுமையிழந்துவிட்டார் எம்.ஜி.ஆர். காரமான பதில் கிடைத்தது அவரிடமிருந்து. "தமிழகத்தில் கைதானகுட்டிமணியை சிறிலங்கா பொலிசாரிடம் தனது ஆட்சிக்காலத்தில் கையளித்தவர்தானே கருணாநிதி" என்று எம் .ஜி .ஆர் சொன்னதும் வெலவெலத்துவிட்டார் கருணாநிதி.

அக்காலத்தில் குட்டிமணி பற்றிய செய்திகள் அடிக்கடி வெளிவந்து கொண்டிருந்தன. பிற்காலத்தில் மடுப்பகுதியில் புலிகளால் கொல்லப்பட்ட பொலிஸ் அதிகாரி பஸ்தியாம்பிள்ளையிடம்தான் குட்டிமணியை கருணாநிதி ஒப்படைத்திருந்தார்.

உடனடியாக குட்டிமணியின், இயக்கத்தினரைத் தேடிப்பிடிக்க உத்தரவிட்டார் கருணாநிதி. தனது கட்சி நிர்வாகிகளிடம், ராசப்பிள்ளை, சிறிசபாரத்தினம். ஒப்ரோய்தேவன், (பெரியவறுவா) சின்னவறுவா, சுதா, ரமேஷ் (சாரதி) ரூபன், முரளி உட்பட 10 பேர் மட்டுமே தமிழகத்தில் இருந்தனர். தற்போதைய நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவர் செல்வம் அடைக்கலநாதனும், மற்றொரு உறுப்பினரும் நாட்டில் இருந்தனர். இவ்வளவு பேரும்தான் ரெலோவின் முழுநேர உறுப்பினர்கள். பத்துப்பேரை மட்டுமே கொண்ட ஓர் இயக்கத்தை அதுவும் எம்.ஜி.ஆர் கட்சியினருடன் தொடர்பில்லாதவர்களோடு தொடர்புகொண்டமை கருணாநிதியின் திறமைதான். அந்தச் சந்திப்பு , பேசப்பட்ட விடயங்கள், ஏனைய விவகாரங்கள் குறித்து ரெலோ இயக்கத்திலிருந்து விலகி நாட்டுக்கு வெளியே இருப்பவர்களுக்குத்தான் தெரியும்.

### கருணாநிதியைக் காப்பாற்றிய சிறி

சில தினங்களின் பின் ஒரு அறிக்கை வெளியானது. அதில் "குட்டிமணி வேறொரு குற்றச்சாட்டின் பேரிலேயே கைதாகியிருந்தார். அவர் ஒரு போராளி என்பது அப்போது முதல்வராக இருந்த கருணாநிதிக்குத் தெரியாது. அதனால்தான் சிறிலங்கா அரசு கேட்டதும் அவரை ஒப்படைத்தார் கருணாநிதி" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. கீழே சிறிசபாரத்தினம் - செயலதிபர், தமிழீழ விடுதலை இயக்கம் எனக் காணப்பட்டது.

சிறிசபாரத்தினத்தின் கையொப்பம் குட்டிமணி, தங்கத்துரையின் இயக்கத்தின்பெயர் இதுதான் என உலகத்துக்குத் தெரியப்படுத்தியது. அதுவரை எந்த இடத்திலும் இந்தப் பெயர் பயன்படுத்தப்படவில்லை. தன்னைப் பெரும் இக்கட்டிலிருந்து காப்பாற்றிய ரெலோ இயக்கத்தவர் மீது கருணாநிதிக்கு ஒருபிடிப்பு ஏற்பட்டது. எம்.ஜி.ஆருடனான சந்திப்புக்கு முதல்நாள் தன்னைச் சந்திக்குமாறு பிரபாகரனை வேண்டியிருந்தார் கருணாநிதி. அவரது சித்து விளையாட்டு பிரபாகரனுக்குப் புரிந்துவிட்டது. "முதல்வருடனான சந்திப்பு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட விடயம். எனவே அதன்பின் கருணாநிதிக்கு வசதியான நாளில் சந்திக்கலாம்" என புலிகள் தரப்பில் பதிலளிக்கப்பட்டது. ஈழத்தமிழ் இயக்கங்களுக்கென உண்டியல் குலுக்கி ஒரு லட்சம் ரூபாவைக் கருணாநிதி சேகரித்தார். அதை ரெலோ, புலிகள், ஈ.பி. ஆர்.எல்.எவ். ஈரோஸ் ஆகிய நான்கு இயக்கங்களுக்கும் பகிர்ந்தளிக்கத் தீர்மானித்திருந்தார்.

தான் குறிப்பிட்ட நாளில் புலிகள் சந்திக்காததால் அவர்களுக்கென ஒதுக்கியிருந்த இருபத்தையாயிரத்தையும் ரெலோவுக்கே வழங்கினார். ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எப். என்பன தலா இருபத்தையாயிரத்தை வாங்கித் செல்ல ரெலோ ஐம்பதாயிரம் ரூபாவுடன் சென்றது. இதன்மூலம் தனது முதல் தெரிவு ரெலோதான் என உணர்த்தினார் கருணாநிதி.

(கருணாநிதி, சிறையில் இருந்த போது எழுதிய பாலைவன ரோஜாக்கள் திரைப்படத்தில் ஒரு பாத்திரத்துக்கு சபாரத்தினம் எனப் பெயரிட்டார். சிறிசபாரத்தினத்தின் மறைவின் பின் எழுதப்பட்ட இத்திரைப் படத்தில் சத்திய ராஜ், பிரபுபோன்றோர் நடித்தனர்.)

### குணத்துக்கு புலிகளின் சயனைட்

நாட்டில் இரு இயக்கங்களும் தனித்தனியே இயங்கினாலும், இந்திய அரசினதும், தி.மு.கவினதும் ஆதரவு தமக்கே உண்டு என்ற இறுமாப்பு ரெலோ இயக்கத்தினரிடம் இருந்தது. ஆனால் திருமலை, மட்டக்களப்பில் இது குறைவு. மட்டக்களப்பில் நல்ல புரிந்துணர்வு இருந்தது என்றே சொல்லலாம். அங்கு புளியந்தீவில் மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கைக்கு புலிகளுக்கு ரெலோவினர் படகுகொடுத்து உதவினர். ஒரு நடவடிக்கைக்கு புலிகள் இயக்கத்தினரிடம் ஆயுதம் கேட்டனர் ரெலோவினர் . "உங்களது முடிவில் எமக்கு உடன்பாடில்லை. ஒரு காலத்தில் நாங்கள் ஒன்றாகச் செயற்பட்டவர்கள் என்ற வகையில் எங்களது உறுப்பினர் ஒருவரிடம் துப்பாக்கியைக் கொடுக்கிறோம். அவர் சம்பவம் நடக்கப் போகுமிடத்தில் வைத்து அதைத் தருவார். உங்களது வேலை முடிந்ததும் அவரிடம் அதைத் திரும்பக் கொடுத்து விடவேண்டும். இதுவும் தற்துணிவின்பெயராலும் நட்பின் பேராலும் தான் தருகிறோம்" என மட்டக்களப்பின் அப்போதைய தலைமை தெரிவித்தது. அப்படியே அவர்களும் நடந்து கொண்டனர். அப்போதைய புலிகளது மட்டக்களப்பின் தலைமையை சிறிசபாரத்தினத்துக்குத் தெரியும். "புலிகளுடன் சேர்ந்து நீங்கள் எதாவது நடவடிக்கையில் ஈடுபடலாம்" என சிறிசபாரத்தினம் தமக்கு அனுமதி வழங்கியதாக ரெலோவினர் ஏற்கனவே தெரிவித்திருந்தனர் .

குறிப்பாக ஆரையம்பதியில் இருந்த ரெலோ போராளி குணம் என்பவர் புலிகளிடமிருந்து சயனைட் ஒன்றைப் பெற்றிருந்தார். ஒரு சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது தப்பமுடியாத நிலையில் ஆரையம்பதி முருகன் கோயிலுக்குள் வைத்து அதனை அருந்தி உயிர்நீத்தார்.

நிர்மலா நித்தியானந்தன் மட்டு சிறையிலிருந்து மீட்கப்பட்டு ஆரையம்பதிக்கே முதலில் கொண்டு வரப்பட்டிருந்தார். அன்று கண்ணகை அம்மன் சடங்கு, இந்த அமளிக்குள் இவரை இங்கு கொண்டுவந்து விட்டோமே என்று தலையைப் பிய்த்துக் கொண்டிருந்தபோது, தானும் புலிகளில் இணையப்போகிறேன் என்றார் குணம். ஆரையம்பதியில் இருந்த பிரதேசப் பொறுப்பாளர் மூலம் குணத்தைப் பற்றி ஏற்கனவே புலிகளுக்குத் தெரிந்திருந்தது. எனவே அவரை தமது இயக்கத்தில் சேர்க்க முடியாததற்கான காரணங்களை வெளிப்படையாகத் தெரிவித்தனர். புலிகள். "நீங்கள் வேறு எந்த இயக்கத்திலும் சேருவது பற்றி எமக்கு ஆட்சேபனை இல்லை. நாங்கள் உங்களுடன் நட்பாக இருப்போம்" எனவும் கூறினர்.

ஒரு தடவை ஆரையம்பதி முற்றுகையிடப்பட்டபோது புலிகளின் அப்போதைய மட்டக்களப்புத் தலைமையைத் துவிச்சக்கரவண்டியில் ஏற்றிக் கொண்டு காத்தான்குடிக்குள் கொண்டுபோய் காப்பாற்றியவர் குணம்.

### வடிகட்டிய பொய்

ஆனால் தற்போதைய கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஜனா (கோவிந்தம் கருணாகரன் ) சுதுமலை முற்றுகையின்போது புலிகளுக்கு எவ்வித இழப்புமில்லாமல் கிட்டு வைக் காப்பாற்றியது தானே எனச் சொல்வது வடிகட்டிய பொய். அந்த முற்றுகையில்தான் புலிகளின் முதலாவது லெப்டினன்ட் (கந்தையா ரூபநிதி) வீரச்சாவடைந்திருந்தார். இந்த விடயமே தெரியாமல்தான் ஜனா புழுகியிருக்கிறார்.

இன்று தாமே கூட்டமைப்பின் உருவாக்கத்துக்கு காரணம் எனப் புரளி கிளப்பும் ஊடகவியலாளர்கள் ஜனாவின் இந்தப் புளுகை நம்பி புலிகளை மட்டந்தட்ட முனைந்தனர். இந்த விடயம், இணையத்தில் வெளியாகி 24 மணிநேரத்துக்குள் அருணன் என்பவர் உண்மை நிலையை வெளியிட்டிருந்தார்.

### விசனமடைந்த புலி உறுப்பினர்

யாழ்ப்பாணத்தில் மருதனார்மடம், நெல்லியடி போன்ற இடங்களில் சிறுசிறு சச்சரவுகள் புலிகள் - ரெலோவினரிடையே நிகழ்ந்தன. ஆயினும் பெரியளவு பாதிப்பை ஏற்படாத வகையில் இரு தலைமைகளும் தங்கள் உறுப்பினர்களைக் கட்டுப்படுத்தி வைத்திருந்தன. 1986 ஏப்ரல் 29 அரியாலைப் பகுதியில் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த இவ்விரு இயக்க உறுப்பினர்களிடமும் முரண்பாடு ஏற்பட்டது. புலிகள் இயக்க உறுப்பினர்களை ரெலோ உறுப்பினர்கள் தாக்கினர். எனவே தாக்கப்பட்ட உறுப்பினர்கள் அரியாலையில் இருந்த 'நடா' முகாமுக்கு தொலைத் தொடர்பு மூலம் விடயத்தைத் தெரிவித்தனர். உடனே அங்கு விரைந்தார் பொறுப்பாளர் நடா. புலிகளைத் தாக்கிய டெலோ உறுப்பினர்கள் துவிச்சக்கரவண்டியில் வந்து கொண்டிருப்பதைக் கண்டதும் அவர்களைப் பிடித்தார். அடிக்கவும் செய்தார். இதனால் புலிகளுக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டுமென ரெலோவினர் முடிவெடுத்தனர்.

அப்போது தமது கோட்டையாக அவர்கள் கருதிக்கொண்ட கல்வியங்காட்டில் புலிகள் எவராவது அகப்பட்டாலும் பிடிப்பதெனத் திரிந்தனர். சரா என்ற புலி உறுப்பினரைக் கண்டதும் அவரைப் பிடிக்கலாமென நோட்டமிட்டனர். ஆனால் கிட்ட வந்து பார்க்க முடியவில்லை. ஏற்கனவே ஒரு பிரச்சினையில் சரா கூட்டமாக வந்த ஈ.பி. ஆர்.எல்.எவ் உறுப்பினர்களைத் தனது துணிச்சல் மூலம் மிரட்டியனுப்பிய சம்பவம் இவர்களுக்குத் தெரியும். சராவும் கல்வியங்காட்டைச் சேர்ந்தவர்தான். ஜெர்மனியிலிருந்து இயக்கத்தில் இணைவதற்காக இந்தியாவுக்கு வந்தவர். மூன்றாவது முகாமில் பயிற்சி பெற்றவர். சராவை நெருங்க முடியாததற்கு இன்னொரு காரணம் அந்தப் பகுதியில் இருந்த மக்கள் அவரது உறவினர்கள் என்பது.

(23ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நடிகராகி விட்ட இசையமைப்பாளர் ஜி.வி. பிரகாஷ் வசம் தற்போது ஏராளமான படங்கள் உள்ளன.

ரவி அரசுவின் இயக்கத்தில் "ஐங்கரன்" படத்தில் நடிக்கிறார். இந்தப் படத்தில் நாயகியாக நடிக்க "காதலும் கடந்து போகும்" பட நாயகி மடோனா செபஸ்டியனை அணுகியுள்ளனர்.

ஏனோ தெரியவில்லை அவர் நடிக்க மறுத்து விட்டார். இந்நிலையில் "சாட்டை" மகிமாவை நாயகியாக ஒப்பந்தம் செய்துள்ளனர்.



ஜி.வி.பிரகாஷ் நடிக்கவுள்ள புதிய படத்துக்குச் சுப்பர் ஸ்டார் ரஜினியின் படத் தலைப்பு வைக்கப்பட்டுள்ளது. 1979 ஆம் ஆண்டு வெளியான "குப்பத்து ராஜா" என்ற படத்தின் பெயரே புதிய படத்துக்கும் வைக்கப்படவுள்ளது.

ஜீ.வி.பிரகாஷ் நடித்து சமீபத்தில் வெளியான படம் "எனக்கு இன்னொரு பேர் இருக்கு". இது ரஜினிகாந் நடித்த படமொன்றின் பிரபலமான வசனமாகும்.



எந்திரன் படத்தின் இரண்டாம் பாகமான '2.0" படத்தில் நாயகியாக நடிக்கிறார் எமி ஜாக்சன்.

விலங்குகள் நல ஆர்வலரான இவர் விலங்குகள் மீது நடத்தப்படும் கொடுமைகளை வெளிப்படுத்தும் குறும்படம் ஒன்றைத் தயாரிக்கவுள்ளார்.

இந்தப் படத்தில் அவர் நடிக்காத போதிலும், தனது அனுபவங்களை குரல் வடிவில் வெளிப்படுத்தவுள்ளார். மேலும் இந்தக் குறும்படத்தில் சில உண்மைச் சம்பவங்களும் இணைக்கப்பட்டுள்ளதாம்.




மலையாள பட உலகின் ...
திகழ்பவர் நடிகர் மம்முட்டி...
தமிழ் ரசிகர்களுகம் உள்ளன...

மம்முட்டியின் நடிப்பில் ...
வெளியாகியுள்ள படம் கிரே...
திகதி வெளியாகிய இந்தப் ப...
முன்பே அதன் முக்கிய காட்...
வெளியாகி விட்டன.

இதனால் அதிர்ச்சியடை...
பாதர் சைபர் க்ரைம் பொலி...
செய்துள்ளது.





நடிகர் சிம்பு, அஜீத்தின் தீவிர ரசிகர் என்பது அனைவரும் அறிந்ததே. இந்நிலையில் விஜயுடன் சிம்பு படம் ஒன்றில் இணையவுள்ளார். இதில் அவர் இணைவது நடிகராக அல்லவாம் இசையமைப்பாளராகவாம்.

சந்தானம் நடிக்கும் "ஓடி ஓடி உழைக்கணும்" படத்துக்காக இசையமைப்பாளரானவர் சிம்பு. இப்போது விஜயின் படத்துக்கு இசையமைக்கவுள்ளார் எனச் செய்தி பரவியுள்ளது.

'வாலு' பட ரிலீஸின் போது ஏற்பட்ட பிரச்சினையில் விஜய், சிம்புவுக்கு உதவினார். இதைத் தொடர்ந்து இருவருக்கும் இடையே நெருக்கம் அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



"ஆடுகளம் ...
அறிமுகமான...
ராஜா வை" ...
அவரு...
ச...

ஹி...
"தி கா...
படங்க...
இப்பட...
பெயரைப்...
இந்நிலையி...
படம் மூலம் த...
வரவுள்ளார்.

ஹிந்தியில் ...
சபானா" படத்...
"நான்தான் சப...
படத்திற்காக ...
கலைகளை கற்...
அசத்தியுள்ளா...



"சகுனி", "எனக்கு வாய்த்த அடிமைகள்" படங்களில் நடித்தவர் பிரணிதா. எதிர்பார்த்தளவு படங்கள் கிடைக்காத நிலையில் தொழிலதிபராவதற்கான முயற்சிகளை எடுத்து வருகிறார்.

இதன்படி ஹோட்டல், கிளப் கட்டுவதுடன், வெளிநாட்டு மது வகைகளை விற்பனை செய்யவும் அவர் முடிவு செய்துள்ளார்.

இது குறித்து பிரணிதா கூறுகையில் "நான் குறைந்த வயதிலேயே நடிக்க வந்து விட்டேன். அதுபோலவே வியாபாரத்திலும் விரைவாக கால் வைத்துள்ளேன். ஆனாலும் நடிப்பைத் தொடர்வேன்" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பர் ஸ்டாராக
இவருக்கு ஏராளமான

ந்போது
பாதர். 30 ஆம்
ம் திரைக்கு வரும்
ள் 29 ஆம் திகதியே

படக்குழு கிரேட்
டம் முறைப்பாடு




"ட்ரிபிள் எக்ஸ்" படம் மூலம் ஹொலிவூட்டில் அறிமுகமானவர் தீபிகா படுகோன். ஆனால் அங்கு தாக்குப் பிடிக்க முடியாமல் படங்களுக்கு முழுக்குப் போட்டுவிட்டு பொலிவூட்டுக்குத் திரும்பியிருக்கிறார் அவர்.

இதேவேளை சர்வதேச திரைப்பட விழாவான கேன்ஸில் விருந்தினராகப் பங்கேற்க வந்த வாய்ப்பையும் அவர் உதறிவிட்டாராம்.

ஆனால் இவருக்கு முன்னர் ஹொலிவூட் படங்களில் அறிமுகமான பிரியங்கா சோப்ரா தாக்குப் பிடித்து நடித்து வருகிறார்.



ஐஸ்வர்யா அர்ஜுன் தனது தந்தையின் இயக்கத்தில் "காதலின் பொன் வீதியில்" படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தில் சாந்தன் என்பவர் புதுமுக நாயகனாக நடிக்கிறார்.

இந்தப் படத்தில் ஐஸ்வர்யா பத்திரிகையாளராக நடிக்கிறார். இந்தப் படத்தில் அவருக்கும் நாயகனுக்கும் சம அளவு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாம்.

படம் மூலம் தமிழில்
டாப்ஸி. "வை
த்துக்குப் பிறகு
த தமிழில் வாய்ப்புகள்
டைக்கவில்லை.

இதனிடையே
யில் "பிங்க்",
" என அதிரடிப்
ல் நடித்தார்.
ள் அவருக்கு நல்ல
பற்றுக் கொடுத்தன.
"நான்தான் சபானா"
ழில் மீண்டும்

வளியான "நாம்
ன் தமிழ் வடிவமே
னா". இந்தப்
சண்டைக்
அக்ஷன் காட்சிகளில்
ம்.



செல்வராகவனின் இயக்கத்தில் வெளிவந்த 'ஆயிரத்தில் ஒருவன்', 'புதுப்பேட்டை' படங்கள் வணிக ரீதியில் வெற்றி பெறாவிட்டாலும் பெரும் வரவேற்பைப் பெற்றவை.

கடந்த இரு வருடங்களாக படங்கள் எதையும் இயக்காததால் இந்த இரு படங்களினதும் இரண்டாம் பாகத்துக்கான கதைகளை எழுதி முடித்து விட்டதாக செல்வராகவன் கூறியுள்ளார்.

எனினும் வேறு பணிகள் இருப்பதால் இப்போதைக்கு இந்த இரு படங்களையும் இயக்கப்போவதில்லை எனவும் அவர் சொன்னார்.



ஆதிக் ரவிச்சந்திரனின் இயக்கத்தில் சிம்பு 3 வேடங்களில் "அன்பானவன் அசராதவன் அடங்காதவன்" படத்தில் நடிக்கிறார்.

இதில் சிம்புவுக்கு ஜோடியாக ஸ்ரேயா, தமன்னா நடிக்கின்றனர். மூன்றாவது நாயகியாக சிலம்பாட்டம் படத்தில் நடித்த சனாகான் நடிக்கவுள்ளார்.

இப்படத்தில் மூன்று பாத்திரங்கள் தவிர நான்காவதாகவும் ஒரு பாத்திரம் உள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.



தியா சென்றுள்ள மலேசியப் பிரதமர் நஜீப் ரஸாக் நடிகர் ரஜினிகாந்தை சந்தித்துப்
ருக்கிறார்.

லசியப் பிரதமரும் அவரின் குடும்பத்தினரும் ரஜினியின் தீவிர ரசிகர்கள். 'கபாலி'
டிப்புக்காக அங்கு ரஜினி சென்றபோதும் அவரை சந்திக்க முடியாத நிலையில் பிரதமர்
ார்.

நிலையிலேயே இந்தியா சென்ற மலேசியப் பிரதமர் ரஜினியை சந்தித்துப் பேசியுள்ளார்.
டையே "மலாக்கா நகரின் சுற்றுலாத் தூதராக தான் நியமிக்கப்பட இருக்கிறேன் என்ற
உண்மையல்ல" என்றும் ரஜினி தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கீடு

சிறுகதை

குந்தவை



ஓய்வற்ற நெடு நடப்பு அவளின் பயணம்.

உலக மொழிகள் எல்லாம் சேர்ந்து, பெண்மையின் ஒவ்வொரு லட்சணமாகப் பார்த்து உருவாக்கிய நிறை அழகுத்துவம் அவளின் மேனி.

காலதேவனின் பல்வேறுவகைத் தாக்குதல்களையும் தாண்டிச் சுடரும் ஒளித்தூய்மை, அவளின் அறிவு.

வளமான பராமரிப்பின் திரட்சி தன்னிச்சையாக ஒளிரும் ஞானச் செருக்கு, இரண்டும் கொண்ட அவள் இலக்கியக் கன்னி.

அவள் இப்பொழுது அடி எடுத்து வைத்த புது யுகப் பாதை - மற்றவர் சிந்தனைக்கு மதிப்பளித்துப் போற்றும் உன்னத பாதை.

ஆனாலும் என்ன? இப் பாதையில் யாரும் தன்னைக் குறுக்கிடத் துணியார் என்ற நினைப்பு, ஒரு கணத்தில் தீய்ந்து பொய்யாகின்றதே.

தூரத்தே வழி மடக்கி, குடைக் கவிப்பாய் கப்பும் கருமை.

அது புயலோ இருளோ அல்ல, இயற்கையின் எவ்வித உற்பாதமுமல்ல.

அது, அவளை மடக்கி, மூச்சை இறுக்கி ஒடுக்கிட வெறியிட்டுப் பாய்ந்து வரும் விஷப்புகை மனித முனைப்பின் ஒரு விளைவு.

நாரீகத்தின் முதிர்ச்சியைக் கண்டு விட்டதாகக் கூறும் இந்தக் காலத்திலுமா இந்தக் காட்டுமிராண்டித் தனமான, மிலேச்சச் செய்கை?? புகைக்கு விளிம்பு கட்டும் செம்மையின் கோர நிறம், அபாயத்தை மட்டும்தானா காட்டுகிறது??

உலகத்தின் எந்த மூலையில் இதன் தோற்றுவாய் உருவாகின்றது? கன்னி, அதைத்தேடி கண்களை ஓடவிடுகின்றாள்.

உலகத்தில் ஒரு மூலையில் அல்ல, ஒரு பெரு வல்லரசின் நட்ட நடுப்பகுதியிலே -- ஆனால், சுற்றிக் கனக்கும் இரும்புத் திரையின் உள்ளே, அது நடக்கின்றது.

தன் நோக்கில் அக்கால நாட்டின் நடப்பை யதார்த்தமாகக் கொண்டு நிறைவான ஓர் இலக்கியத்தைப் படைத்துவிட்ட ஒருவன் - கன்னியில் ஒரு "மயன்".

அவன் எதிரே, மனித, உணர்வுகள் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தி வழி நடத்தலாமென நம்பும் ஆட்சியின் அங்கமான இலக்கியக் கழகம், அதன் கையால் அச்சேற்றுமாறு கோரி, அவன் சமர்ப்பித்த அந்தப் படைப்பு.

"சொந்த மூளையோடுதான் இதை எழுதினாயா?" பாவம்! சொந்த மூளையையே சிந்திக்க வைக்கக் காட்டித் தருபவர்கள் இவர்கள் தான் என அவனுக்குத் தெரியாதா?

" அரை குறை நோக்குடன் எழுதப்பட்ட அர்த்தமற்ற நூல் இது. வெறும் குழப்பத்தேயே தரும். ஆகவே, இது வெளியானால் ஆட்சியாளர் உன்னை நசுக்கிவிடுவர். ஆகவே உன் நன்மைக்கே சொல்லுகின்றோம். இதை நீ தான் எழுதியதாக ஒருவருக்கும் தெரிய வேண்டாம்.. மறைந்து வாழ்."

நிறைவையும் ஆவலையும் தேக்கி வந்தவன். இப்பொழுது கிலியுண்டவனாய் திரும்பிச் செல்கின்றான்.

ஆவேசமாகத் திரண்டு அமுக்க வரும் அந்தக் கரிச் சேற்றினையே அவள் பார்த்தபடி நிற்கின்றாள்.

அவளை, என்றுமே, விழிப்புற்றுக் காக்கும் அவளின் அறிவொளி, மாந்தரின் சிந்தனைப்பலம் இப்பொழுது எங்கே? இதன் தீவிரத்தைக் கண்டு செயலிழந்து விட்டதா??

இல்லை! அதோ! அந்த நாட்டு ஆட்சியாளரைக் குரு பீடமாகக் கொண்ட சிலர் உட்புகுவதற்காக நாட்டின் இரும்புத்திரை தூக்கப்படுகின்றது.

கன்னி கவனிக்கின்றாள்.

அவர்களில் ஒருவன்... பயிற்றப்பட்டவனாயின்றி, தானாகவே சிந்திக்கத் தெரிந்தவன். அந்த மயனைச் சந்தித்து விடுகின்றான். நூலின் மறு பிரதி கை மாறுகிறது.

கன்னி பரபரப்புடன் காத்திருக்கின்றாள், அது பத்திரமாக நாட்டின் எல்லைக்கப்பாலும் வந்து விடுகின்றது.

கன்னி வெற்றிப் பெருமிதத்துடன் நிமிருகின்றாள். எதிரே சக்திக் குழம்பல், கலைந்து கொண்டிருக்கின்றது... பனிமலையாக.

ஆனாலும், அது கலையும் வேகச் சூழலில் யாரோ... அவனே தான், சிக்கித் திணறுவது போல அவளுக்குத் தெரிவது, வெறும் உருவெளித் தோற்றம் தானா??

கீழே, கீழே நிலைக்கும் அவளின் பார்வையில் தோற்ற ஆட்சி பீடத்தின் அமுக்குப் பிடிக்குள் கசங்கும், அவன்.

"ஏன் கொடுத்தாய்?" திரும்பி வாங்க முடியுமா அது? நீ படைப்பாளியல்ல."

மந்திரம்போல இது திரும்பத் திரும்ப ஒலிக்க அவள் மூளையைச் சுத்தமாக்கும் முயற்சி.

வெளியே, இலக்கியப் பரிசும், உலகப் பாராட்டும் வந்து குவிகின்றன. உள்ளே, இடிபாடுகளுக் கிடையிலும் அவன் முணு முணுக்கிறான்.

"இலக்கிய உலகும், வரலாறும் என் படைப்பை ஏற்று என்னைச் சிரஞ்சீவியாக்கிவிட்டன. இனி, என்னுடன் என்னதான் பட்டாலு மென்ன, இது மிருதுவாகி, கன்னியின் காதுக்கு மனமான அர்ச்சனையாகின்றது."

அவளின் முன், தெளிவான பாதை நீண்டு கிடக்கின்றது.

( யோகம் இருக்கிறது - சிறுகதைத் தொகுதியிலிருந்து - 2002 )

## சே.யுடனான உறவு முறிந்தபோது



சே.யுடனான உறவு முறிந்தபோது
வெளியில் எறிவதற்கு
ஒரு பெருமூச்சாவது என்னிடம்
இருக்கவில்லை

இந்த அறை வாசல் படியை
அவனது கால்கள் தாண்டிய
நொடிப்பொழுதிலேயே
அவனது நினைவிலிருந்து
நான் அழிந்து போகிறேன்

'திறந்து வைக்கப்பட்ட
கற்பூரப் பெட்டியிலிருந்து
வெளியேறிய வாசனை போல
நான் விலகி விட்டேன்'
என்று எழுதி வைத்துவிட்டுப்
படுக்கையறைக் கட்டிலின் கீழ்
புதைந்து கொள்கிற துணிவு
யாருக்கு வரும்?

அவனுக்கு. அவனோ
வேட்கையின் விசுவரூபம்
ஆயிரம் கோடி மயிர்க்கால்களிலும்
அன்பு நேசம்
இன்னுமின்னுமெனும்
ஆசை கசியும் கவிஞன்
இருக்கும் வரையில் இனியன்.

காதல் கறைப்படுத்திய படுக்கை
விரிப்புக்களையும்
சுக்கிலம் தெறித்துச் சிக்குண்ட
கூந்தலையும்
வெந்நீரில் தோயவிட்டு
வெளியில் வந்தபோது
அவனுடைய
வியர்வைத் துளியையும்
காணவில்லை.

அவன் மல்லாந்து கிடந்த
இடத்தில்
குலைந்து போயிருக்கிறது
ஒரு கனவு
அவன் நடந்து சென்ற வெளியில்
தெளிவற்ற சில முணுமுணுப்புகள்
மிதக்கின்றன :
'அச்சம் தருகிறது காதல்'
கலவியின் பின்
மெல்லிய,
வெட்கங் கெட்ட குரலில்
அவனுடைய வழமையான
மந்திரம்.

போய் வா,
உடைந்த கண்ணாடித் துண்டே
உனது அச்சம் வேறு
எனது அச்சம் வேறு.

- சேரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதினப்பூங்கா




# போலி வாழைப்பழங்களில் போதைவஸ்துகள்

இன்றைய நாள்களில் நேர்வழியில் உழைப்பதை பலர் தவிர்க்கிறார்கள். வேகமாகவும், அதிகமாகவும் குறுக்கு வழியில் அதிகம் சம்பாதிக்கும் ஆசையே பலரிடம் மேலோங்கி நிற்கின்றது. உடம்பை அதிகம் வருத்த விரும்பாத பேர்வழிகள் இவர்கள்.

குறுக்கு வழிச் சம்பாத்தியத்தில் இன்று முன்னிற்பது போதைவஸ்து கடத்தல்தான். கரணம் தப்பினால் மரணம் என்பது எல்லோருக்குமே தெரிந்த கதைதான், என்றாலும் பண ஆசை யாரைத்தான் சும்மா விட்டுவைக்கின்றது?

ஐரோப்பிய நாடுகளுக்கு தென் அமெரிக்க நாடுகள்தான் வாழைப்பழ விநியோகம் செய்து வருகின்றன. சமீப காலங்களில் ஸ்பெயின் நாட்டு சுங்க அதிகாரிகள் போலி வாழைப்பழங்களில் பதுக்கி அனுப்பப்படும் போதைவஸ்துக் களைக் கைப்பற்றி வருகின்றார்கள்.

கடந்த ஞாயிறன்று தொகையாக வந்த வாழைப்பழங்களுக்குள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 37.5 இறாத்தல் எடையுள்ள கொக்கேயினைக் கைப்பற்றி இருப்பதோடு இது சம்பந்தமாக இருவரைக் கைதுசெய்துள்ளார்கள். போலி வாழைப்பழங்களுக்குள் ஒளித்து வைக்கப்பட்ட 15கிலோ கொக்கெயின் இத்தொகையில் உள்ளடக்கம். இப்படியான கடத்தல்கள் கடந்த நவம்பரில் மலாக்காவிலும் இத்தாலிய கரையோர நகரான வலன்சியாவிலும் சுங்க அதிகாரிகளால் மடக்கப்பட்டன. இன்றைய நாள்களில் ஐரோப்பிய நாடுகளுக்குள் போதை வஸ்தைக் கொண்டுவர ஸ்பானியா ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நாடாக இருந்து வருவதையே இந்தக் கைதுகள் எமக்கு தெளிவாக உணர்த்துகின்றன.

2016இல் வெளிவந்த ஓர் அறிக்கையின்படி 2011-14 காலகட்டத் தில் பிடிபட்ட கொக்கெயினை ஸ்பெயின், பெல்ஜியம், பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகள் ஊடாகவே கொண்டுவந்துள்ளார்கள். இதில் 50 வீதமானவை ஸ்பெயின் ஊடாகவே வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சென்ற மாதம் 5291 இறாத்தல் எடை கொண்ட கொக்கெயின் பிடிபட்டிருப்ப தோடு கொக்கெயின் கடத்தல் கும்பலின் 24 அங்கத்தவர்கள் வகையாக மாட்டிக் கொண்டுள்ளார்கள். கடந்த டிசெம்பரில் 5,677 இறாத்தல் எடை கொண்ட கொக்கேயினுடன் அறுவர் ஸ்பானிய அதிகாரிகளிடம் சிக்கி உள்ளார்கள்.

கொக்கோ உற்பத்தி செய்யும் பொல் வியா, கொலம்பியா, பெரு ஆகிய தென் அமெரிக்க நாடுகளை விட உலகின் மிக மலிவான கொக்கெயின், பிரே[illegible] நாட்டில் ஒரு கிராம் பத்து டொல[illegible] விலையில் கிடைக்கின்றது .



# நாட்டின் நடுவே (மெகா) நகரம்

நீயா நானா என்ற பலப் பரீட்சையில் சீனா நாலு கால் பாய்ச்சலில் ஓடிக் கொண்டிருக்கின்றது. அமெரிக்கா , ஜேர்மனி என்று பலம் வாய்ந்த நாடுகளுடன் போட்டி போட்டுக்கொண்டு பொருளாதார ரீதியாக பலத்த வளர்ச்சியைக் கண்டு வருகின்றது சீனா .

புதிய முயற்சியாக சீனாவில் மெகா நகரம் ஒன்று எழும்பப் போகின்றது. சீன சனத்தொகையின் பத்தில் ஒரு பகுதியினரைக் கொள்ளக் கூடியதாக இந்த நகரம் அமையும் என்கிறார்கள் அதாவது 100 மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் அங்கு வாழப் போகிறார்கள். அந்த இராட்சத நகரம் பிரித்தானியாவை விட பெரிதாக இருக்கப்போகின்றது என்கிறார்கள் . லண்டன் மாநகரை விட 137தடவைகள் பெரிதாயிருக்கும் என்று எம்மை ஆச்சரியப்பட வைக்கின்றார்கள்.

போக்குவரத்து விடயத்தில் பெரிதும் கவனம் எடுத்து 2020ஆம் ஆண்டளவில் வேகமாக ஓடக் கூடிய ரயில் நிர்மாணப் பணிகளை முடித்து விடுவது என்று அதிகாரிகள் திட்டமிட்டுள்ளார்கள் . சீனாவின் வட கிழக்கு பிராந்தியத்தில்தான் இந்த நகரம் உருவாகப் போகின்றது. பல நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து ஒரு பெரிய நிறுவனம் உருவாகுவது போல பெய்ஜிங்(20மி.), டியான்ஜின் (13மி.) போன்ற பெரிய நகரங்களின் மொத்த சனத்தொகையும் இன்னும் சில நகரங்களின் சனத் தொகையும் ஒன்றாக்கப்படும்.

Jing-Jin-Si என்று அழைக்கப்பட வுள்ள இந்த பிராந்தியம் 83, 403 சதுர மைல் விஸ்தீரணம் கொண்டதாகவும் பிரித்தானியாவை விட 3000 சதுர மைல் அளவு கூடுதல் கொண்டதாகவும் இருக்கும் என்று சொல்லப்படுகின்றது.

கடந்த வருடம் 5தூண் தொழில் பேட்டைகள் என்று வர்ணிக்கப்படும் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து சூழல், மனிதவளம் ஆகியவற்றுக்காக 40பில்லியன் பவுண்ட்ஸ் தொகை அரசால் முதலிடப்பட்டுள்ளது. கடந்த நவம்பரில் 29 பில்லியன் பவுண்ட்ஸ் தொகையை 700மைல் நீளமான ரயில் பாதையை மூன்று வருடங்களுக்குள் நிர்மாணிக்க அரசு அங்கீகாரம் வழங்கி இருக்கின்றது.

2022 இல் பனிக்கால ஒலிம்பிக் விளையாட்டு இடம்பெறப்போவது சிறப்புச் செய்தி.



# எபோலா எமன்

எபோலா பற்றி உங்களில் எத்தனை பேருக்கு தெரியும்? விஞ்ஞானம் நன்றாகவே வளர்ந்துவிட்டதால் இந்த எபோலா என்ற வியாதியால் பீடிக்கப்பட்டவர்கள் பேயடித்து இரத்தம் கக்கி இறந்தார்கள் என்று சொல்லப் போவதில்லை. பழம் தின்னும் வெளவால்கள் மூலம் மனிதருக்கு தொற்றிய இந்தப் பொல்லாத வியாதி வந்தால் அகமும் புறமும் இரத்தம் ஓட நோயாளி சாகடிக்கப்பட்டு விடுவார் .

இந்த வியாதி மனிதர்களை மட்டுமல்ல சிம்பன்சிகளையும் கொன்று அழித்துள்ளது. உலகின் மூன்றிலொரு தொகை கொரில்லாக் குரங்குகளை இந்த நோய் அழித்துள்ள நிலையில் புதியதொரு மருந்தைக் கண்டுபிடித்துள்ளதாக விஞ்ஞானிகள் அறிவித்துள்ளார்கள். சிம்பன்சிகள் உண்ணும் உணவில் இந்த மருந்தைக் கலந்து கொடுத்தால் போதும். தடுப்பூசி போடத் தேவை யில்லை என்கிறார்கள் மருத்துவர்கள். ஆயிரக்கணக்கான குரங்குகள் இந்த நோயால் பீடிக்கப்பட்டு அழிந்த நிலையில் இந்த மருந்தின் அறிமுகம் ஓர் அற்புதம் என்றே சொல்லத் தோன்றுகின்றது.

அன்று 'சையர்' என்று அழைக்கப்பட்ட இன்றைய கொங்கோ குடியரசில் 1976ஆம் ஆண்டு முதற்றடவையாக இந்த நோய் கண்டுபிடிக்கப்பட்டது. 2014இல் மேற்கு ஆபிரிக்க நாடுகளில் பரவிய எபோலா சரித்திரத்தில் மிகப் பெரிய அளவில், 11,300 பேருக்கு அதிகமானவர்களைக் கொன்றழித்து கிலியால் பலரையும் ஆட்டுவித்ததை எவரும் மறுப்பதற்கில்லை. கொரில்லாக் குரங்குகளும் பெருமளவு கொல்லப்பட்டன. பழம் தின்னும் வெளவால்கள் முதலில் குரங்குகளைத் தாக்கின. இவற்றின் இறைச்சியை உண்ட மனிதர்கள் எபோலா தொற்றியதால் நோயால் கொல்லப்பட்டார்கள். கொங்கோ குடியரசின் எபோலா நதி அருகே உள்ள ஒரு கிராமத்தில் இந்த நோய் முதல் ஆரம்பித்தால் 'எபோலா' என்ற பெயர் இந்த நோயோடு ஒட்டிக் கொண்டு விட்டது.

# எடு தடி பெண்டாட்டிக்காக

"பறவைகள் பலவிதம், ஒவ்வொன்றும் ஒரு விதம்" என்ற பழைய சினிமாப் பாடல் வரிகள் உங்களில் சிலருக்கு ஞாபகத்தில் இருக்கலாம். நாட்டுக்கு நாடு மொழி கலாசாரம் மட்டுமல்ல அவர்கள் நடை உடை பாவனையிலும் பெரிய மாற்றங்கள் இருப்பதை நாம் அவதானிக்கலாம். ஒருவரின் உடையைப் பார்த்து இவர் இந்த நாட்டவர் என்றுகூடச் சொல்ல முடி கின்றது.

ஆபிரிக்க நாடுகள் பல விசித்திரங் களைக் கொண்டவை. எத்தியோப்பியா நாட்டின் கிராமப்புற வாழ்க்கை பல சடங்குகளை அனுஷ்டிக்கும் விநோத பழக்கவழக்கங்கள் கொண்ட கிராம மக்களைக் கொண்டுள்ளன.

தென் மேற்கு எத்தியோப்பியாவில் உள்ள ஓர் இன மக்கள் தங்கள் உடம் பில் வடுக்களை ஏற்படுத்துவதில் முனைப்பாக இருக்கிறார்கள். 'சூரி' இனத்தவர்கள் என்று இவர்கள் அழைக்கப்படுகின்றார்கள்.
உதடுகள் நீளமாக இருக்கவேண்டும் என்பதற்காக பாரமான பொருள்கள் இணைத்துக் கட்டப்படுகின்றன . யார் பெண்ணாள்வது என்பதைத் தீர்மானிக்க ஆபத்து நிறைந்த கோல் சண்டைகளில் ஈடுபடுகின்றார்கள் .

தங்கள் கீழ் உதடுகளில் துளையிட்டு களி மண்ணினால் செய்த தட்டுக்களை போகும் இடமெல்லாம் காவிக் கொண்டு திரிகின்றார்கள் அங்குள்ள பெண்கள். நீளமான உதடு இருப்பது தங்கள் அழகுக்கு ஓர் இலட்சணம் என்று இவர்கள் நம்புகின்றார்கள். எவ்வளவுக்கு உதடு பெரிதாக இருக்கிறதோ அந்த அளவுக்கு பெரிய பசு ஒன்றை தன் மகளுக்கு சீதனமாக பெண்ணின் அப்பாவால் கேட்க முடியும் .

இவர்கள் வாழ்வின் தரத்தை இவர்கள் சொந்தமாக வைத்துள்ள கால்நடைகளே தீர்மானிக்கின்றன. இவர்களின் மிகப் பெரிய செல்வம் வீட்டில் உள்ள பசுக்கள் தான்! ஒரு சாதாரண மனிதனிடம் 30 தொடக்கம் 40 பசுக்கள் வரை இருக்கும். திருமணத்தின்போது தன் மனைவிக்கு கொடுக்க மாப்பிள்ளைக்கு 60பசுக்கள் வரை தேவைப்படும். நன்கு கவனிக்கவும். இங்கே சீதனம் வாங்குவது பெண் வீட்டார்தான் !

தங்கள் தோலை [illegible] முட்களால் உயர்த்தி உடம்பில் வடுக்களை உண்டாக்குவது இவர்கள் வழமை . பெண்கள் தங்கள் உடல் வடுக்களை ஆசை யோடு பார்த்து ரசிக்கின்றார்கள்.

'டொங்கா' என்று அழைக்கப்படும் தடிச் சமர் ஆண்களுக்கு உரியது, நீண்ட தடிகளுடன் ஒரு பெண்ணுக்காக ஆக்ரோஷமாக மோதிக் கொள்வார்கள். சண்டையில் மரணமும் நிகழ்வ துண்டாம் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ‘9ஏ’ அடைமழைக்கு காரணம் என்ன?

## வேம்படி மகளிர் கல்லூரி அதிபருடன் சந்திப்பு

அண்மையில் வெளியான க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த 52 பேர் தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் “9ஏ” பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். வடமாகாணத்திலேயே அதிகமானவர்கள் “9ஏ” பெறுபேறுகளைப் பெற்ற பாடசாலையாக இந்தப் பாடசாலை சாதனை படைத்துள்ளது. இங்கு பரீட்சைக்குத் தோற்றிய 240 மாணவிகளில் 239பேர் உயர்தரத்தில் கல்வி கற்பதற்குத் தகுதியைப் பெற்றுள்ளனர்.

இப்படி மாரி மழை போல ‘9ஏ’ பெறுபேற்றை மாணவிகள் பெற்றமை தொடர்பாக யாழ்.வேம்படி மகளிர் பாடசாலையின் அதிபர் திருமதி வேணுகா சண்முகரத்தினம் ‘புதுவிதி’க்கு வழங்கிய செவ்வி.

சந்திப்பு : **அ.றொக்ஷன்**

**கேள்வி:** வடமாகாணத்திலேயே அதிகூடிய பிள்ளைகள் உங்களுடைய பாடசாலையில் தமிழ்மொழி மற்றும் ஆங்கிலமொழி மூலம் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றி “9ஏ” பெறுபேற்றைப் பெற்றுச் சாதித்துள்ளனர். இது அவர்களால் எவ்வாறு சாத்தியமாயிற்று?

**பதில் :** 2016 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையை எழுதிய மாணவிகளின் தனி ஆளுமை இவ்வருடம் வெளிப்பட்டுள்ளது. யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளரின் வழிகாட்டலின்படி ஆசிரியர்களின் தனி ஆளுமை வெளிக்காட்டப்படுவதும், கௌரவிக்கப்படுவதும் இங்குள்ள க.பொ.த. சாதாரணதர அலகைச் சேர்ந்த ஆசிரியர்கள் மட்டத்தில் ஒரு ஊக்குவிப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஆண்டுகளில் மாணவிகள் க.பொ.த. சாதாரண தரத்தில் பெற்றுக்கொண்ட சாதனைகளைப் பாராட்டி அவர்களின் புகைப்படங்களை இங்கு காட்சிப்படுத்தியிருந்தமையும் மாணவிகளின் இச்சாதனைக்கு காரணமாக அமைந்துள்ளது. 2012 இல் இக்காட்சிப்படுத்தலை ஆரம்பித்திருந்தோம். இதனைத் தொடர்ந்து சாதாரணதரத்தில் வளர்ச்சி வேகம் அதிகரித்துள்ளமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. தரம் 5 க்கான புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களை காட்சிப்படுத்த வேண்டாம் என்று கல்வித்திணைக்களம் அறிவித்தல் வழங்கியுள்ளது. க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தரத்திற்கு அவ்வாறான கட்டுப்பாடுகள் விதிக்கப்படாமையினால் நாம் அவர்களின் பெறுபேறுகளை தொடர்ந்து காட்சிப்படுத்தி வருகின்றோம்.

பெற்றோருக்கும், பாடசாலைக்குமான தொடர்பு அதிகரித்துள்ளது. அத்துடன் அவர்களும் தமது பிள்ளைகள் மீது கவனம் எடுக்கிறார்கள். இதுவும் இச்சாதனைக்கு உந்து சக்தியாக அமைந்துள்ளது. க.பொ.த. சாதாரணதரத்துக்கான புதிய பாடத்திட்டத்தில் முதல் பரீட்சையாக இருந்ததும் ஒரு காரணமாக அமைந்திருக்கலாம் என்று நான் கருதுகின்றேன். கல்வியமைச்சின் பரீட்சைத் திணைக்களத்தின் புள்ளிப்பகுப்பாய்வின்படி பாடசாலைகளின் தரம் (நிலை) அண்மைக்காலமாக வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது. இதுவும் எமக்கு உந்து சக்தியாக அமைந்துள்ளது. இதனால் மாணவிகளின் கற்றல் செயற்பாடுகளில் நாம் மேன்மேலும் அக்கறை எடுக்கிறோம். இது மாணவிகளின் பெறுபேற்றில் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. அத்துடன் என்னுடன் ஆசிரியர்கள், மாணவர்கள், முகாமைத்துவ குழுக்கள் மற்றும் தரம் 10,11 பிரிவுப் பகுதித் தலைவர்களின் கூட்டு முயற்சியும் இந்தச் சாதனையை நாம் அடைவதற்கு முக்கியமான காரணமாகவுள்ளது.

**கேள்வி:** அப்படியாயின் சென்ற ஆண்டுகளில் ஏன் இவ்வாறான உச்ச நிலையை மாணவிகளால் அடையமுடியாமல் போனது?

**பதில் :** கடந்த ஆண்டுகளிலும் எமது மாணவிகள் சிறந்த பெறுபேற்றையே பெற்றிருந்தனர். இந்த முறை எண்ணிகை ரீதியாக அதிகமான மாணவிகள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளார்கள். புதிய பாடத்திட்ட மாற்றமும் ஒரு முக்கியமான காரணமாகவுள்ளது. இதனை எனது தனிப்பட்ட கருத்தாகச் சொல்ல முடியாது. இந்த முறை முன்னைய காலங்களைக் காட்டிலும் ஒப்பீட்டளவில் சிறந்த ஆளுமை கொண்ட மாணவிகள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தமையும் சிறப்பம்சமாகும்.

**கேள்வி:** மாற்றமடைந்துள்ள புதிய பாடத்திட்டத்துக்கு ஏற்றால்போல் உங்களுடைய கற்றல் செயற்பாடுகளில் ஏதாவது மாற்றம் செய்துள்ளீர்களா?

**பதில் :** இலத்திரனியல் மூலமாக கல்வி கற்பிக்கும் முறையை நாம் உருவாக்கியுள்ளோம். அதாவது பல் ஊடகமூடாக கற்றல் (புறொஜெக்டர்) வசதிகளை இங்கு ஏற்படுத்தியுள்ளோம். தொழில்நுட்ப ஆய்வுகூட வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதுவும் மாணவிகள் உயர் பெறுபேறு பெறுவதற்குக் காரணமாகவுள்ளது. விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் போன்ற பாடங்களுக்கு விசேடமாக கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை வலுப்படுத்துகின்றோம்.

**கேள்வி :** இப்போது உயர்பெறுபேறுகளைப் பெற்றுத்தந்த இதே மாணவிகள் மூன்று வருடங்களின் க.பொ.த. உயர்தரத்திலும் இதே போன்று சாதிப்பார்கள் என்று நம்புகிறீர்களா?

**பதில் :** எமது பாடசாலை க.பொ.த. சாதாரணதர மாணவிகள் சிறந்த பெறுபேற்றைப் பெற்று சாதித்துக் காட்டியுள்ளனர். இது எமது பாடசாலைக்குக் கிடைத்த பெருமை. அந்த மாணவிகள் க.பொ.த. உயர்தரத்தில் தாம் தெரிவு செய்கின்ற பாடங்களில் இதே போன்று சாதிக்க வேண்டும் என்பதுதான் கல்விப்புலத்தில் இருக்கின்ற எங்களின் எதிர்பார்ப்பாகும். ஆனால் கடந்த காலங்களில் எம்மாணவிகள் அதனை நிறைவேற்றியமை குறைவாகவே இருந்தது. க.பொ.த. சாதாரணதர பாடங்களை விட, க.பொ.த. உயர்தர பாடங்களில் கற்றல், கற்பித்தல் முறைகள் பெரும் வேறுபாடுகள் கொண்டதாக அமைகின்றன. க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை என்பது க.பொ.த. உயர்தரத்திற்கான தடைதாண்டல் பரீட்சையாக மட்டுமே அமைகின்றது. இதன் காரணமாகவே சாதாரண தரத்தில் அவர்களின் தனி ஆளுமை வெளிப்பட்டு அதிகூடிய சித்தியைப் பெறுகின்றனர்.

எமது பாடசாலையைப் பொறுத்தமட்டில் பெரும்பாலான பிள்ளைகள் க.பொ.த. உயர்தரத்தில் விஞ்ஞான, கணிதத் துறையை அதிகமாகத் தெரிவு செய்கின்றனார். இதனால் இத்துறைகளைத் தெரிவு செய்யும் எல்லோரினாலும் சாதிக்க முடிவதில்லை. இத்துறைகளைத் தெரிவு செய்யும் மாணவிகளில் 75 தொடக்கம் 80 வீதமானவர்களே பல்கலைக்கழகத் தகுதி பெறுகின்றனர். 20 வீதத்திற்குட்பட்டவர்கள் விஞ்ஞான, கணிதத் துறைகளில் முதற்றடவையில் சித்தியடையாவிட்டாலும், 2ஆம், 3ஆம் தடவைகளில் பல்கலைக்கழகத் தகுதியைப் பெறுகின்றனர். மிகச் சிலரே விஞ்ஞானத் துறையில் சித்தியடையத் தவறுகின்றனர்.

பொருத்தமில்லாத பாடத்தைத் தெரிவு செய்தல், சக மாணவிகள் தெரிவு செய்யும் பாடத்தைத் தெரிவு செய்தல், பெற்றோரின் விருப்பத்திற்கேற்ப பாடத்தைத் தெரிவு செய்தல் போன்ற காரணங்களினால் இவர்களால் விஞ்ஞானத் துறையில் சித்தியடையமுடியவில்லை.

இருந்தபோதிலும் 2012 தொடக்கம் 2016 வரையான காலப்பகுதியில் விஞ்ஞானத்துறையை அவதானிக்கும்போது படிப்படியாக மாணவிகள் வளர்ச்சியடைந்து வருகின்றனர். விஞ்ஞானத்துறையில் 83 வீதமான பிள்ளைகள் பல்கலைக்கழக தகுதியைப் பெறுகின்றனர். இதில் அதிகமான எண்ணிக்கையானவர்கள் மருத்துவ பீடத்துக்குத் தெரிவு செய்யப்படுகின்றனர். கடந்த வருடம் 23 மாணவிகள் மருத்துவபீடத்துக்குத் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

**கேள்வி :** க.பொ.த. உயர்தரத்தில் பெரும்பாலான மாணவிகள் விஞ்ஞான, கணிதத் துறைகளைத் தெரிவு செய்வதற்கு என்ன காரணம்?

**பதில் :** சமூகத்தில் உயர் அந்தஸ்தைப் பெற்றுக் கொள்வதற்காகவே அதிகமானோர் இத்துறைகளைத் தெரிவு செய்து கொள்கிறார்கள். தாம் மருத்துவராகவும், பொறியியலாளராக வும் வரவேண்டும் என்ற உந்துதலே எல்லோரிடமும் உள்ளது. வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற மாணவிகளும் புலமைப்பரிசில் பரீட்சை ஊடாக உதவிப்பணம் பெறுகின்றவர்களும் இத்துறைகளையே அதிகமாகத் தெரிவு செய்கின்றார்கள். அத்தோடு ஏனைய வசதிபடைத்த மாணவிகளுடன் விஞ்ஞான, கணிதத் துறைகளில் இணைந்து கல்வி கற்கும் வாய்ப்பையும் பெறுகிறார்கள்.

கடந்த வருடம் (2016) க.பொ.த. உயர்தரத்தில் விஞ்ஞானத்துறை யில் ஆங்கில்மொழி மூலம் கற்ற மாணவியொருவர் மருத்துவபீடத்திற்குத் தெரிவாகியுள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாதீனியத்தை ஒழித்த தனி ஒருவன்

கடந்த 1.04.2017 புதுவிதியில் வெளியான "பாதீனியத்துக்குச் சாவு மணி அடிப்பீர்களா?" என்ற கட்டுரையைப் பார்த்ததும் கடந்த வருடம் தென்னிந்தியாவிலிருந்து வெளிவந்த குங்குமம் 30.11.2015 இதழில் 'பாதீனியத்துக்கு எதிராகப் போராடும் தமிழர்!' என்ற தலைப்பில் வெளியான ஒரு நேர்முகம் ஞாபகத்துக்கு வந்தது. ஒரு தேசப்பற்றுள்ள தனிமனிதனின் சாதனை என்ற வகையில் அதை எல்லோரும் அறிந்திருக்க வேண்டும் என்று எனக்கெழுந்த ஆர்வத்தைக் காட்டிலும் அதே பிரச்சினையோடு நாமும் வாழ்வை ஒட்டுகிறோம், அதை நாமும் தீர்த்தாக வேண்டும் என்ற எண்ணத்தில் அதை மீள் பதிவாக்கம் செய்ய வேண்டும் என்று விரும்பினேன்.

அந்த மனிதரைப்போன்று எதிர் நடவடிக்கையை அல்லது எதிர் விடயம் ஒன்றை உடனடியாக நாம் உபயோகிக்கத் தொடங்காவிட்டாலும், இணையங்களில் காண்கின்ற பாதீனியம் ஒழிப்பு இலகு நடவடிக்கைகளை உடனடியாகக் கையாள வேண்டும். அதாவது சுய பாதுகாப்பை உறுதிப்படுத்திய பின் கைகளால் அவற்றைப் பிடுங்கி அழித்துவிடுவதே. சுய பாதுகாப்பு இல்லாத பட்சத்தில் பாதீனியத்தில் காணப்படும் இரசாயனம் ஒவ்வாமையை ஏற்படுத்தும். அதனால் பாதிக்கப்படுவது மிகவும் பாரதூரமானதாகவும் இருக்கலாம். ஒரு பாதினீயக் கன்றானது தனது வாழ்க்கைச் சுற்று வட்டத்தில் 5000 தொடக்கம் 10000 வரையிலான விதைகளை உற்பத்தி செய்து காற்றினூடாக அவற்றைப் பரவவிடக் கூடியதென உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. குங்குமம் இதழில் வெளிவந்த கீழ்வரும் பத்தி மூலம் சொல்லப்படும் கருத்துக்கள் எங்கள் தேசத்தை சிதைக்கவென கங்கணம் கட்டிக் கொண்டு பரவிவரும் பாதீனியத்தை ஒழிக்க நமக்கும் உதவலாம்.

- சுமகன்

இந்திய மண்ணில், ஒரு அரசு, அரச திணைக்களம், அரச நிறுவனம், அரச சார்பற்ற நிறுவனம், அரசியல்வாதி என எவரும் செய்ய முற்படாத அல்லது முயற்சித்துத் தோல்வி கண்ட விடயம்தான் பாதினீய ஒழிப்பு. அதை அத்துறை சாராத ஒரு தனிநபர். நாளும் பொழுதும் இடைவிடாது முயற்சித்து வெற்றி கண்டவர். அக் கதைக்குச் சொந்தக்காரர் முருகானந்தம். முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதத்தின் சகோதரி மகன் முருகானந்தம். பாரம்பரியமாக மூலிகைகளோடு தொடர்புடைய குடும்பத்தில் பிறந்தவர். எஞ்சினியரிங் படித்து முடித்துவிட்டு, பி.எச்.ஈ.எல். நிறுவனத்தில் பணியாற்றிய இவர், தன் பணிச் சூழலில் பாதீனியம் செடியின் ஆக்கிரமிப்பைக் கண்டு திகைத்து, அதை ஒழிப்பதற்காகவே முழுமையாகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு இருக்கிறார்.

இந்தியாவின் ஆன்மாவை அழிப்பதற்காக 1960 களில் சத்தமில்லாமல் ஒரு கொடூர உயிரி ஆயுதத்தை அனுப்பி வைத்தது அமெரிக்கா. அமைதியாக ஊடுருவி தேசத்தின் ஒரு கிராமத்தைக் கூட விடாமல் ஆக்கிரமித்துப் பேரழிவை உருவாக்கிக் கொண்டிருக்கிறது அந்த ஆயுதம். இன்று இந்தியாவின் ஒட்டு மொத்த விளை நிலங்களில் 10சதவீத நிலத்தில் பாதீனியம் இருக்கிறது. விஞ்ஞானிகளும், தொழில் நுட்ப வல்லுநர்களும் அதை அழிக்க எடுத்த அத்தனை முயற்சிகளும் தோல்வியில்தான் முடிந்தன. ஆனால் ஒரு எளிய மனிதர் அதற்கு எதிராயுதம் ஒன்றைக் கண்டு பிடித்து சாதித்திருக்கிறார். அவர் பெயர் முருகானந்தம். அமெரிக்கா அனுப்பிவைத்த ஆயுதம், பாதீனியம் என்ற விஷக் களைச்செடி. அதை அழிக்க முருகானந்தம் கண்டுபிடித்த எதிர்விஷம், கில்லர் - 700. இந்த விஷத்தைக் கொண்டு இந்தியா முழுவதும் [illegible] பரவிக் கிடந்த பாதீனியம் செடிகளை அழித்தொழித்திருக்கிறார் முருகானந்தம்.

"1960 களில் அமெரிக்காவில் அளவுக்கு அதிகமாக கோதுமை விளைந்ததால் விலை வீழ்ச்சியடைந்தது. அதைத் தடுப்பதற்காக கோதுமையை கடலில் கொட்டினார்கள். அதே சமயம் இந்தியாவில் பெரும் பஞ்சம் வந்தது. "கடல்ல கொட்டி அழிக்கிற கோதுமையை எங்களுக்குக் கொடுங்கன்னு, அமெரிக்காகிட்ட இந்தியா கேட்டுச்சு. அப்போ அனுப்பி வைக்கப்பட்ட கோதுமையில விதையா கலந்து வந்ததுதான் பாதீனியம் ."

இது ஒரு விபரீதமான தாவரம். ஒரு செடி ஆயிரக்கணக்கான செடிகளை உருவாக்கிவிடும். விளை நிலத்தை எல்லாம் விஷமாக்கிவிடும். பாதீனியம் முளைத்துவிட்டால் வேறு எந்த செடியையும் அந்த நிலத்தில் வளரவிடாது. அத்துடன் கடுமையான ஆஸ்மாவையும் மிகக் கொடூரமான "பாதீனியம் டெர்மடைட்டிஸ்" (Dermatitis) என்கிற தோல் வியாதியையும் இந்தச் செடி உருவாக்கும். இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் உடலில் இருந்து நீர் வடியும். தோலில் வெயில் பட்டால் திகுதிகு என்று எரியும். இந்த நோயைத் தாக்குப்பிடிக் முடியாமல் நிறையப்பேர் தற்கொலை பண்ணியிருக்கிறார்கள்.

முருகான்ந்தம் குஜாரத் மாநிலத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தார். புதிய திட்டங்களுக்காக நிலங்களைக் கையகப்படுத்தி மேம்படுத்த வேண்டியது அவர் பொறுப்பு. அங்குள்ள நிலங்களை எங்கு பார்த்தாலும் பாதீனியம் இருந்தது. ஆள்களை வைத்து அவற்றை அழிக்க முற்பட்டபோது அவர்களுக்குச் சில நாள்களில் அரிப்பும், மூச்சுத் திணறலும் வந்து அவதிப்பட்டனர்.

இயந்திரங்களைக் கொண்டு அகற்றினோம். விளைவு, அடுத்து ஒரே வாரத்தில் இருந்ததைவிட அதிகமான அளவு செடிகள் அங்கு முளைத்தன. மனிதர்களும், தொழில் நுட்பமும் பாதீனியத்தின் முன்னால் தோற்றுப்போயின. அதன் பின்னர் வேளாண்மைக் கல்லூரிகள், விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகங்களில் பாதீனியத்தை அழிக்க வழிகேட்டோம். "இதுவரையும் எந்தத் தீர்வும் கண்டறியப்படவில்லை" என்று சொன்னார்கள். " கேட்கவே ரொம்பவே ஆதங்கமா இருந்திச்சு. சுதந்திரத்துக்குப் பிறகு இந்தியா எவ்வளவோ வளர்ச்சிகளை எட்டியிருக்கு. ஆனா, ஒரு தாவரத்துக்கு தீர்வு காண முடியலே..... மத்தவங்களைக் குறை சொல்லுறதுக்குப் பதிலா நாமே இதுக்குத் தீர்வு கண்டு பிடிக்கலாமேங்கிற உந்துதல் உருவாச்சு" என்கிறார் முருகானந்தம்.

அத்தகைய உந்துதல் ஏற்பட்ட பின்னர் அவர் இது பற்றி நிறையப் படிக்க ஆரம்பித்தார். பாதீனியத்தின் வளர் மரபுகள், வாழ்க்கை முறைகள் எல்லாவற்றையும் படித்தார். அவரது குடும்பத்தவர்களுக்கு மூலிகையுடன் அதிக பரிச்சயம் உண்டு. அனைவரும் உதவினர். அவற்றைக் கொண்டு பாதீனியத்தை அழிக்கவல்ல எதிர் விஷத்தை தயாரிக்கும் பணியில் இறங்கினார். ஏறத்தாழ ஒரு வருடம் பாதீனியச் செடிகளுடன் வாழ்ந்திருக்கிறார்.

இந்தச் செடிக்கு முன்னர் மணிக்கணக்கில் உட்கார்ந்து இருந்ததாகவும், அச்சமயத்தில் தன்னை ஒரு பைத்தியக்காரன் என்று பலர் குறிப்பிட்டதாகவும் அவர் கூறி இருக்கிறார். பொதுவாகத் தாவரங்களில் "டைகாட்" "மனோகாட்" என்று இருவகை உண்டு. இந்த இரண்டு வகைகளையும் அழிக்க மருந்து உண்டு. ஆனால் பாதீனியம் இந்த இரண்டு வகையையும் சேராதது. அத்துடன் அதன் தாவரவியல் அமைப்பே வித்தியாசமானது. அதன் சுவாச மண்டலத்தை அழித்தாலொழிய அதை முழுமையாக அழிக்க முடியாது. தனக்குத் தெரிந்த யுக்திகள் அனைத்தையும் பயன்படுத்தி ஒரு மருந்தை உருவாக்கியிருக்கிறார். மூலிகைகளுடைய சில இரசாயனத்துடன் சேர்ந்து உருவாக்கப்பட்ட அந்த மருந்தை பெங்களூர் வேளாண்மை ஆராய்ச்சி மையத்துக்கு கொடுத்து ஏறத்தாழ ஆறு வருடங்கள் அங்கீகாரத்துக்காக காத்திருந்திருக்கிறார் முருகானந்தம்.

இந்த சமயத்தில் கர்நாடகா கவர்னர் மாளிகையில் பெரும்பகுதியை பாதீனியம் ஆக்கிரமித்துக் கொண்டதாகவும் இந்தச் செடிகள் கவர்னருக்கு ஒவ்வாமையை உண்டாக்கியதாகவும் செய்திகள் உண்டு. அந்தச செடிகளுக்குக் கிட்டப்

(18ஆம் பக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளரைக் கைவிட்ட நகரம்

## குறிப்பு 1 தொடர்ச்சி

மக்கள் வாழ்வியலும் அப்படியே. பண்டைய நாள்களில் இலங்கைக்குள் உட்பிரவேசித்த அந்நியர் முதலில் இத்தகைய தீவுகளிலே நிலைகொண்ட பின்னரே யாழ். தீபகற்பத்தை கைப்பற்றியதற்கான சான்றுகள் இன்றும் அங்கே காணப்படுகின்றன. முதலில் தொன்மங்களைப் பார்வையிடத் தொடங்கிய நாம் ஏற்கனவே தாயாரித்து வைத்திருந்த தொன்மை யாத்திரை இதழ்களை அங்குள்ள மக்களுக்குப் பகிர்ந்தளித்தோம். சுருவிலுக்கு அண்மித்த கடற்கரையிலிருந்து சிறு வள்ளங்கள் மூலம் நாரையன்பிட்டி என்ற சிறு தீவை நோக்கியது எமது பயணம். அங்கே மக்கள் இல்லை. கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று மாத்திரம் உண்டு. அந்தத் தேவாலயத்தில் இருந்த கடவுளைக் கைவிட்டு மக்கள் அகன்றிருந்தனர். அல்லது போர் அந்த மக்களை அப்படிக் கைவிட்டுச் செல்ல வைத்திருக்கலாம். அதைச் சுற்றி புல், பூண்டுகளும் மரங்களும் பற்றைகளும் வளர்ந்திருக்கின்றன. அங்கே நிலைகொண்டு அந்தப் பகுதியிலே கடற்றொழிலில் ஈடுபட்டிருக்கும் இளைஞர்கள் உதவியுடன் அவர்கள் மரபு சார்ந்து சமைக்கப்பட்ட புளியாணத்தை சோற்றோடு உண்டது புது அனுபவமே. பின்னர் இஞ்சிச் சாறு நிறைந்த தேநீர். அத்துடன் கடலும் கடல் சார் வாழ்க்கையையும் பற்றிய தொரு சிறு விளக்கத்தை தனது அனுபவங்களுடன் பகிர்ந்துகொண்டவர் எழுத்தாளர் தமயந்தி. தனது வெளியீடாகிய ஏழு கடற் கன்னிகள் என்ற புத்தகத்தினூடாக கடல்சார் புவியியலையும் அரசியலையும் விளக்கியதில் பல புதிய தகவல்களைப் பெற்றோம். தொடர்ந்து அந்தப் பிரதேசத்துக்குரிய பாரம்பரிய கூத்துப்பாடலை இசைக்கருவிகளுடன் தந்திருந்தனர். எழுத்தாளர் கருணாகரனின் தொன்மை சார்ந்து ஒரு சிறு சொற்பொழிவும் இடம்பெற்றது. அன்றைய தினம் சூரிய அஸ்தமனம்வரை நடையும், கடல்வழிப் பயணமும், கலந்துரையாடலும், விவாதமும், மரபு உணவுப் பரிமாற்றமும், பாட்டும் என நாள் கழிந்தது என்றும் ஞாபகத்தில் இருக்கப்போகின்றவை. அதனுள் அர்த்தம் ஒன்றிருப்பதை நான் உணர்ந்தேன்.

தற்போது போருக்குப் பின்னால் அங்கே மக்கள் கணிசமான அளவுக்குக் குறைந்துள்ளதனால் பாதுகாக்கப்படவேண்டிய பல இடங்கள் மேலும் சிதைவுறும் நிலையிலேயே இருப்பது கொடுமை. அங்குள்ள மக்கள் சிலருக்கு அது பற்றிய ஆர்வம் எண்டென்றாலும், அதற்குத் தேவையான பொருள் செலவு பல லட்சங்கள் என்பதனால், அது பற்றி யாரும் சிந்திப்பதில்லை. மக்களை விழிப்பூட்டவும், தொன்மங்களைப் பாதுகாக்கவும் தொன்மை பற்றிச் சிந்திக்கவும் இன்னும் முயற்சிகளும், நடவடிக்கைகளும் தேவை.



## குறிப்பு 2 தொடர்ச்சி

பின்னர் ஒவ்வொரு தேவாலயமாக பார்க்க தொடங்கினோம். யாத்திரைக்கு வந்திருந்த கலைவரலாற்று மாணவர்களும் , விரிவுரையாளர்களும் தேவாலயங்களின் கட்டடக்கலை பற்றி எல்லோரிடமும் உரையாடினார்கள். அந்தத் தேவாலயங்கள் எப்படி இந்த நிலத்துக்கு உரிய தேவாலயங்களாக நிலப்பண்பாட்டுடன் இணைந்து கட்டப்பட்டன, சடங்குகள் ஏற்படுத்தப்பட்டன போன்ற சுவாரஸ்யமான விடயங்களை உரையாடிவாறே தெருக்களை கடந்து நடந்தோம். அங்கிருந்த பழைய காலனித்துவக் கால கட்டடங்களைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த மக்களுடன் உரையாட முனைந்தோம். தொன்மயாத்திரை இதழ்களை விநியோகித்தோம். ஒரு காலத்தில் பெரும் சனத்திரள் மிக்க யாழ்ப்பாணத்தின் பெரும் பட்டினமாக இருந்த அந்த நகரம் இப்போது சனங்கள் மிக குறைந்துபோய் சோபையிழந்திருந்தது. அங்கு ஒரு பற்றைக்குள் கேட்பாரற்று கிடந்த கல்வெட்டை பார்த்தோம்.

கடற்கரையில் நடந்து சென்று கடல் நடுவில் நிற்கும் ஹமன் ஹீல் கோட்டை நீருக்குள் நின்றபடி தன்னைப் பார்க்கும்படி கெஞ்சியது. ஒரு தொல்லியல் முதுசத்தை ராணுவம் தன் அரணாக வைத்துக்கொண்டிருக்கின்றது. அங்கு போகவேண்டும், அதை ஆராய வேண்டும் என்ற ஆர்வமும், ஆசையும் இருந்தாலும், போகமுடியாதபடி படையினரின் தடைகள் இருந்தன.

மாலை வேளையின் ரம்மியத்தை எங்கள் பாடல்கள் இன்னும் அழகாக்கின. இடையில் இன்னும் சில நண்பர்கள் வந்து இணைந்து கொண்டமை உற்சாகத்தைக் கூட்டியது. கடந்து செல்லும் ஒவ்வொரு இடத்திலும் காடு மண்டி போய் கிடந்த அந்தப் பழைய நகரின் கோலம் எல்லோர் நெஞ்சையும் இறுக்கிக்கொண்டிருந்ததைத் தவிர்க்க முடியவில்லை.பனங்கிழங்குகளைப் பரிமாறிக்கொண்டே சென்றோம். சுருவில் கடற்கரையை அடைந்தவுடன் தமயந்தி அங்கு படகுகளுடன் தயாரக நின்ற தனது மீனவ நண்பர்களை அறிமுகம் செய்தார். கொஞ்சம் கொஞ்சமாக இரண்டு மூன்று தரம் படகுகள் கடலில் ஓடி நாரையன்பிட்டிக்கு எங்களைக்கொண்டு சேர்த்தன. சிறிய கடற்பயணம் என்றாலும் உற்சாகத்துக்கு குறைவில்லை.

பிட்டியில் இருந்த தேவாலயத்தின் மேலாக நின்ற அந்த மீட்பர் யேசுவின் சிலை எங்களை அரவணைத்துக் கொள்ள அழைப்பது போலிருந்தது. சிறு பற்றைகள் பச்சையாகச் சூழ்ந்த அந்த அழகான தேவாலயத்தின் திண்ணையில் ஆசுவாசமாக் அமர்ந்தோம். எழுத்தாளர் தமயந்தி தன்னுடைய சிறுகதையில் எழுதிய ஏழு நீரோட்டங்கள் கலக்கும், ஏழாற்றுக் கன்னிகளைக் காட்டி எமக்கு கடற்கதைகளை உற்சாகமாகச் சொன்னார். பாட்டும் கதையுமாக அவரின் உரையாடல் உற்சாகக் கடலுக்குள் எம்மையும் இழுத்துக் கொண்டு போனது. கடல் வளங்கள் அள்ளப்படுவதும் அச்சுறுத்தப்படுவதும் பற்றி ஏராளம் தகவல்களையும் அவர் பகிர்ந்து கொண்டார். இயற்கை மரபுரிமைச்சொத்துக்களான கடல் வளங்களின் இருப்பை பற்றி அவரின் ஆதங்கமும் தகவல்களும் வெளிப்பட்டன.


இதுநடக்கும் போது சில நண்பர்கள் அவித்த சோளன் பொத்திகளைப் பரிமாற , இன்னொரு குழுவினர் தேநீர் வைக்கத்தொடங்கினார்கள். மீனவ நண்பர்களுடன் சேர்ந்து மீன்களை அரிந்து புளியாணம் தயாரிக்கும் பணியிலும் சிலர் இறங்கியிருந்தார்கள். திண்ணையில் தமயந்தி கூத்துப் பாடல்களைப் பாடினார். குமணன் தன்னுடைய புல்லாங்குழல் இசையால் அந்த மாலையை இன்னும் ரம்மியமாக்கினார். கவிஞர் கருணாகரன் மற்றும் தோழர்களும் மரபுரிமைகள் மற்றும் கடல்வளம் ஊர்காவற்றுறையின் நிலக்காட்சிகள் தொடர்பில் உரையாடினார்கள்.

மாலை இன்னும் கவிய, தேநீரும் தட்டு வடையும் பரிமாறப்பட்டது.

மீண்டும் கூத்து பாடல்கள் காற்றில் எழுந்தன. மத்தளமும் , கைத்தாளமும் பாடல்களும் தேவாலயச் சூழலை இசையாலும் மகிழ்வாலும் மூழ்கச்செய்தன. பிறகு சுவையான புளியாணம் பரிமாறப்பட்டது. நண்பர்கள் உற்சாகமாக அந்த மரபுணவைச் சுவைத்தார்கள்.

மாலை இன்னும் செறிந்தது. எல்லோரும் சேர்ந்து படங்களாக உறைந்தோம். மீண்டும் படகுகள் கடலில் இறங்கி ஓடின. கடலிலும் பாடினோம்.

ஒரு காலத்தில் பெரும் வரலாற்று புகழ்மிக்க துறைமுகமாகவும் தொல் குடிகளின் பரம்பரை வாழிடமுமாக இருந்த ஊர்காவற்றுறை மீதான யாத்திரை மூலம் ஒரு சின்ன அசைவையும், அங்குள்ள வாழும் மரபுகள் மீதான விழிப்பையும் ஏற்படுத்தியிருக்கிறோம் என்ற மனநிறைவும் கொண்டாட்டம் மூலமான அறிதலும் எல்லோருக்குமே திருப்தியாகவிருந்தது. சோபையிழந்து போன அந்த பெரு நகர் மீண்டும் மரபுகளை பற்றிப் பிடித்து எழவேண்டும்.



## பந்து...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)
எல்லோரும் பதறினர். வீழ்ந்தவனைத் தூக்குவதற்கும் பயம். அப்படியே விடவும் முடியாத அவலம். இன்னொரு மிதி வெடி அங்கே இருந்தால்....

பன்னிரண்டு வயதுப்பிள்ளை.

இந்தப் பெரும் போருக்குள் சிக்கி, எத்தனையோ மரண கண்டங்களைக் கடந்து, மயிரிழையில், சாவின் வாயிலிருந்து தப்பி, அகதி முகாம் அவலங்களை எல்லாம் பட்டு, இப்போது வீட்டுக்கு வந்து இப்படியா காலை இழக்க வேண்டும்?

அவனுடைய வலது கால் முழங்காலுக்குக் கீழே சிதைந்து விட்டது.

தாய் கதறினாள். அவளுடைய ஒரு கை ஏற்கனவே உடையார்கட்டில் காயத்துக்குள்ளாகி இன்னும் சரியாக இயங்கவில்லை. இரண்டு கிலோ பாரம் கூடத் தூக்க மாட்டாள். ஆனால், இப்போது தன்னுடைய பிள்ளையை அவள் எப்படியோ அந்த அபாய வெளிக்குள்ளால் தூக்கிக் கொண்டாள். பிரதாபன் மயங்கிவிட்டான். அந்தப் பிஞ்சினால் என்னதான் செய்ய முடியும்?

அவளுடைய ஓலம் அந்த ஊரையே கலக்கியது.

எதையும் பற்றி எந்தப் பொருட்டும் இல்லாத மாதிரி, இரத்தத்தில் தோய்ந்தவாறு தனியே கிடந்தது அந்தக் காலில்லாத பந்து. அதற்கு மதிவெடி பற்றிய எந்த அச்சமும் இல்லை. ஒரு மீள்குடியேறியின் பந்து என்று அது உணர்வதே இல்லை. அப்படி உணர்ந்திருந்தால் ஒரு வேளை பிரதாபனின் கால் தப்பியிருக்கலாம்.

கால்களில்லாத பந்து செய்கின்ற கூத்துகள் கொஞ்சமல்ல. இல்லை, எந்த அச்சமுமில்லாமல், பந்து விளையாடும் காலம் ஒன்று எங்களுக்கில்லை என்பதே உண்மை.


அந்தக் காலம் எப்போது?

## பாதீனியத்தை...

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)
கவர்னர் மயங்கி விழுந்து விடுவாராம். அந்த சமயத்தில் அங்கே பார்த்தீனியத்தை ஒழிக்கும்பணி முருகானந்தத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மூன்று தடவைகளாக தான் கண்டுபிடித்த மருந்தை தெளித்து அங்கே பாதீனியத்தை ஒழித்து வெற்றி கண்டிருக்கிறார் அவர். இப்படிப் பல ஏக்கர் காணிகளில் பாதீனியத்தை ஒழித்திருக்கிறார்.

பாதீனியம் அழிப்பு மருந்துக்கு ஏகப்பட்ட கிராக்கி. பல பெரிய நிறுவனங்கள் காப்புரிமை கேட்டு வருகிறார்களாம். ஆனால் இதை வைத்துப் பணம் பண்ணுவது முருகானந்தத்தின் எண்ணமல்ல என்பதால் மறுத்திருக்கிறார். தனக்குப் பிறகு, இயற்கை மீது பற்றும், ஈடுபாடும் உள்ள ஒருவருக்கு இதை கற்றுக் கொடுத்துவிட இருப்பதாக உற்சாகமாகச் சொல்கிறார் முருகானந்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பரிகாரம்

**பார்வைநயம்–17**

■ கணபதி சர்வானந்தா

**"கௌரி தனக்கு வேலை ஒண்டு கிடைச்சிருக்கிறதா எழுதியிருக்கிறாள்" என்று வாய் நீளச் சிரித்தார். அந்த மகிழ்ச்சி நீத்துப் போவதற்கு முன்னர் கௌரியின் கணவன் விபத்தொன்றில் இறந்துவிட்டதாக வந்த இன்னுமொரு அதிர்ச்சிச் செய்தியையும் நேசய்யா தாங்கவேண்டியிருந்தது. இடிந்துபோனார் நேசய்யா.**

அந்த வெள்ளிக்கிழமை காலையும் அப்படித்தான் விடிந்தது. அழுகையும்,கூக்குரலுமாய் வீடு அதிர, வீட்டு தலைவாசலில் கிடந்த கட்டிலில் கிடத்தப்பட்டிருந்த நேசய்யாவின் தலைமாட்டில், கீற்றைப்போன்ற சுவாலையுடனான ஒரு குத்துவிளக்கு. நறுமணத்தால் அச்சூழலைத் தன்வசப் படுத்திக் கொண்ட சில சாம்பிராணிக்குச்சுகள். அவை நடுவே ஒரு சிறிய ரேப்றெக்கோடரில் மணிவாசகரின் சிவபுராணத்தை சீர்காழி பாடிக்கொண்டிருந்தார். நேசய்யா செத்து இன்று மூன்றாம் நாள். வெளியூரிலிருந்து வரவிருக்கும் அவரது பிள்ளைகளுக்காக உறவுகள் காத்திருக்கின்றன.

செத்துப்போன நேசய்யா சிவலோகுவுக்குத் தாய் மாமன். நேசய்யாவுக்கு இரண்டு பெண்கள். பெரியவள் மேனகா, சிவலோகுவுக்கு வயதில் மூத்தவள், சின்னவள் கௌரி சிவலோகுவிலும் பார்க்க வயதில் இளையவள். சிறுவயது தொட்டு தனக்கென்று கிடைக்கும் எல்லாத்திலும் சிவலோகு கௌரிக்குப் பங்கு வைத்துப் பழக்கப்பட்டவன். அவர்கள் சிறு வயதாயிருந்தபோது அது பற்றி யாரும் கவலைப்பட்டதாக இல்லை. 'எக்சைஸ் இன்ஸ்பெக்ரர்' வேலையிலிருந்து ஓய்வுபெற்று நிரந்தரமாக வீட்டில் இருக்கத் தொடங்கியபோதே வீட்டை மிகவும் நுணுக்கமாகக் கவனிக்கத் தொடங்கினார் நேசய்யா.

அவரது வீட்டுக்கும் அவரது சகோதரி வீட்டுக்கும் இணைப்பாக முற்றத்தில் இருந்த வேலியும், பொட்டும் நேசய்யாவின் அதிரடி நடவடிக்கையால் காணாமற்போயின. வேலி தற்போது மதிலாக மாறி இருந்தது. பேணப்பட்ட சகோதர உறவும் மட்டுப்படுத்தப்பட்டது. முதலில் கௌரிதான் ஒடுங்கிப்போனாள். பிடிவாதக்காரனான தனது தந்தை நேசய்யாவோடு ஒத்துப்போவதைத் தவிர அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை. கௌரியைப்போல சிவலோகுவும் முடிந்தவரை சிலவற்றிலிருந்து விடுபட முயற்சித்துக் கொண்டான். சிவலோகு தனது குடும்பத்துக்குள் நுழைந்துவிடக்கூடாது என்பதற்கு முன்னேற்பாடாகவே சகோதரர் நேசய்யா இந்த ஏற்பாட்டைச் செய்வதாகச் சிவலோகுவின் தாயாருக்குத் தெரிந்தாலும், வெளியே காட்டிக்கொள்ளாமல் பூசி மெழுகி நிலைமையைச் சமாளித்துக் கொண்டிருந்தாள். இருந்தும் அதை ஒரு அச்சறுக்கைக்காகவும், எல்லோருடைய வருங்கால நன்மைக்காகவும் தான் செய்வதாக, தனது செயலை நியாயப்படுத்திக் கொண்டார் நேசய்யா.

சில காலத்தின் பின்னர், தனது வசதிவாய்ப்புக்கேற்றவாறு இரு மருமக்களைத் தேடிக்கொண்டார் நேசய்யா. மூத்தவள் மேனகா திருமணத்துக்குப் பின் அமெரிக்காவிலும், இளையவள் கௌரி கனடாவிலும் குடியேறிக் கொண்டனர். சங்கத்திலே கிளார்க்காக வேலை பார்க்கத்தொடங்கிய சிவலோகு இப்போது மனேஜராக இருக்கிறான். இருந்தும் அவனுக்கு பேசி வந்த சம்பந்தங்கள் எல்லாம் ஒப்பேறாமல் குழம்பிக் கொண்டிருந்தன. இதனால் சிவலோகுவின் தாயார்தான் கோவில் கோவிலாக அலையத்தொடங்கியிருந்தாள்.

போனதும், அமெரிக்கா பிடித்திருந்ததாகக் குறிப்பிட்டு மேனாகவிடமிருந்து கடிதங்கள் வந்தன. கௌரி தனக்கு கனடா பிடிக்கவில்லை என அழுது அழுது எழுதியிருந்தாள். சில மாதங்களுக்குப் பின்னர் நேசய்யா ஒரு கடிதத்தை கொண்டு வந்து சிவலோகுவுக்குக் காட்டினார். "கௌரி தனக்கு வேலை ஒண்டு கிடைச்சிருக்கிறதா எழுதியிருக்கிறாள்" என்று வாய் நீளச் சிரித்தார். அந்த மகிழ்ச்சி நீத்துப் போவதற்கு முன்னர் கௌரியின் கணவன் விபத்தொன்றில் இறந்துவிட்டதாக வந்த இன்னுமொரு அதிர்ச்சிச் செய்தியையும் நேசய்யா தாங்கவேண்டியிருந்தது. இடிந்துபோனார் நேசய்யா. மரண நிகழ்வுக்குப் போகமுடியாது போனாலும் நேசய்யாவும், மனைவியும் கனடா போய் கௌரியைப் பார்த்துவருவதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர். விசா வந்தவுடன் சிவலோகுதான் அவர்களைக் கொழும்புவரை கொண்டு சென்று விட்டுவிட்டு வந்தான். ஒரு மாதத்தின் பின்னர் கனடாவிலிருந்து திரும்பிவந்த நேசய்யாவின் இயல்புகள் தலைகீழாக மாறிப்போயிருக்க, எல்லாவற்றுக்கும் அவருக்குச் சிவலோகுதான் தேவைப்பட்டான்.

அவர்கள் கனடாவிலிருந்து வந்த பின்னர், சிவலோகுவுக்கு வந்த கௌரியின் தொலைபேசியில், அவன் கேட்ட கெஞ்சலும், மன்றாட்டங்களும் நேசய்யாவைப் பார்த்துக் கொள்வதிலான அக்கறையை மேலும் வலுப்படுத்தின. ஒரு மாத காலத்துள் மூன்று முறை வந்த மாரடைப்பைத் தாங்குகிற நிலைமையில் அவ்ர் இருக்கவில்லை. சிவலோகுவைப் படாது படுத்திவிட்டு போய் சேர்ந்துவிட்டார் நேசய்யா. மரணச் செய்தியைக் கேட்ட எல்லோரும் ஒருவர் பின்ஒருவராய் வந்து சேர்ந்தனர். நாலாம் நாளன்று, கிரியைகள் நடைபெறச் சற்று முன்னர் கௌரி சிவலோகுவை தனியாக அழைத்து, "சிவலோகத்தான் ! நீங்கள்தான் அப்பாக்குக் கடமை செய்ய வேணும்." என்றதும் சிவலோகு தடுமாறினான். "நான், எப்பிடி செய்யலாம்?" என்று கேட்க முன்னர் கௌரி சிவலோகுவின் கையைப் பலமாகப் பிடித்து கிணற்றடிப் பக்கம் இழுத்துக் கொண்டு சென்றாள். அவள் பிடியின் அர்த்தத்தை புரிந்துகொண்டான். தன்வாழ்க்கையில், முதல் முறையாக தாய்க்குப் பிடிக்காததொன்றைச் தான் செய்யப்போவதாக அவனுக்குப் பட்டது. நேசய்யாவினால் உறவில் ஏற்படுத்தப்பட்ட காயத்தின் தழும்புகள் முற்றாக மாறததாக.... அம்மாவின் கோபம் அவனுக்குப் புரிந்தது.

நேசய்யாவின் மரணத்தின் பின்னர் ஒரு மாதம் கழிந்து, ஒதுங்கியிருந்தது. ஒவ்வொருவராக விடைபெறத் தொடங்கினர். மறுபடியும் வீட்டு முற்றத்தில் இருக்கும் மதிலை உடைத்து அதில் நிரந்தரமாக ஒரு வாசலை ஏற்படுத்துவதற்கான ஆயத்தங்களைச் செய்துகொண்டிருந்தாள் கௌரி. நேசய்யா தன் கடைசிக்கால ஆசைகளில் முக்கியமாகச் சொல்லிச் சென்றதின்படி கௌரி நிரந்தரமாக இங்கேயே தங்கப்போகிறாள். சிவலோகுவின் நன்மை - தீமையில் பங்கெடுப்பதற்காக. ●

**அறியாது செய்ததற்கு பரிகாரம் [illegible] அறிவுறுத்துகிறது ஆன்மிகம்**

# '9ஏ' அமைமழைக்கு காரணம் என்ன?



(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர் ஒரு விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவர். அத்துடன் உதவிப்பணம் பெறுகின்ற மாணவியுமாவார். சமூகத்தில் போராடி வெற்றி பெற வேண்டும் என்பதே இவர்களின் இலக்காகவும் உள்ளது.பெற்றோரின் போட்டி மனோநிலையும் பிரதானமான காரணமாகக் குறிப்பிடலாம். அவர்களும் சமூகத்தில் உயர் அந்தஸ்தையே பெற விரும்புகிறார்கள்.

**கேள்வி :** இம்முறை மாணவிகள் அதியுச்சப் பெறுபேறுகளை அடைய தனியே பாடசாலை மட்டும் காரணம் என நம்புகிறீர்களா? அல்லது தனியார் கல்வி நிலையங்களின் பங்களிப்பும் இருக்கின்றதா?

**பதில் :** க.பொ.த. சாதாரணதரம் வரை பிள்ளைகளை தனியார் கல்வி நிலையங்களுக்கு அனுப்ப வேண்டிய தேவையில்லை. தனியார் கல்விக் கூடங்களுக்கு செல்லாமலேயே சிறப்பான அடைவுகளை எடுக்கக் கூடிய வகையிலான, தரமான கல்வியே எங்கள் பாடசாலையில் கற்பிக்கப்படுகின்றது. தனியார் கல்வி நிலையங்களுக்கு பிள்ளைகளை அனுப்பி தனியார் கல்வி நிலையத்தை இன்னொரு பாடசாலையாக மாற்றக்கூடாது.இக்கருத்தை நான் பெற்றோரிடம் முன் வைக்க விரும்புகிறேன். பெற்றோர் கல்வியில் தமது பிள்ளைகள் உயர்பெறுபேறு அடைந்தால் மட்டும் போதும் என்று நினைக்கிறார்கள். அவர்கள் கல்வியுடன் சேர்த்து இணைப்பாடவிதான செயற்பாடுகளில் இணைந்து மாணவிகள் பங்குபற்றுவதற்கு வழியமைத்துக் கொடுத்தல் வேண்டும். அத்துடன் அவர்களின் தனி ஆளுமை விருத்தி, தலைமைத்துவ விருத்தி என்பவற்றை மேம்படுத்த பெற்றோர் உறுதுணையாக இருத்தல் வேண்டும்.

க.பொ.த. உயர்தரம் என்பது போட்டிப் பரீட்சை.வேண்டுமானால் அந்தப் போட்டிப் பரீட்சையில் வெற்றியடைவதற்கு தனியார் கல்வி நிலையங்களுக்கு மாணவிகள் செல்வதை நான் பிழை என்று கருதமாட்டேன். ஆனால் பாடசாலை, ரியூசன் என்று அலைவதால் இத்னால் பிள்ளைகளுக்கு ஓய்வு குறைவு. அவர்கள் தாமாகவே சிந்தித்து செயற்பட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் அதிகூடிய சித்தியைப் பெறுவதற்கு தனியார் கல்வி நிலையங்களே சரியான இடமென்று பெற்றோர் எண்ணுகிறார்கள். அத்துடன் தனியார் கல்வி நிலையத்துக்குப் பிள்ளைகள் போகாவிடில் அது தரக் குறைவான விடயம் என்றும் சிந்திக்கிறார்கள்.உண்மையில் எங்கு கற்றாலும் திறமையான பிள்ளைகள் மட்டுமே சாதிக்கிறார்கள். இதைப் பெற்றோர் உணரவேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**வா**டிக்கையாளர்களைக் கவர்வது ஒரு கலை. அதற்கு உதவியாக இருப்பதுதான் சந்தைப்படுத்தல் உத்திகள். சந்தைப்படுத்தலில் முக்கியமானது விளம்பரம். விளம்பரம் செய்வது எப்படி என்பதைப் பற்றி சென்ற வாரம் பார்த்தோம். இப்போது நம்முடைய பொருளை எப்படி சந்தைப்படுத்துவது அதாவது எப்படியெல்லாம் விற்கப் போகிறோம் என்று விரிவாகப் பார்க்கலாம்.

நாம் எந்த வகை தொழில் செய்தாலும் சரி, அதற்கு சந்தைப்படுத்தல் முக்கியம். நம்முடைய பொருளை அறிமுகப்படுத்துவதிலிருந்து அதை வாடிக்கையாளர்களுக்கு விற்று, பிற்பாடு அந்த வாடிக்கையாளர்களைத் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்வது வரை பல பிரிவுகளாக சந்தைப்படுத்தல் உத்திகள் செயற்படுத்தப்பட வேண்டும்.

சந்தைப்படுத்தலுக்கு இவ்வளவு தொகையை செலவழிக்க வேண்டும் என்று கணக்கும் வேண்டும். ஒரு ரூபா முதல் ஒரு கோடி ரூபா வரை செலவு செய்து, பல வகைகளில் சந்தைப்படுத்த முடியும்.

சந்தைப்படுத்தலை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். நேரடி சந்தைப்படுத்தல் (Direct Marketing), மறைமுக சந்தைப்படுத்தல் (Indirect Marketing) மற்றும் ஒன்லைன் சந்தைப் படுத்தல். இவற்றை விளக்கமாகப் பார்ப்போம்.

### நேரடிச் சந்தைப்படுத்தல்

நேரடிச் சந்தைப்படுத்தல் முறையில் நாமே நேரடியாக வாடிக்கையாளர்களிடம் சென்று நமது பொருளை அறிமுகப்படுத்தி விற்பது. இதில் பெரும்பாலும் நம்முடைய திறமைதான் முக்கியம். நன்றாகப் பேசத் தெரிந்திருந்தால் போதும், எளிதில் வாடிக்கையாளர்களைக் கவர்ந்துவிட முடியும்.

நேரடிச் சந்தைப்படுத்தலில் முதலில் நம்முடைய உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரிடம் நம் பொருளைப் பற்றி எடுத்துக் கூறி, அவர்களிடம் பயன்படுத்தச் சொல்லி பிரபலப்படுத்தலாம். நாம் தொழில் செய்யக்கூடிய இடத்தில் இருப்பவர்களிடம் நம் வணிகம் மற்றும் பொருள் பற்றி எடுத்துச்சொல்ல வேண்டும்.

விற்பனை முகவர்களை வைத்து நம்முடைய தொழிலின் பிரத்தியேகமான வாடிக்கையாளர்களிடம் நேரடியாக அனுப்பி விற்பனை செய்ய வேண்டும். இதற்கு கையில் நம்முடைய பொருள்கள் பற்றிய விவரங்கள் அடங்கிய துண் டுப்பிரசுரம், புரோச்சர் மற்றும் பவர் பொயின்ட் பிரசன்டேஷன் போன்ற வற்றை வைத்துக்கொள்ள வேண்டும்.

விற்பனை முகவர்கள் சென்று விற்பனை செய்யும்போது, நுகர்வோர் உடனடியாகப் பொருட்களை வாங்கிவிட மாட்டார்கள். எனவே, நேரடியாகச் சென்று விற்பனை செய்யும்போது, மாதிரிகளை எடுத்துச் செல்ல வேண்டும். பொருளைப் பற்றி விளக்கமாகச் சொல்லிவிட்டு, இலவச சாம்பிள் கொடுத்து பயன்படுத்திப் பார்க்கச் சொல்ல வேண்டும். மாதிரிகள் அளவாகக் கொடுக்க வேண்டும். 'மகி' நூடில்ஸை ஆரம்பத்தில் பிற பொருட்களுடன் சேர்த்து இலவசமாகக் கொடுத்தார்கள். இப்போது நூடில்ஸ் விற்பனையில் அதுதான் முன்னிலையில் உள்ளது.

மாதிரி கொடுப்பது ஒருவழி என்றால், சலுகைகளை வழங்குவது இன்னொரு வழி. "நேரடியாக வீட்டுக்கே வந்து விற்பதால்தான் இந்த சலுகைகளைப் பிற நேரங்களில் உங்களுக்கு சலுகைகளை கிடைக்காது" என்று சொல்லி விற்கலாம். நாம் விற்பனை செய்யும் பொருளை நம்முடைய வாடிக்கையாளர்கள் பிறரிடம் சொல்லும் வகையில் நம் அணுகுமுறை இருக்க வேண்டும். அவர்களிடம் பேசும் விதம், பழகும் விதம், அவர்களின் கேள்விகளுக்கும் யோசனைகளுக்கும் செவி சாய்ப்பது என அனைத்தையும் முகம் கோணாமல் செய்ய வேண்டும். தொழில் செய்பவர் மட்டுமல்லாமல், நம்மிடம் வேலை பார்ப்பவர்களையும் அப்படிப் பேசுமாறு மாற்ற வேண்டும். வாடிக்கையாளர்களுக்கு நாம் தரும் அனுபவம் என்பது செலவே இல்லாமல் செய்யும் அருமையான சந்தைப்படுத்தல் உத்தி ஆகும். எவ்வளவு செலவு செய்தாலும் இதில் கிடைப்பது போல் பயன் கிடைக்காது.

அதிக மக்கள் கூடும் இடங்களான கண்காட்சிகள், பொதுக் கூட்டங்கள் போன்றவற்றில் ஒரு அரங்கை அமைத்து நேரடியாகவும் விற்கலாம். சங்கங்களின் கூட்டமைப்பில் உறுப்பினராகச் சேர்வது, லயன்ஸ் கிளப், றோட்டரி கிளப் போன்றவற்றில் இணைந்து செயற்படுவது போன்ற வையும் பல இடங்களில் நம் பொருளை அறிமுகப்படுத்த உதவியாக இருக்கும்.

### மறைமுக சந்தைப்படுத்தல்

இந்த வகை சந்தைப்படுத்தும் உத்தியில் கணிசமான விற்பனை நிச்சயம் சாத்தியம். ஏனெனில் நம்முடைய பொருளைப் பற்றி நாம் நேரடியாகச் சொல்லும்போது காது கொடுத்து கேட்கும் அளவுக்கு மக்களுக்கு பொறுமை இல்லை. ஆனால், இந்த மறைமுக சந்தைப்படுத்தலில் நம்முடைய வாடிக்கையாளர்கள் யார் என்பதை கண்டுபிடித்து அவர்களுக்கு நம்முடைய பொருளைப் பற்றிய விவரங்களை மறைமுகமாகத் தெரிவித்தால் போதும். இப்போது எல்லோரும் கைபேசி, இணையத்தளம், சமூக வலைத்தளம் போன்றவற்றைப் பயன்படுத்து கிறார்கள். எனவே, இப்போது இந்த சந்தைப்படுத்தலை செய்வது மிகவும் எளிது.

உதாரணத்துக்கு, நாம் ஒரு சிறப்பு அங்காடி வைத்திருக்கிறோம் என்றால், நம்முடைய பகுதிகளில் வசிப்பவர்களின் கைபேசி எண்களை வைத்து வட்ஸ் அப் குறூப் ஒன்றை உருவாக்கி, அவர்களுக்கு பொருள்களின் அறிமுகம், விற்பனை, மற்றும் சலுகை போன்றவற்றை அனுப்பலாம். அதேபோல், மின்னஞ்சல் மூலம் நம்மிடம் உள்ள அனைத்து முகவரிகளுக்கும் மின்னஞ்சல் அனுப்பலாம்.

மறைமுகச் சந்தைப்படுத்தலில் இருக்கும் இன்னொரு உத்தி, பிற உற்பத்திகளுடன் சேர்த்து நம் பொருள்களையும் விற்பனை செய்வது. அதாவது, சவர்க்காரத்துடன் சேர்த்து சவர்க்காரப் பெட்டியை விற்பனை செய்யலாம். நம்முடைய பொருள் அந்த உற்பத்திகளுடன் தொடர்புடையதாக இருந்தால் மிகவும் நல்லது. இதன் மூலம் நம்முடைய பொருளை அறிமுகப்படுத்துவது மிகவும் எளிது. ஒரு பொருள் மக்களுக்கு அறிமுகமாகிவிட்டால் போதும், விற்பனையும் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்கும்.

இதுபோக ரெலி மார்க்கெட்டிங் (Tele marketing) என்ற முறையும் இதில் பயன்படுத்தப்படுகிறது. இது, இருந்த இடத்திலிருந்தே நம்மிடம் இருக்கும் தொலைபேசி எண்கள் மூலமாக செய்யும் சந்தைப்படுத்தும். தற்போது எல்லோரும் இந்த முறையைப் பயன்படுத்துவதால், எளிதில் மக்கள் தவிர்த்துவிடுகிறார்கள். அதனால் ரெலி மார்க்கெட்டிங்கில் மிகப் பெரிய வெற்றிடம் இருக்கிறது. நம்முடைய அணுகுமுறையை வித்தியாசப்படுத்தினால் இதிலும் நாம் இடம்பிடிக்க முடியும். உதாரணமாக, எடுத்ததுமே பொருளைப் பற்றி விளக்காமல் ஒருவர் பேசும் சூழ்நிலையில் இருக்கிறாரா, அவருடைய விருப்பம் என்ன என்பதைக் கேட்டுவிட்டு, பின்பு பொருளைப் பற்றி பேசலாம். அப்படிப் பேசினால் நிச்சயம் வாடிக்கையாளர்களைக் கணிசமாகக் கவர்ந்து விற்பனையை அதிகரிக்க முடியும்.

இவை மட்டுமல்லாமல் பத்திரிகைகள், சஞ்சிகைகள், பதாகைகள் போன்றவற்றில் விளம்பரம் செய்வதன் மூலமும் விற்பனையை அதிகரிக்கலாம். பிராந்திய நாளிதழ்களில் விளம்பரம் தருவது செலவு குறைவாக இருப்பதோடு, நல்ல பயனையும் தரும்.

### ஒன்லைன் சந்தைப்படுத்தல்

உங்கள் பொருள்களை ஒன்லைனில் விற்பதுதான் ஒன்லைன் சந்தைப்படுத்தல். இப்போது ஒன்லைன் வர்த்தகம் என்பது பெருமளவில் அதிகரித்து வருகிறது. இ-கொமர்ஸ் நிறுவனங்களின் வளர்ச்சி நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு இருக்கிறது. ஈ-மெயில், சமூகவலைத்தளங்கள், கைபேசி அப்ஸ்கள் என பெருகிவரும் தொழில்நுட்பங்களாலும், அதிக அளவு மக்கள், இணையத்தைப் பயன்படுத்த தொடங்கி இருப்பதாலும் இந்த சந்தைப்படுத்தல் முறை பெருமளவில் தொழில்முனைவோர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கிறது.

ஃப்ளிப்கார்ட், அமேசான், ஸ்நாப்டீல் போன்ற பல நிறுவனங்கள் யார் வேண்டுமானாலும் தங்கள் பொருள்களை ஒன்லைனில் விற்கலாம் என்ற வசதியை ஏற்படுத்தியுள்ளன. அத்தகைய ஈ-கொமர்ஸ் தளங்களைப் பயன்படுத்தி, நம் பொருளை விற்கலாம். இந்த இணையத்தளங்களில் நம்முடைய பொருள்களைப் புகைப்படம் எடுத்து, பதிவேற்றினால் போதும். நம்முடைய பொருள்களை வாங்க விரும்புபவர்கள் ஒன்லைன் வர்த்தகம் மூலம் வாங்கி விடுவார்கள். அவற்றை நாம் சரியாக, பாதுகாப்பாக அனுப்பி வைத்தால் போதும். இதில் லொஜிஸ்டிக்ஸ்தான் முக்கியம். அதைக் கவனமாக செய்தால் எளிதில் நாம் ஒன்லைனில் நம் பொருள்களை விற்கலாம்.

மேலும், முகப்புத்தகம், டுவிட்டர் மற்றும் யூ ரியூப் போன்றவற்றிலும் நம்முடைய பொருட்களை விற்கலாம். பொருளை வாடிக்கையாளர்கள் கவரும் விதத்தில் விளம்பரம் செய்து, அதனை வாடிக்கையாளர்கள் வாங்குவதற்கு நம்மைத் தொடர்புகொள்வதற்கான விவரங்களுடன் சந்தைப்படுத்தலாம். இதை இலவசமாகவே செய்யலாம்.

நம்முடைய தொழிலுக்கு ஒரு இணையத்தளம் இருப்பது அவசியம். நம்முடைய பொருள்களையும், பொருட்கள் கிடைக்கும் இடங்களின் விவரங்களையும், பொருள்கள் பற்றியும் நம்முடைய இணையத்தளத்தில் குறிப்பிட வேண்டும். ஃபேஸ்புக், ஈ-மெயில், வட்ஸ் அப் போன்ற அனைத்திலும் நம்முடைய இணையத்தள முகவரியைக் குறிப்பிட வேண்டும். வெளிநாட்டு ஓடர்கள் வருவதற்கு இணையத்தளம் மிகவும் உதவியாக இருக்கும்.

(இன்னும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருகோணமலை கோட்டை

திருகோணமலை கோட்டை (பிரட்ரிக் கோட்டை)

திருகோணமலை நகரின் வடக்கே அமைந்துள்ளது. இந்தக் கோட்டை போர்த்துக்கீசரால் கட்டப்பட்டது. பின்னர் ஒல்லாந்தர் (பிரான்சியர் இதனை பிடித்து மீண்டும் ஒல்லாந்தரிடம் ஒப்படைத்தனர்), மற்றும் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டது. இந்தக் கோட்டையின் உள்ளேயே புகழ் பூத்த திருக்கோணேச்சர ஆலயம் அமைந்துள்ளது.

தற்போது இலங்கை இராணுவத்தின் பலமான பூகாமாக விளங்குகின்றது. தற்போது இங்கு கட்டுப்பாடுகள் இன்றி சென்று வர முடியும். இவ்வாறாக மரபுரிமைச் சின்னங்களின் தொடர்ச்சியாக இராணுவ பிரசன்னத்தினுள் இருப்பதும், பாதுகாக்கப் படாமல், அறியப்படாமல் இருப்பதும் பெரும் சிக்கப்பிறழ்வாகும்.

# புளியாணம்

மீன், புளி, மிளகாய் என்பவற்றைக்கொண்டு செய்யப்படும் மரபுணவு 'புளியாணம்' ஆகும். இலங்கையின் கரையோரப்பிராந்தியங்களில் இவ்வகையான உணவுகள் பிரசித்தமானவை.

யாழ்ப்பாணத்து கூழை ஒத்த இவ்வகை உணவுகள் விசேடமான காலங்களில் மீன் அதிகமாகப் படும்போது சமைத்துப் பரிமாறப்படுகின்றன

சோறும் , புளியாணமும் சேர்த்து உறவுகளுடன் பகிர்ந்துண்ணும் ஒன்றாக இப்புளியாணம் காணப்படுகின்றது. ஒவ்வொரு பிராந்தியத்தையும் காலநிலையையும் கருத்தில் கொள்ளும் இவ்வகையான மரபுணவுகள் ஊட்டம் மிக்கவையாக மட்டுமன்றி குறித்த நிலத்தின் அடையாளமாகவும் இருக்கின்றன.









மரபை அறிவதற்கும், கொண்டாடுவதற்கும் ஆவணப்படுத்துவதற்குமாக மேற்கொள்ளப்படும் மரபுரிமை நடையான 'தொன்ம யாத்திரை' சென்ற வாரம் வெருகல்வற்றுறையில் மேற்கொள்ளப்பட்டது.

வெருகலை ஏற்றும் அதனுடைய பிரதான பழம் தமிழ்க்கிராமமான வெருகல்வற்றுறையில் இருக்கும் மரபுரிமைச் சின்னங்களைப் பார்வையிடவும் அவற்றைக் கொண்டாடவும் இந்த யாத்திரை மேற்கொள்ளப்பட்டது. பழைய பெருங் கற்கால காலத்தில் இருந்தே தொன்மை மிக்க சிறப்புடன் [illegible] வந்த நிலத்தின் வரலாறும் அதன் இருப்பும் இன்று வரை முறையாக பதிவு செய்யப்படவோ பேசப்படவோ இல்லை.

[illegible] அந்நிய ஆக்கிரமிப்புகளை [illegible] தமிழர்களின் [illegible] இருப்பையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்புள்ளது. அந்த வகையில் வெருகல்வற்றுறையில் இருக்கும் தேவாலயங்கள், கோயில்கள், கோட்டைகள், பழைய வீடுகள், கல்வெட்டுக்கள், நம்பிக்கைகள், உணவு முறைகள் என நம்முடைய மரபார்ந்த அடையாளங்களை மீள் நினைவூட்டுவதும், பதிவு செய்வதும் இந்த யாத்திரையின் நோக்கமாக இருந்தது.

வரலாற்று மற்றும் கலை வரலாற்று அடிப்படையில் அங்கு ஆய்வுகள் செய்யப்பட்டு, உரை [illegible] 'தொன்ம யாத்திரை' இதழும் அங்கு வெளியிடப்பட்டு [illegible] சேர்க்கப்பட்டது. அங்கு [illegible] தொன்ம [illegible] மரபுரிமைச் சின்னங்கள் [illegible] பார்வையிட்டு [illegible] மக்களுடன் [illegible] அத்துடன் நாரையாளம்பிட்டி தீவில் உள்ள தேவாலயத்தில் ஒன்று கூடி கூத்து பாடல்களைப் பாடினர், அத்துடன் மரபு உணவுகளையும் பகிர்ந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் கேட்கவேண்டும் யாழ் ஒலி



நேர்காணல் : கணபதி சர்வானந்தா

## ஸ்கந்தமூர்த்தி கலாரெஜியுடனான ஒரு சந்திப்பு



கடந்த வாரம் (30.03.2017) வியாழக்கிழமை யாழ். பல்கலைக்கழக கலைப்பீட நுண்கலைப் பிரிவிலுள்ள கவின் கலையரங்கத்தில் தமிழர்களின் பழம்பெரும் வாத்தியக் கருவியான "யாழ்" கையளிப்பு நிகழ்வொன்று நடைபெற்றது. நோர்வே நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற புலம்பெயர் யாழ்ப்பாணத்துத் தமிழரான ஸ்கந்தமூர்த்தி கலாரெஜியின் முயற்சியில் இந்தியாவில் தயாரிக்கப்பட்டு இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட இரண்டு யாழ் இசைக் கருவிகளில் ஒன்று யாழ். பொது நூலகத்துக்கும் மற்றொன்று யாழ். பல்கலைக்கழக கலைப்பீட இசைத்துறைக்கும் வழங்கப்பட்டது. யாழை மீளுருவாக்கம் செய்த கலாரெஜி, வட இலங்கை சங்கீத சபையை உருவாக்கியவர்களுள் ஒருவரான ஸ்கந்தமூர்த்தியின் மகனாவார்.

கடந்த வாரம் யாழ் இசைக் கருவியை ஸ்கந்தமூர்த்தி கலா ரெஜியிடமிருந்து பல்கலைக்கழகத் துணைவேந்தர் பெற்றுக் கொண்டார். கலாரெஜியின் முயற்சிகள் பெறுமதிவாய்ந்தவை. உலகெங்கும் வாழுகின்ற தமிழர்கள் தத்தம் துறை சார்ந்து இங்குள்ளவர்களுக்கு உதவுவது பற்றிச் சிந்திப்பார்களேயானால் நாம் பிறரிடம் கையேந்தாது வாழலாம் என்பதே எமது எண்ணம். குறிப்பாக மரபு சார்ந்த விடயங்களில் அதிகம் கவனமெடுக்க வேணடும் என்பது காலத்தின் தேவையாக உள்ளதை பல சம்பவங்கள் ஞாபகப்படுத்துகின்றன. பலதைத் தெலைத்துவிட்டோம். இருப்பதையாவது பாதுகாப்பாக அடுத்த தலைமுறைக்குக் கொடுக்க வேண்டிய பொறுப்பு எம்மிடமுண்டு. தமிழினத்தின் அடையாளங்களை மீளடையும் எத்தனங்களில் ஒன்றான கலாரெஜியை அண்மையில் சந்தித்தோம். அந்த நேர்காணல் இங்கே தரப்படுகிறது.

**கேள்வி:** பொதுவாக பழைமைகளைப் புதுப்பிப்பது அல்லது பாதுகாப்பது அல்லது அவற்றை அழியாது பேணுவது என்பன போன்ற எண்ணங்கள் எமது சமூகத்தில் ஏற்படுவது குறைவு. அப்படிப்பட்ட இயல்புகளும் முயற்சிகளும் எம்மத்தியில் அருகி வருகின்றன. அந்த நிலையில் ஏன் இத்தகைய முயற்சியைச் செய்ய வேண்டும் என்று விரும்பினீர்கள்?

**பதில்:** நான் எனது பத்தொன்பதாவது வயதில் யாழ். மண்ணை விட்டு அகலவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. அன்று தொட்டு இன்றுவரை நோர்வே நாட்டில் வசித்துவருகிறேன். பொதுவாக வெளிநாடுகளில் மரபைப் பேணுவது என்ற விடயம் பலமாகப் பேசப்படுகின்றதொன்று. அது மட்டுமல்ல, மரபு சார்ந்த விடயம் என்பது அவர்கள் இரத்தத்தில் ஊறிவிட்ட விடயமாகத்தான் நான் கண்டேன். எனவே நானும் அத்தகைய சூழலிலே வசிக்கின்றபடியால் எனக்கும் அத்தகைய பழக்க வழக்கங்கள் தொற்றிக் கொண்டதில் வியப்பில்லை. பல முறை என்னிடம் நானே, "நான் யார்? என்னுடைய அடையாளம் என்ன?" என்ற கேள்விகளைக் கேட்டுக் கொண்டேன். எனது அடையாளம் என்று ஒன்றைத் தேடும்போது எனது அடையாளம் "யாழ்ப்பாணம்" என்று வந்தது. தொடர்ந்த என் தேடல்களில், யாழ்ப்பாணம் என்ற பெயர் வரக் காரணமாயிருந்த வரலாற்றுப் பின்னணியைக் கண்டேன். பாணன் என்ற இசைக் கலைஞன், யாழை வாசித்து யாழ்ப்பாணத்தைப் பரிசாகப் பெற்றான் என்ற கதையால் ஈர்க்கப்பட்டேன். நானும் ஒரு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இசைக் குடும்பத்தில் பிறந்தவனென்றபடியால் இசையின் பெருமையும், அதன் வலிமையும் எனக்குத் தெரியும். அதன் பின்னர் யாழைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை வந்தது. அதற்கான தேடலை தொடங்கியதன் விளைவு இந்த யாழ் கருவியை இன்று நாங்கள் முழுமையாகப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

**கேள்வி:** நாம் அறிந்தவரை யாழ் இசைக் கருவி எங்கேயும் இல்லையென்று தான் எண்ணுகிறோம். அப்படியானால் இந்த யாழைச் செய்வதற்கு முன்னர் அதன் மாதிரியை எப்படிப் பெற்றுக் கொண்டீர்கள்?

**பதில்:** நீங்கள் குறிப்பிடுவது சரியானதொன்று. எனது தேடலைத் தொடங்க முதல் இத்தகைய நரம்புக் கருவிகளை இணையத்தில் தேடினேன். அது தொடர்பான ஆராய்ச்சிகளையும் மேற்கொண்டேன். இதற்காக முதலில் நான் யாழ்ப்பாணம் வந்தேன். ஒரேயொரு கருவி கோட்டையிலிருந்ததாகவும் அது பின்னர் காணாமல் போய்விட்டதாகவும் அறிந்து வருத்தம் அடைந்தேன். பின்னர் கலைப்பீடத்தில் இருக்கலாம் என்ற எதிர்பார்ப்பில் இங்கு வந்தபோதுதான் வீரா என்பவரைச் சந்தித்தேன். தொடர்ந்து றொபேட் மற்றும் சிலருடன் ஏற்பட்ட சந்திப்பில் எனக்குக் கிடைத்த உற்சாகம் தேடலைச் சாதகமாக்கியது. 2000 வருடங்களுக்கு முன்னர் கிங் டாவிட் இத்தகைய கருவியை வைத்திருந்ததாக பைபிளில் கண்டேன்.

இஸ்ரேலுக்குச் சென்றேன். பின்பு மேற்கு ஆபிரிக்காவுக்குச் சென்று "கோறா" என்ற கருவியைப் பார்த்தேன். பின்புதான் இந்தியாவுக்கு வந்தேன். இந்தியாவிலும் ஒரேயொரு கருவி, அதுவும் உருவில் கிட்டத்தட்ட இதே மாதிரியாக இருந்தது. அதையும் அவர்கள் வைத்திருந்த விதமும் என்னை சந்தோசப்படுத்தவில்லை. சென்னை நூதனசாலைக்குச் சென்று அங்குதான் யாழை ஒத்த கருவிகளைப் படம்பிடித்துக் கொண்டேன். பின்பு நோர்வேயிலும் 'ஹாப்' என்ற கருவியொன்று யாழை ஒத்ததாக இருப்பதைப் பார்த்திருக்கிறேன். அங்குள்ள பல்கலைக்கழகத்துடனும் தொடர்பு கொண்டு அது பற்றிய விவரங்களையும் பெற்றுக்கொண்டேன். நான் பார்த்ததையும், கேட்டதையும் வைத்துக் கொண்டு யாழை வரைபடமாக வரைந்தேன். அதற்கு மிகவும் உதவியது யாழ் என்ற நூல். வீரா எனக்கு அதன் போட்டோ பிரதிகளைத் தந்து உதவினார். அதை வைத்துத்தான் யாழ் பற்றிப் பலதைத் தீர்மானித்தேன். பின்பு அதை வடிவமைப்பவரைத் தேடி இந்தியாவில் கிராமம் கிராமமாகச் சென்றேன். கடைசியாக நரம்புக் கருவிகளைப் பழுது பார்ப்பவர் ஒருவரைச் சந்தித்தேன். அவர் கூட ஒத்துக்கொண்டபடி எமக்குச் செய்து தராததால் குறித்தபடி இந்த நிகழ்வை செய்ய முடியாது திரும்பவும் இந்தியா சென்று பலத்த முயற்சியின் பின்னர் இன்று இது கை கூடியிருக்கிறது.

**கேள்வி:** கடுமையான உழைப்பின் பின்னர் யாழைக் கொண்டு வந்து சேர்த்து விட்டீர்கள். அடுத்து யாழ் பற்றி என்ன செய்யப் போகிறீர்கள்? தங்கள் தேடலையும், ஆராய்ச்சியையும் கொண்டு எந்த வகையில் யாழ்.கலைப்பீடத்துக்கு உதவலாம் என்று எண்ணுகிறீர்கள்?

**பதில்:** யாழ் கருவியானது யாழ். மண்ணில் பல்கிப் பெருக வேண்டும் என்று எண்ணுகிறேன். பல ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் காணப்பட்ட அந்தச் சூழலை மீண்டும் கொண்டு வருவதுதான் எனது யாழ் பற்றிய திட்டங்களில் ஒன்று. யாழ் ஒலி இந்த மண்ணில் கேட்கவேண்டும். அதற்காக விசேடமாக இங்கிருந்து நரம்புக்கருவியை இசைக்கும் ஆர்வமுள்ள இருவரை நோர்வேயில் உள்ள பல்கலைக் கழகத்தின் உதவியுடன் அதை இசைக்கக் கற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறேன். அத்துடன் யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் யாழின் உருவாக்கம் பற்றியதொரு பாடத் திட்டத்தை ஆரம்பித்து யாழ் கருவியை யாழ்ப்பாணத்தில் வடிவமைக்ககக் கூடிய செயற்திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும் என்பது பற்றியும் பிரஸ்தாபித்துள்ளேன். மாற்றுத் திறனாளிகளுக்கு இத்தகைய திட்டங்கள் பயனுள்ளதாக அமையும் என்று எண்ணுகிறேன்.

இத்துடன் யாழ். மாநகரத்திலுள்ள மணிக்கூட்டுக் கோபுரத்திலுள்ள மணி ஒவ்வொரு தடவையும் ஒலியெழுப்பும் போதும் "யாழ்" என்ற ஒலிவருமாறு அமைத்துத்தர முடியுமா? என்று ஆணையாளர் என்னைக் கேட்டார். அதையும் செய்ய முயற்சிக்கிறேன். மற்றும் உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் வகையில் யாழையும், அதன் உருவங்களையும் பல வடிவங்களில் வடிவமைத்து காட்சியறைகளில் விற்பனைக்குக் கொண்டு வரவேண்டும். அத்துடன் யாழ்ப்பாணத்தில் யாழ் இசை விழா ஒன்றையும் வருடா வருடம் நடத்தவேண்டும். யாழ் போன்ற நரம்பு இசைக் கருவிகளை இசைக்கின்ற சர்வதேசக் கலைஞர்களை ஒன்றிணைக்கும் ஒரு விழாவாக அதனை வடிவமைக்க வேண்டும் என்பது எனது விருப்பமும் கூட.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயக்கங்கள் இடையே முரண்பாடு


(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு ஏதோ விபரீதம் நிகழப்போகிறது என்பது பலருக்கும் புரிந்துவிட்டது. சராவை பத்திரமாக ஒரு வீட்டுக்குள் அழைத்துச் சென்றனர்.

### பேச்சுக்கு அழைப்பு

கல்வியங்காடு பழம் வீதியில் இருபாலைக்கு அண்மித்ததாகப் புலிகளின் புகைப்படப் பிரிவின் வேலைகள் நடைபெறும் இடம் இருந்தது. அங்கு சந்துரு என்றொரு உறுப்பினர் செல்ல வேண்டியிருந்தது. இந்தியாவிலிருந்து படகில் திரும்பிக் கொண்டிருந்த புலிகளின் படகு மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் தாக்குதல் நடத்தினர். அப்படகில் அப்போதைய மட்டக்களப்பு பொறுப்பாளராக விளங்கியவரும் இருந்தார். இந்தத் தாக்குதலில் அனைவரும் வீரச்சாவடைந்துவிட்டதாகக் கருதப்பட்டது. இவர்கள் அனைவரது புகைப்படங்களையும் வீரவணக்கத்துக்காக வைக்க வேண்டியிருந்தது. தட்டா தெருச்சந்திக்கு அண்மையிலிருந்த புலிகளின் தலைமைப் பணிமனையிலிருந்து புகைப்படப்பிரிவின் இடத்துக்கு சந்துருவைக்கூட்டிக்கொண்டு செல்லுமாறு அப்போது அங்கே வந்த பசீர் என்னும் உறுப்பினர் கோரப்பட்டார். மோட்டார் சைக்கிளில் சென்ற பசீரையும், சந்துருவையும் கல்வியங்காடு ஞான பாஸ்கரோதயா சனசமூக நிலையத்துக்கு அப்பால் நித்தி என்ற ரெலோ உறுப்பினரும் இன்னுமொருவரும் வழி மறித்தனர். அவர்களுக்குப் பசீரைத் தெரியாது . சந்துரு புலிகள் இயக்க உறுப்பினர் எனத்தெரியும்.

"நீங்கள் டைகேர்ஸ்தானே?" என்று கேட்டார் நித்தி, "ஓம்" எனப் பதிலளித்தார் பசீர். "உங்கட ஆக்கள் எங்கட ஆக்களுக்கு அடிச்சிப் போட்டினம். அதைப்பற்றிக் கொஞ்சம் கதைக்க வேணும். உள்ளுக்குள்ளவாங்கோ" என்று தமது முகாமொன்றைக் காட்டினார். அதற்கு "பிரச்சினைகள் பற்றிக் கதைக்க வேணுமெண்டா அதுக்குத் திலீபன்தான் வரவேணும். நான் போய்த் திலீபனுக்குச் சொல்லுறன். நீங்கள் அவரோட கதைச்சு முடிவுகாணுங்கோ" எனத் தெரிவித்தார் பசீர். "நாங்கள் திலீபனுக்குச் சொல்லுறம். அவரும் வரட்டும். முதல்ல நீங்கள் உள்ளுக்கு வாங்கோ" என்ற நித்தியின் குரலில் ஒரு கண்டிப்புத் தெரிந்தது. அங்கிருந்து தப்ப வழி இல்லை. இருவரும் உள்ளே போனால் கிட்டுவுக்குத் தகவல் தெரிவிக்க முடியாது. சந்துரு இளைய உறுப்பினர். அவரை இங்கே விட்டுத்தானும் போக முடியாது. எதாவது விபரீதம் நிகழ்ந்தால் அந்தப் பழி தன்னில் வந்துவிடும். எனவே தான் அங்கே நின்று கொண்டு சந்துருவை விடுவிக்கவும் கிட்டுக்குத் தகவல் அனுப்பவும் உள்ள வழிபற்றி உடனடியாக முடிவெடுத்தார் பசீர். "சரி பிரச்சினை இல்லை. நான் உள்ளுக்க வாறன், ஆனா என்னோட வந்தவருக்கு முக்கியமான வேலை இருக்கு. அவர் போகட்டும் என்ன" என்று சொல்லிவிட்டு அவர்கள் அவர்களின் பதிலை எதிர்பாராமலே சந்துருவிடம் மோட்டார் சைக்கிளைக் கையளித்தார் பசீர்.



### சந்துருவின் சாமர்த்தியம் !

அவர் குறிப்பால் தனக்கு உணர்த்தியதைக் கச்சிதமாகப் புரிந்து கொண்டார் சந்துரு. புகைப்படப் பிரிவுக்குப் போவது போல போனவழியில் அப்படியே போய் இராசபாதை வழியாக கிட்டுவின் முகாமுக்கு விரைந்தார். அவர் வந்த வழியில் திரும்பிச்செல்ல முனைந்திருந்தால் நிலைமை பாதகமாக முடிந்திருக்கும். அவரையும் தடுத்திருப்பார்கள்.

சந்துரு வேகமாகச் சென்றதும் தான் நித்திக்கு நிலைமை புரிந்தது. தான் அவரைப்போக விட்டிருக்கக்கூடாது என உணர்ந்தார். இதேவேளை பசீர் "சிறியண்ணையிட்டச் சொல்லுங்கோ பசீர் வந்திருக்கிறனெண்டு. அவருக்கு என்னைத் தெரியும்" - என்றார். உடனே இருவரை சிறிசபாரத்தினத்திடம் அனுப்பிய நித்தி "நாங்கள் வேற ஒரு இடத்தில இருந்து கதைப்பம் வாங்கோ" எனக் கூறி ஞான பாஸ்கரோதயா நிலையத்துக்கு முன்னால் பருத்தித்துறை வீதியில் போய் முடியும் இடத்திலுள்ள மற்றொரு ரெலோ முகாமுக்குப் பசீரை அழைத்துச் சென்றார். பசீர் நம்பிக்கையோடு அங்கு சென்றார்.

புதிய உறுப்பினர்களிடையே புரிந்துணர்வு இல்லாமல் இருக்கலாம். ஆனால் ஒன்றாக ஒரே இடத்தில் தங்கியிருந்து சாப்பிட்டு, படுத்துறங்கி நட்பாகப் பழகிய சிறி பழைய நட்புக்கு மதிப்புக்கொடுப்பார் எனப் பசீர் நினைத்தார்.

ஏனெனில் கடந்த ஆறு நாள்களுக்கு முன்னதாகத்தான் அவரது திருமணவைபவம் நிகழ்ந்தது. புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்களுக்கு நடைபெறும் இரண்டாவது திருமணம் இது. ஏற்கெனவே பிரபாகரனின் திருமணம் தமிழகத்தில் நிகழ்ந்தது.

நாட்டில் நடைபெறும் திருமணம் என்ற வகையில் முக்கியமான இயக்கங்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார் பசீர் . தன்னுடன் நன்றாகப் பழகியவர் என்ற வகையில் சிறியரை நேரடியாக அழைக்கக் கட்டைப்பிராயிலுள்ள முகாமொன்றுக்குச் சென்றிருந்தார். அவருடன் கூடவே சிறியரின் ஒன்றுவிட்ட சகோதரனும் போயிருந்தார். அப்போது சிறியர் அங்கு இருக்கவில்லை. முகாமில் இருந்தவர்களிடம் விவரத்தைச் சொல்லிவிட்டு வந்தனர் இருவரும்.

அன்று பிற்பகல் தனது ஒன்றுவிட்ட சகோதரனைச் சந்தித்த சிறியர் திருமணஅழைப்புத் தனக்குக் கிடைத்ததாகவும், தான் கட்டாயம் அதில் கலந்து கொள்ளப் போவதாகவும் தெரிவித்திருந்தார். ஆனால் என்ன முக்கிய வேலையோ அவரால் கலந்து கொள்ள முடியாமற் போயிருந்தது. எனவே இப்படியான சந்தர்ப்பத்தில் அவர் தன்னை அழைத்து உரையாடுவார் அல்லது தானிருக்கும் இடத்துக்கு வந்து சந்திப்பார் எனக்காத்திருந்தார் பசீர் .

இதேவேளை - சந்துரு கிட்டுவின் முகாமுக்குச் சென்றபோது அங்கே ஒரே அமளி - கல்வியங்காடு பிரதேசப் பொறுப்பாளர் முரளியை ரெலோவினர் கடத்திவிட்டதாகப் பரபரப்பாகப் பேசிக்கொண்டிருந்தனர். எந்த நிலைக்கும் ஆயத்தமாகப் புறப்படும் நிலையில் அவர்கள் இருந்தனர்.

### சீற்றமுற்ற கிட்டு

கிட்டுவிடம் போன சந்துரு "காக்காண்ணையை(பசீர்) ரெலோ புடிச்சிட்டாங்கள்" என்று சொன்னதும் கோபத்தின் உச்சிக்கே போய்விட்டார் அவர். ஏனெனில் பசீரின் திருமண



ஏற்பாடு குறித்து பிரபாகரனிடம்பேசி அனுமதி வாங்கியவர் அவர். சகல விடயங்களையும் (புகைப்படம் முதலானவை ) அவரே ஒழுங்கு படுத்தியவர். இந்தத் திருமணத்தில் ஒருசாட்சியாகவும் கையொப்பமிட்டவர். எனவே இனித் தாமதிக்க நேரமில்லை என முடிவெடுத்தார். ஒன்றுக்கும் மேற்பட்ட வழிகளில் ரெலோவினருடன் தொடர்புகொள்ள முடிவெடுத்தார். அந்தப் பதற்றமான சூழலிலும் தொடர்பு கொள்பவர் பொருத்தமான ஆளாக இருக்குமாறு பார்த்துக் கொண்டார். கட்டைப்பிராய்க்கு அனுப்பிய அணியினரிடம் அரை மணி நேரத்துக்குள் பசீர், முரளி இருவரையும் விடுதலை செய்யாவிட்டால் நேரடியாக மோதுவோம்" என எச்சரிக்கை விடுக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தது. இதேவேளை எவராவது ஆயுதங்களுடன் வந்தால் சுடுமாறு அங்குள்ள ஒரு மாடிவீட்டில் நின்ற தமது உறுப்பினர்களுக்கு ரெலோவினர் உத்தரவிட்டிருந்தனர்.

இதெல்லாம் தெரியாமல் சிறிசபாரத்தினத்திடம் சென்றவர்கள் வரும்வரை காத்துக் கொண்டிருந்தார் பசீர். அவர்கள் இருவரும் வந்ததும் அந்த முகாமுக்குப் பொறுப்பானவரைக் கூப்பிட்டு ஏதோ சொன்னார்கள். இதனைத் தொடர்ந்து ரெலோ உறுப்பினர் கமல் என்பவர் பிரசுரிக்க முடியாத "செந்தமிழில்" தனது அதிகாரத்தைக் காட்ட முனைந்தார். அதுவரை "எனக்கு யாழ்ப்பாணத்தில் நடந்த விடயங்கள் தெரியாது. திருமணம் முடிப்பதற்காக இங்கு வந்து சிலநாள்கள்தான் ஆகிறது" என்று பசீர் சொல்லிக்கொண்டிருந்தார். கமலின் விசாரணைத்தொனி மாற்றமடைந்தது. அடிகளும் விழத்தொடங்கின. அதுவரை சிறிசபாரத்தினம் மீது பசீர் கொண்டிருந்த நம்பிக்கை ஒரேயடியாகச் சரிந்து விழுந்தது.

ஒன்றாகச் சாப்பிட்டு உரையாடிய அந்த நாட்கள் நினைவுக்கு வந்தன. அந்த நேரத்தில் "வந்திட்டாங்கள்" என்று கூறியபடி ஒருவர். ஓடிவந்தார். தொடர்ந்து உத்தரவுகள் தூள் பறந்தன "நான் சொல்லும் வரை ஒருவரும் சுடக் கூடாது" எனப் பொறுப்பாளர் கட்டளை இட்டார். எங்கெங்கே நிலையெடுக்க வேண்டுமென அவரது வாய் உத்தரவிட்டுக் கொண்டிருந்தது. அவ்வேளையில் ஓர் அறையிலிருந்து முரளி இழுத்துவரப்பட்டார் . முரளி - பசீர் இருவருக்கும் ஒருவரை ஒருவர் பார்த்ததில் அதிர்ச்சி. இருவருக்கும் மற்றவர் பிடிபட்டது அதுவரை தெரியவில்லை. திடீரெனக் கொஞ்சத் தூரத்தில் துப்பாக்கிவேட்டுச் சத்தங்கள் கேட்டன. அவ்வளவுதான் நிலையெடுத்திருந்தவர்களைக் காணவில்லை. "இவங்கள் ரெண்டுபேரையும் போட்டால் சரிவரும்" என்று சொல்லிவிட்டு முரளியை பசீர் நிற்கும் பக்கம் இழுத்துக்கொண்டு வந்தார் ஒருவர்- அப்போது வேறொருவர் [illegible]களை வைச்சுத் தப்புவோம்" என்றார். அதை மற்றவர்களும் ஏற்றுக் கொண்டது போல்தெரிந்தது.

பிழையான நேரத்தில் பிழையான முடிவை எடுத்துவிட்டது ரெலோ. ஓரிரு நாள்களில் பருத்தித்துறை இராணுவ முகாம் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்தனர் புலிகள். மன்னார் - வன்னியிலிருந்து ஏறத்தாழ எல்லாப்புலிகளும் இத்தாக்குதலுக்காக யாழ்ப்பாணம் வந்திருந்த வேளையில் தான் புலிகளுக்குப் பாடம் படிப்பிக்க வேண்டுமென்று முடிவெடுத்துவிட்டனர் ரெலோவினர். இந்நிலையில் புலிகளின் சகல அணிகளும் கல்வியங்காட்டை முற்றுகையிட்டன. அப்போது தான் நிலைமையின் விபரீதம் புரிந்தது ரெலோவினருக்கு. பசீரையும் , முரளியையும் இழுத்துக்கொண்டு ஒவ்வொரு வீடாகத் திரிந்தனர். இடை இடையே அடியும் விழுந்தது அவர்களுக்கு. "அவங்களை விடுங்கோடா " என்று சத்தமிட்டபடி சராவின் சகோதரிகள் பின்னால் ஓடிவந்தனர். அவர்களை நோக்கியும் "செந்தமிழால்" வீரம் காட்டினர் சிலர். முற்றுகை மெல்ல மெல்ல இறுகியது. இனித் தப்புவது கடினம் என்ற நிலைமை அவர்களுக்கு "தமிழீழம் எண்டது சாத்தியமில்லை ஏலுமானவரைக்கும் இவங்களோட அடிபடுவம்" என்று அச்சமயத்தில் சிறிசபாரத்தினம் கூறியதாகப் பின்னர் ஒரு சமயம் ரெலோ உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார்.

எந்த இயக்கமாக இருந்தாலும் தமிழீழம் என்ற கனவுடனேயே தொடர்பு கிடைத்த இயக்கங்களில் இணைந்து கொண்டனர் அப்போதைய இளைஞர்கள். "தமிழீழம் சாத்தியமில்லை" என்று சொன்னதும் இயல்பாகவே எதிர்த்துப் போராடும் குணம் அவர்களை விட்டுப் போய்விடும் என்று கணிக்கத்தவறிவிட்டார் சிறிசபாரத்தினம். தம்மைத் தடுத்து வைத்திருந்த ரெலோ உறுப்பினர்களிடம் " இந்தச் சண்டையை நிறுத்த எங்களால முடியும். எங்கள் இரண்டு பேரையும் பொதுமக்களோடு விடுங்கோ. நாங்கள் போய் சொன்னால் கிட்டு சண்டையை நிற்பாட்டுவார். நேரம் போனால் பெருமளவு உயிரிழப்பு ஏற்படும்" எனக் கூறினார் பசீர். மட்டக்களப்பில் புளொட் - ஈ.பி.ஆர்.எல்.எவ் மற்றும் ஈரோஸ் -புளொட் இயக்கங்களிடையே நிகழ்ந்த பிரச்சினைகளின்போது சமரசத்தில் ஈடுபட்ட அனுபவம் அவருக்கிருக்கிறது. அதே போன்று தமிழீழப் பாதுகாப்புப் பேரவை உறுப்பினர்களிடையே நிகழ்ந்த சிறு பிரச்சினையை எவருக்கும் பாதகமில்லாமல் முடித்ததும் குறிப்பிடத்தக்கது. பழுகாமத்தில் புளொட் இயக்கத்தவர்களிடையே பிரச்சினை ஏற்பட்ட போது ஏற்கெனவே தன்னிடமிருந்து பெற்ற சயனைட்டை நவரத்தினம் என்ற புளொட் உறுப்பினர் ஒருவர் அருந்தி உயிரிழந்த சம்பவம் அவருக்குப் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தொகுப்பு :
சி.விமலன்

மிஸ் - மர்ஸி ஜோடியை தோற்கடித்த பின் மேடையிலேயே மோதிரம் மாற்றிக்கொள்ளும் ஜோன் சீனா - நிக்கி பெல்லா ஜோடி




# ட்றெசில்மேனியா - 2017 ஸ்பெஷல்




கோல்ட் பேர்க்கை வீழ்த்தி பிரபஞ்ச சம்பியன் பட்டத்தை வென்ற புறொக் லெஸ்னர்



கிறிஸ்ஜெறிக்கோவை வீழ்த்தி அமெரிக்க சம்பியன் பட்டத்தை வென்ற கெவின் ஓவன்ஸ்



சார்ல்ற் பிளயரை தோற்கடித்து மகளிர் சம்பியன் பட்டத்தை வென்ற பெய்லி




ஏ.ஜே.ஸ்ரைல்ஸிட மிருந்து தோல்வியைத் தடுப்பதற்காக ஷேன் மக்மகன் இப்படியா செய்வது?




டீன் அம்புறோஸ் எதிர் பரோன் கோர்பின்



றெண்டி ஓர்றன், பிறே யார்ட்டை வீழ்த்தி 13 ஆவது உலக சம்பியன் பட்டம்வென்ற போது



நீண்ட இடைவேளையின் பின் களம் திரும்பிய ஜெவ் ஹார்டி மற்றும் மட் ஹார்டி இணைந்து சீமஸ் - சிசாரோ ஜோடியை வென்ற தருணத்தில்



அண்டர்ரேக்கரின் றெசிலிங் வாழ்க்கை முடிவுக்கு வந்த தருணம்



றோமன் றெயின்ஸ் உடனான தோல்வியின் பின் றெசிலிங் உலகில் இருந்து தான் விடைபெறப்போவதை உணர்த்தும் விதமாக அண்டர் ரேக்கர் மேடையிலேயே கழற்றி வைத்துவிட்டுச் அவரது கையுறை, தொப்பி, கோர்ட் என்பன.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 08.[illegible].2017 அன்று 107, [illegible] வீதி, [illegible] - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org